Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00


தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 சித்திரை 24 செவ்வாய்க்கிழமை (07.05.2013) பக்கங்கள் 20 ஓசை – 219
















# முஸ்லிம் மக்களை வெளியேற்றி இன சுத்திகரிப்பு செய்தது தவறு

## தமிழ்த் தரப்பை ஏற்கக் கோருகிறார் சுமந்திரன்



(மட்டக்களப்பு)

வடமாகாணத்திலிருந்து முஸ்லிம்களை வெளியேற்றி இன சுத்திகரிப்பு செய்தது தவறு என்பதை ஏற்றுக்கொள்ளும் பட்சத்திலேயே தமிழ்த் தரப்பு மற்றவர்களிடம் நியாயம் கோர முடியுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு வந்தாறுமூலையில் இலங்கை தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகர் தந்தை செல்வாவின் 36 ஆவது நினைவு தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவை

19 ஆம் பக்கம் பார்க்க

### அசாத் சாலி வைத்தியசாலையில்

(கொழும்பு)

தடுப்புக்காவலில் இருக்கும் கொழும்பு மாநகர சபை முன்னாள் பிரதி மேயர் அஸாத் சாலி மீண்டும் உடல் நிலை பாதிப்புக் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவர் ஏற்கனவே கடந்த வெள்ளிக்கிழமை உடல்நலக் குறைவு காரணமாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைகளுக்குப் பின்னர் நேற்று முன்தினம் வைத்தியசாலையிலிருந்து வெளியேறியிருந்தார்.

19 ஆம் பக்கம் பார்க்க

# சிவில் சமூகத்துடனான உறவை அரசாங்கம் பேணுவது அவசியம்

## அமெரிக்கா தெரிவிப்பு

(கொழும்பு)

சிவில் சமூகத்துடன் அரசாங்கம் அர்த்தமுள்ள வகையில் உறவுகளைப் பேண வேண்டுமென அமெரிக்கா தெரிவித்துள்ளது. குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தல் போன்றன தொடர்பில் இன்னமும் பல விடயங்கள் செய்ய வேண்டியுள்ளதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மிச்சல் சிஸன் தெரிவித்துள்ளார்.

டுவிட்டர் சமூக இணையத் தளத்தின் ஊடாக பொதுமக்களினால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அமெரிக்கத் தூதுவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். கேள்விகளுக்கு அவர் தொடர்ந்து பதிலளிக்கையில்,

யுத்த வலயத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள உட்கட்டுமான வசதி மேம்பாடு, நிலக்கண்ணி



வெடி அகற்றுதல் மற்றும் இடம் பெயர் மக்கள் மீள்குடியேற்றம் போன்றன தொடர்பில் அரசாங்கத்தின் நடவடிக்கைகளை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அறிக்கைப் பரிந்துரைகள் வரவேற்கப்பட வேண்டியவை.

19 ஆம் பக்கம் பார்க்க

# அசாத் சாலிக்கு எதிராக 18 குற்றச்சாட்டுக்கள்

(கொழும்பு)

தமிழகத்தில் சென்னையில் வைத்து ஜூனியர் விகடன் சஞ்சிகைக்கு கொடுத்த பேட்டி மூலம், அசாத் சாலி இன்னொரு நாட்டில் வைத்து இலங்கைக்கு எதிராக கருத்துவெளியிட்டுள்ளதாகவும் அதனால் இலங்கையிலுள்ள முஸ்லிம் மக்களுக்கும் அவர் அவதூறு விளைவித்துள்ளதாகவும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஊடக மத்திய நிலையத்தின் இயக்குநர் லக்ஷ்மன் ஹுலுகல்ல தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அதேவேளை, அசாத் சாலிக்கு 19 ஆம் பக்கம் பார்க்க

# இந்திய மீனவர்களின் வழக்கு மேல் நீதிமன்றுக்கு மாற்றம்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு கடற்பரப்பில் கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 26 பேரின் வழக்கு விசாரணைகள் யாழ். மேல் நீதிமன்றிற்கு மாற்றப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 6 ஆம் திகதி நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட குறித்த 26 மீனவர்களும் ஊர்காவற்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்தி விளக்கமறியில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையிலேயே இந்த வழக்கு நேற்று ஊர்காவற்துறை நீதிமன்றில் நீதிபதி ஆர்.மகேந்திரராஜாவினால் விசாரணைக்கு

19 ஆம் பக்கம் பார்க்க

# முள்ளியவளை காணிப்பிரச்சினை; சுமூகமான தீர்வு காணப்படும்

## அமைச்சர் ஹக்கீம் உறுதியளிப்பு

(முல்லைத்தீவு)

முள்ளியவளையில் ஏற்பட்டுள்ள காணிப் பிரச்சினைக்கு சுமுகமாகத் தீர்வு காணப்படும் என்பதுடன் எந்தவொரு சமூகத்திற்கும் பாதிப்பில்லாத வகையில் சுமுகமாகவும் இணக்கமாகவும் தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

முல்லைத்தீவு பிரதேசத்திற்கு நேற்றைய தினம் விஜயம் செய்த நீதி அமைச்சர் ஹக்கீம், பிரஸ்தாப காணிப்பிரச்சினை தொடர்பில் முள்ளியவளை சன சமூக நிலையத்தில் நடந்த மக்கள் சந்திப்பிலும் கலந்துகொண்டார்.

19 ஆம் பக்கம் பார்க்க

# சிசுவின் சடலம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் 4 மாத சிசு ஒன்றின் சட்லம் நேற்று முன்தினம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மட்டுவில் கிழக்கு மட்டுவிலைச் சேர்ந்த 22 வயதுடைய தாய் ஒருவர் நேற்று முன்தினம் அவரது வீட்டில் காலை 9.00 மணியளவில் பிரசவித்த சிசுவே

19 ஆம் பக்கம் பார்க்க

உள்ளே...
அளவையியலும்
விஞ்ஞான
முறையும்

# 'நோத்சீ' நிறுவனத்தின் வினைத்திறன் அதிகரிப்பு

## ஆரம்பித்து வைத்தார் இந்தியத் தூதுவர்

(யாழ்ப்பாணம்)

இந்திய அரசாங்கத்தின் 166 மில்லியன் ரூபா நிதியுதவியில் குருநகர் நோத்சீ நிறுவன வலை உற்பத்தித் தொழிற்சாலையின் வினைத்திறனை மேம்படுத்தும் திட்டத்தை விடைபெறும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே காந்தா நேற்று சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்துவைத்துள்ளார்.

நேற்று மு.ப. 11.00 மணிக்கு இந்த நிகழ்வில் கலந்துகொள்வதற்காக குருநகர் நோத்சீ நிறுவனத்திற்கு வருகைதந்த அசோக் கே காந்தாவை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, நோத்சீ நிறுவனத்தின் பணிப்பாளர் ஆர்.பரந்தாமன் ஆகியோர் வரவேற்று நிறுவனத்திற்கு அழைத்து வந்தனர்.




அங்கு இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியில் பொருத்தப்பட்டிருக்கும் வலை உற்பத்தி இயந்திர உதவித் திட்டம் குறித்த பெயர்ப்பலகையை அசோக் கே காந்தா

19 ஆம் பக்கம் பார்க்க

# இலங்கை எப்போதும் எமக்கு நண்பன்

## வாஞ்சையுடன் கூறுகிறார் இந்தியத் தூதுவர்



(யாழ்ப்பாணம்)

இலங்கை நட்புறவு நாடு என்பதனால் இந்தியா அதற்கு எல்லாவித உதவிகளையும் செய்யத் தயாராக உள்ளதென விடைபெறும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே காந்தா தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். குருநகரில் அமைந்துள்ள நோத் சீ நிறுவனத்தில் இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ் பொருத்தப்பட்டிருக்கும் வலை உற்பத்தி இயந்திரங்களின் செயற்பாடுகளை ஆரம்பித்துவைக்கும் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத்தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் இந்த மீன்வலை உற்பத்தித் தொழிற்சாலைக்கு நன்கொடையாக இயந்திர உபகரணங்களை வழங்க கிடைத்த சந்தர்ப்பத்தை இட்டு தான் மகிழ்ச்சியடைகிறேன். இந்த உதவியின் மூலம் தொழிற்சாலையின் உற்பத்தியை ஐந்து மடங்காக அதிகரிக்க உதவியதையிட்டும் மகிழ்ச்சியடைகிறேன்.

வடமாகாண மீன்பிடித் தொழிலாளர்களுக்கு இவ் உதவி ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. இந்திய உயர்ஸ்தானிகராக நான் பதவி ஏற்றது முதல், இருபது தடவைகள் வடபகுதிக்குப் பயணம் மேற்கொண்டுள்ளேன். இந்தப் பயணமே எனது இறுதிச் சந்தர்ப்பமாக அமைந்துள்ளது. நான் இந்தியத் தூதுவராகப் பதவியேற்றது முதல் வடபகுதி மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும் அவர்களைச் சொந்த இடங்களில் குடியேற்றவும் என்ன செய்யவேண்டும் என்று சிரத்தை எடுத்துச் செய்து வந்தேன்.

அத்துடன் வடக்கில் இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ் 36 மிகப்பெரிய திட்டங்களை அமுல்படுத்தப்பட்டுள்ளன. இதற்கு 17 பில்லியன் இலங்கை ரூபா செலவிடப்பட்டுள்ளது.

இதனைவிட மேலும் 26 திட்டங்கள் கொள்கையளவில் ஆலோசிக்கப்பட்டுள்ளன. இவற்றில் வீட்டுத்திட்டம், விவசாயம், ரயில்பாதை புனரமைப்பு, சுகாதாரம், பாடசாலை, வைத்தியசாலைப் புனரமைப்புகள், மீன்பிடி என்பன அடங்குகின்றன. தெரிவித்த அவர் இவ் இந்திய உதவித்திட்டங்களை நல்ல முறையில் வடபகுதியில் செயற்படுத்துவதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திர சிறி ஆகியோரும் வடமாகாண மக்களும் தந்த ஆதரவுக்கும் உதவிக்கும் தமது நன்றிகளையும் தெரிவித்துக்கொண்டார்.

மேலும் தாம் இம்மாத இறுதியில் புதுடில்லி சென்று இந்திய வெளியுறவுத்துறைச் செயலாளராகப் பதவியேற்கவுள்ளதாகவும் தெரிவித்தார். (பா)

# பாடசாலைகளுக்கு தொலைக்காட்சிப் பெட்டிகள்

கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம் மற்றும் டயலோக் பி.எல்.சி. என்பன ஒன்றிணைந்து ஆயிரம் பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ள பாடசாலைகளுக்குத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கி வருகின்றன.

மாணவர்கள் ''நெனச'' தொலைக்காட்சி கல்வி நிகழ்ச்சிகளைப் பார்வையிடுவதற்கு வசதியாகவே 32 இஞ்சி எல்.சி.டி. தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் தெரிவு செய்யப்பட்ட 66 பாடசாலைகளுக்கு மேற்படி தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை கோப்பாய் தேசியக் கல்வியல் கல்லூரியில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் ஆகியோர் கலந்துகொண்டு பாடசாலை அதிபர்களிடம் தொலைக்காட்சிகளைக் கையளித்தனர்.(10)

# மணவாளக்கோல விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை வளாகத்திலுள்ள சாமுண்டிகாதேவி சமேத ஸ்ரீ சிவஞான வைரவ சுவாமி ஆலய மணவாளக் கோல அஸ்டோத்திர சத சங்காபிஷேகம் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இதில் காலை 8.00 மணிக்கு சங்காபிஷேகமும் 9.00 மணிக்கு விசேட பூசையும் வசந்தமண்டப பூசையும் தொடர்ந்து தெருவீதியுலா வரும் காட்சியும் இடம்பெறவுள்ளது.



நீண்டகாலமாக கவனிப்பாரற்று கிடக்கும் முள்ளியவளை நாவற்காட்டு வீதி பாலம். உரிய அதிகாரிகள் கவனம் எடுக்குமாறு மக்கள் கோரிக்கை (125)

# மரத்துடன் மோதியது பஸ் ஆறு பேர் படுகாயம்

வவுனியா, பம்பைமடு பிரதேசத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற வாகன விபத்தில் 6 பேர் படுகாயமடைந்துள்ளனர். மன்னாரிலிருந்து வவுனியா நோக்கி வந்துகொண்டிருந்த தனியார் பஸ் வண்டி ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து மரம் ஒன்றுடன் மோதி விபத்திற்குள்ளாகியுள்ளது.

காயமடைந்தவர்கள் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருவதாக வைத்தியசாலைத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

# கேள்விக்குப் பதிலளிக்க தவறினார் தவிசாளர்

## மூண்டது சொற்போர்

வலிகாமம் தென்.மேற்கு பிரதேசசபைச் செயலாளரின் அலுவலகத்தினுள் அத்துமீறிச் சென்ற சபை உறுப்பினர்கள் அவரை அச்சுறுத்தும் வகையில் நடந்துகொண்டுள்ளனர்.

கடந்த 30 ஆம் திகதி பிரதேச சபையின் கூட்டம் நடைபெற்றது. இதன்போது தாம் கேட்ட கேள்விக்கு செயலாளர் பதிலளிக்கவில்லை எனத் தெரிவித்தே இவர்கள் இவ்வாறு நடந்துகொண்டனர். ஊழியர்களின் சம்பளம் தொடர்பான துண்டுப்பிரசுரம் பிரதேச சபையில் ஒட்டப்பட்டது. தொடர்பாகவே இவர்கள் கேள்வி எழுப்பியதாகத் தெரியவருகிறது.

உபதவிசாளர் எஸ்.சிவகுமார், உறுப்பினர்களான அருட்குமார், ஜோன் ஜிப்றிக்கோ, தங்கராசா, குமணன் ஆகியோரே இவ்வாறு செயற்பட்டனர். இதனைக் கண்ட வாகன சாரதி அவர்களிடம் இதற்கு நியாயம் கேட்கமுற்பட்டார். அப்போது உறுப்பினர்களும் சாரதியும் வாக்குவாதப்பட்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக பிரதேசசபை செயலாளரினால் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதேவேளை நியாயம் கேட்க முற்பட்ட சாரதி தங்களை தாக்கியதாகக் குறித்த உறுப்பினர் ஒருவரால் சாரதிக்கு எதிராகவும் பொலிஸில் முறைப்பாடு செய்யபட்டுள்ளது. (54)

# இடத்துக்கு இடம் மாறுபடும் பாண் விலை யாழ். குடாவில் தினசரி அதிசயம்

சில வெதுப்பகங்கள் மற்றும் பாண் விற்பனை நிலையங்களில் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் பார்க்கக் கூடிய விலையில் பாண் விற்பனை செய்யப்படுவதாகப் பொதுமக்கள் பலரினால் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

450 கிராம் நிறையுள்ள பாண் 58 ரூபாவுக்கே விற்பனை செய்யப்படல் வேண்டும் என்பது ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டு நடைமுறையில் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் ஒரு இறாத்தல் பாண் எனக் கேட்கும்போது 50 சதம் பெறுமதியான சொப்பின் பாக்குக்குள் அதனை வைத்து நுகர்வோரிடம் 60 ரூபா பணம் பெறப்படுகின்றது. இரண்டு இறாத்தல் பாண் கேட்கும்போது ஒரு ரூபா பெறுமதியான பாக்குக்குள்வைத்து இரண்டு இறாத்தல் பாண் கொடுத்துவிட்டு 120 ரூபா பணம் அறவிடப்படுகிறது. இந்த வகையில் பாண் நுகர்வோர் ஒருவர் ஒரு இறாத்தல் பாணுக்கு ஒரு ரூபா ஐம்பது சதத்தையும், இரண்டு இறாத்தல் பாணுக்கு மூன்று ரூபாவையும் கூடுதலாகச் செலுத்தவேண்டி உள்ளது.

சில வெதுப்பகங்களில் பாணின் நிறையும் 450 கிராமாக இல்லை. றோஸ் பாண் எனச் சொல்லப்படும் வாட்டிய பாண் கால் இறாத்தல் எனக் கூறி விற்கப்படுகின்றது. ஆனால் நான்கு கால் இறாத்தல் பாணை சேர்த்து நிறைபோட்டுப் பார்த்தால் 450 கிராமாக அது இல்லை. பத்து ரூபாவுக்கும் பாண் தயாரித்து விற்பனையில் உள்ளது.

பாணின் பாவனை யாழ். மாவட்டத்தில் அதிகளவில் உள்ளது. உத்தியோகத்தர்கள், தொழிலாளர்கள், மாணவர்கள் என அவசரம் கருதி பாணைப் பாவிப்பதில அவர்கள் முன்னிலையில் காணப்படுகின்றனர்.

பாணின் விலை, நிறை, தரம் என்பவற்றில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்துவதுடன் வெதுப்பகங்கள், விற்பனை நிலையங்களை அடிக்கடி திடீர் பரிசோதனை நடவடிக்கைக்கு உட்படுத்த வேண்டும் எனப் பொது மக்களினால் வேண்டுகோள் விடுககப்பட்டுள்ளது. (137)



வடமாகாண வங்கியாளர் ஓய்வூதியர் நலன்புரிச் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் ரி.கே.ஆனந்தராசா தலைமையில் நடைபெற்றபோது மங்கள விளக்கை திருமதி ஜே.பத்மநாதன் ஏற்றுவதையும், வரவேற்பு நடனத்தையும், நிகழ்வில் கலந்துகொண்ட வங்கியாளர், ஓய்வூதியர்களையும் காணலாம். (27)

# கல்வி வளர்ச்சியில் தேசிய ரீதியில் கிளிநொச்சி மாவட்டம் முதலிடம்

கடந்தாண்டின் பெறுபேறுகளின் படி கல்வி வளர்ச்சி வீதத்தில் கிளிநொச்சி மாவட்டம் 11.84 வீதத்தினை வெளிப்படுத்தி தேசிய ரீதியில் முதலிடத்தில் காணப்படுகிறது

பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அண்மையில் வெளியிடப்பட்ட தகவல்களின் படியே இந்தாண்டு கல்வி வளர்ச்சியில் கிளிநொச்சி மாவட்டம் இலங்கையில் முதல் நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஆண்டு வெளியிடப்பட்ட கல்வி வளர்ச்சி புள்ளிவிபரங்களின் படி வட மாகாணத்தில் கிளிநொச்சி மாவட்டம் 11.84 வீதமாகவும்,யாழ்ப்பாணம் 05 வீதமாகவும்,வவுனியா 06 வீதமாகவும், முல்லைத்தீவு 05 வீதமாகவும்,மன்னார் 02 வீதமாகவும் கல்வி வளர்ச்சி நிலையினை கொண்டுள்ளது கொழும்பு மாவட்டம் 01 வீத வளர்ச்சியினை கொண் டுள்ளமை குறிப்பிடத்தக்கது

முற்றாக அழிந்துபோன, அனைத்து செயற்பாடுகளும் பூச்சியத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்ட, மீள்குடியேறிய மாவட்டமான கிளிநொச்சி அண்மையில் வெளியிடப்பட்ட 2011,2012 ஆண்டுக்கான கல்வி வளர்ச்சியில் 11.84 வீதத்தினை எட்டி தேசிய மட்டத்தில் இவ்வருடம் முதல் நிலையில் இருப்பது சாதனையான விடயமாகக் கருதப்படுவதாக கல்வியலாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்

ஒரு மீள்குடியேறிய மாவட்டம் கடந்த மூன்றரை ஆண்டுகளில் இந்த வருடம் கல்வி வளர்ச்சி நிலையில் முதலிடத்தை பெற்றமை இந்த மாவட்டம் கல்விக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துவதாகவும் குறிப்பாக கிளிநொச்சி மாவட்ட பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் கல்விக்கு அதிகளவு முக்கியத்துவம் கொடுக்கின்றமையே இதற்கான முதன்மை காரணமாக விளங்கமுடியும் எனவும் சுட்டிக்காட்டுகின்றனர். (29)

# இளைஞர் நாடாளுமன்றம்; உறுப்பினர் தெரிவு

(சங்கானை)

சங்கானைப் பிரதேச செயலக இளைஞர் நாடாளுமன்றத்துக்கான தேர்தல் கடந்த சனிக்கிழமை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இத்தேர்தல் காலை 8 மணியிலிருந்து மாலை 4 மணி வரை வாக்காளர் வாக்களிப்பு இடம்பெற்றது. இத்தேர்தலில் 3 போட்டியாளர்கள் போட்டியிட்டனர்.


இதில் அராலி நிலாவொளி இளைஞர் கழகத்தின் சார்பில் போட்டியிட்ட ஜோதிவேல் கோர்டன் 50 வீத அதிக வாக்குகளைப் பெற்று சங்கானைப் பிரதேச செயலக நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

# எள்ளுப் பயிர்ச்செய்கையில் அச்சுவேலி விவசாயிகள் ஆர்வம்

கதிரிப்பாய், தம்பாலை, பத்தமேனி, வளலாய் போன்ற பகுதிகளில் விவசாயிகளால் செய்கை பண்ணப்பட்ட பயறு, எள்ளு போன்ற பயிர்கள் அறுவடை நிலைக்கு வந்துள்ளதாக விவசாயிகளால் தெரிவிக்கப்படுகிறது.

எள்ளுப்பயிர்ச்செய்கையை மேற்கொள்வதால் தமக்கு நல்லெண்ணெய்க்குத் தட்டுப்பாடில்லை எனவும், இதனால் தாம் நன்மையடைந்துள்ளதாகவும், விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

# அஸ்மா நோய் பற்றி மக்களுக்கான விழிப்புணர்வு





■Dr.சி.எஸ்.யமுனானந்தா

காசநோய்க் கட்டுப்பாட்டில் நடைமுறை சுவாச ஆரோக்கிய அணுகுமுறை Pal Approach இன்றியமையாதது. இன்றைய சமூகத்தில் 20 வீதம் அஸ்மா நோயினால் பாதிக்கப்படுகின்றனர். எனவே ஆஸ்மா நோய் பற்றி சமூக விழிப்புணர்வு சுவாசநோய் தொடர்பான சிகிச்சையில் சிறந்த பிரதிபலனை வழங்கும் அந்த வகையில் இன்று உலக அஸ்மா தினமாகும். இத்தினத்தில் அஸ்மா பற்றி சமூக மட்டத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துவது அவசியமானதாகும்.

**அஸ்மா நோய் என்றால் என்ன?**

அஸ்மா என்பது சுவாசத்தொகுதியுடன் தொடர்புடைய ஒரு நோயாகும். இந்த நோய் எமது உள்ளெடுக்கும் வெளிவிடும் சுவாச செயற்பாட்டில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. சுவாசக் குழாயிலும் அழற்சியை உண்டுபண்ணுகிறது. ஆகவே அஸ்மாவினால் பாதிக்கப்பட்டவர்கள் சுவாசிக்கக் கஷ்டப்படுவார்கள். அவர்களுக்கு இளைப்பு ஏற்படும். இந்த நோய் சிறுபிள்ளைகளுக்கு இலகுவில் ஏற்படுகிறது. இதனால் உறக்கம் மாத்திரமின்றி கல்வி நடவடிக்கைகளுக்கும் பாதிக்கப்படலாம்.

**அஸ்மா நோயின் பொதுவான அறிகுறிகள்.**

இருமல் (பெரும்பாலும் இரவில்) இளைப்பு, நெஞ்சில் அழுத்த உணர்வு, நெஞ்சுக்குள் உள் மூச்சு ஒலி, அஸ்மா நோய் ஒருவரின் வயதையோ அல்லது அவரது சமூக அந்தஸ்தையோ பார்ப்பதில்லை. அது எவருக்கும் வரலாம். சில சமயங்களில் நோய் கடுமையாகவும் தாக்கக்கூடும் எனவே இந்த நோய் குறித்து நாம் அலட்சியமாக இருக்க முடியாது. அஸ்மா ஒரு நீண்டகால நோயாக இருந்தபோதிலும், நவீன சிகிச்சை முறைகளின் மூலம் நோயைத் தணித்து, துன்பமில்லாத புதிய வாழ்க்கையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**அஸ்மா நோய் ஏற்படுவதற்கான காரணங்கள்.**

* ஒவ்வாமை.
* பூக்களின் மகரந்தப்பொடி.
* வைரஸ் மற்றும் பக்ரீறியாவினால் தோற்றுவிக்கப்படும் அழற்சி.
* புழுதி மற்றும் தூசு.
* புகைப்பிடித்தல்.
* சிலவகை உணவுகளும், மருந்துகளும்.
* வீட்டுப்பிராணிகளின் உரோமம்.

எனினும், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தெளிவான காரணத்தை இனங்கான முடிவதில்லை. அஸ்மா நோய் தீவிரமடைவதற்கு புகைப்பிடித்தல் ஒரு பிரதான காரணமாகும். ஒருவர் புகைப்பிடிப்பதை நிறுத்தியதும் அவரது அல்லது பிள்ளைகளின் அஸ்மா நோய் நிலைமை கட்டுப்பாட்டிற்குள் வருவதிலிருந்து இதனை அறியலாம்.

வீங்கி ஒடுங்கும் சுவாசக் குழாயை விரிவடையச் செய்து மூச்செடுப்பதை இலகுவாக்குவதற்குச் சில மருந்துவகைகள் பாவிக்கப்படுகின்றன. சல்பியூட்டமோல், டெர்பியூட்டலின் என்பன அத்தகைய இரு மருந்துகளாகும். அஸ்மா கடுமையாகும் போது, முகத்தில் அணியும் கருவியின் ஊடாக சுவாசிப்பு மருந்தைக் கொடுப்பதன் மூலம் நோயின் தாக்கத்திலிருந்து விரைவாக நிவாரணம் பெறமுடியும்.

சிகிச்சை நிலையங்களிலும் வைத்தியசாலைகளில் பெரும்பாலான அவசர நிலைமைகளில் இச் சிகிச்சை முறை பயன்படுத்துகிறது. இதன் மூலம் நோயாளி இலகுவாகச் சுவாசிக்கக்கூடிய நிலையை மீள அடைகின்றனர்.

அஸ்மா மீண்டும் மீண்டும் ஏற்படுவதைத் தவிர்க்க வேண்டுமானால் நோய் நிலைமையை நீண்ட

**இன்று உலக அஸ்மா தினம்**

காலத்திற்குக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது அவசியமாகும். இதற்காக உட்சுவாச ஆவி மருந்தாக ஸ்டீரொய்ட்ஸ் வகையைச் சேர்ந்த மருந்துகள் பயன் படுத்தப்படுகின்றன. வாய் மூலம் சுவாசிக்கப்படும் இந்த ஆவி மருந்துகள் அஸ்மா நோயாளிகளுக்குப் பெரும் துணையாக அமைகின்றன. ஒரு தடவையில் மிகச் சிறிய அளவு மருந்தே சுவாசிக்கப்படுவதால் இது ஒரு பாதுகாப்பான நிவாரண வழியாகும்.

வைத்திய ஆலோசனையைச் சரியாகப் பின்பற்றினால், சுவாசப்பைக்கு அவசியமான அளவு மருந்தை மட்டும் பாவித்து. நோயைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதோடு பக்க விளைவுகளையும் குறைக்க முடியும். இச்சிகிச்சை முறை நோயாளியை மருந்திற்கு அடிமையாக்கிவிடும் என்று கூறுவதில் எவ்வித உண்மையுமில்லை. மாறாக அஸ்மா நோய் ஒருவரை வாழ்நாள் முழுவதும் பாதிக்கக்கூடியது. இதனை மருந்துகள் மூலம் தூசு போன்ற பிறபொருட்களை விலத்துவதன் மூலமும் கட்டுப்படுத்தலாம்.

**அஸ்மா நோயைத் தவிர்ப்பதற்கு செய்ய வேண்டியவை,**

* புகைப்பிடிக்கக்கூடாது.
* தீய வாயுக்களை வெளிவிடும் இரசாயன பதார்த்தங்களுக்கு அருகில் இருக்க வேண்டாம்.
* நாய், பூனை போன்ற செல்லப்பிராணிகளையோ மென்பஞ்சுப் பொம்மைகளையோ படுக்கையறையில் வைத்திருக்க வேண்டாம்.
* கரப்பொத்தான் போன்ற பூச்சிகள் வராதவாறு படுக்கையறையைச் சுத்தமாக வைத்திருக்கவும்.
* வீட்டைக் கூட்டி துப்புரவு செய்யும் போது தூசு உங்கள் சுவாசத்தில் கலப்பதைத் தவிர்க்கவும்.
* சுவாசப்பையில் தொற்று ஏற்பட்டால் தாமதமின்றிச் சிகிச்சை பெறவும்.
* சுவாசத்தொற்று நோய் உள்ளவர்களிடமிருந்து விலகி இருக்கவும்.
* இளைப்பு, வரண்ட இருமல், சுவாசிக்க கஷ்டம்.

போன்ற அறிகுறிகள் தென்பட்டால் தாமதமின்றி வைத்திய உதவியை நாடவும்,

* ஒரு தடவை அஸ்மா நோய் வந்தால் அது மீண்டும் மோசமாக வராமலிருக்க முன்னெச்சரிக்கையாக இருக்கவும்.

**அஸ்மா நோய்க்கு முறையான சிகிச்சை பெறாவிட்டால் நிகழக்கூடியவை?**

* நோய் தீவிரமடைந்தால் உயிருக்குக்கூட ஆபத்து ஏற்படலாம்.
* நோயை அலட்சியம் செய்வதனால், பெரும்பாலான நோயாளிகள் அவசர சிகிச்சை பெறவேண்டிய நிலைக்கு ஆளாகின்றனர்.
* இரவில் அல்லது அதிகாலையில் வைத்தியரைத்தேடி ஓடவேண்டிய அவசியம் அஸ்மா நோயாளிகளுக்கு அடிக்கடி ஏற்பட இதுவே பிரதான காரணம்.
* ஒருவர் தனது நோய் நிலைமையைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்காவிட்டால் அவரது தொழிலும் அன்றாட வாழ்க்கை யும் பாதிக்கப்படும்.
* அடிக்கடி நோய் வாய்ப்படும் பிள்ளைகளின் உடல் வளர்ச்சியும், கல்வியும் பாதிக்கப்படும்.
* அஸ்மா நோய் உக்கிரமடையும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வைத்திய உதவியை நாடவும்.
* இரவில் நோய் மோசமடைந்தால், நோயாளியை வைத்தியரிடம் கொண்டுசெல்வதற்கு விடியும் வரை பார்த்துக்கொண்டிருப்பது ஆபத்தாகலாம்.

**அஸ்மா நோய்க்கான சிகிச்சைகள்**

**சிகிச்சையில் உறிஞ்சிகளின் பயன்பாடு**

இரண்டு வகையான உறிஞ்சிகள் பயன்படுத்தப் படுகின்றன.

1. 'அளவிடப்பட்ட' திரவ நிலை உறிஞ்சிகள் (Metered Dose Inhalers) இவ்வகை மூச்சு வாங்கியில் சிறிய குடுவையினுள் மருந்து உயர் அமுக்கத்தில் பொதியிடப்பட்டுள்ளது. குடுவையில் உள்ள சிறிய திறக்கும் பகுதியை அமுக்கும் போது உள்ளிருக்கும் மருந்து ஒரு குறிப்பிட்ட அளவு மாத்திரம் ஆவிநிலையில் வெளிவரும்.

2. உலர் துகள் உறிஞ்சிகள் (Dry powder Inhalers) இந்த உறிஞ்சிக்கருவியானது மருந்தினை முதலில் கொண்டிருப்பதில்லை. இக்கருவிக்கான மருந்து கூட்டுக்குளிசை வடிவிற் கிடைக்கும். இது மருந்தினை நுண்ணிய துகள்களாக வெளிவிடும்.

வாய் வழியாக உட்கொள்ளும் மாத்திரைகளைவிட உறிஞ்சிகள் சிறந்தவை ஆகும். நாம் குளிசைகள் பாவிக்கும் போது அது குடலினால் அகத்துறிஞ்சப்பட்டு குருதி மூலம் உடலின் எல்லாப் பகுதிகளுக்கும் எடுத்துச் செல்லப்படுகின்றன. அந்த மருந்தின் ஒரு சிறுபகுதியே சுவாசக் குழாயினுள் சென்றடைகின்றது. குருதி மூலம் மற்றைய உடலுறுப்புக்களுக்கு கொண்டு செல்லப்படும் மருந்து பல பக்க விளைவுகளை ஏற்படுத்துகிறது.

ஆனால் மருந்துகளை உறிஞ்சி மூலம் பாவிப்பின் மிகவும் சொற்பமான அளவு மருந்தே பாவிக்கப்படுகிறது. இது நேரடியாக வாயில் வைத்து சுவாசக்குழாய்க்குள் உறிஞ்சப்படுவதால் தேவையான அளவு மருந்து நேரடியாகச் சென்றடைகிறது. அத்துடன் குருதியில் கலக்கும் மருந்தின் அளவு மிகக்குறைவாகவுள்ளது.

பயத்தை உன்னிடமே வைத்துக்கொள், உன் துணிவை மட்டும் மற்றவர்களிடம் பகிர்ந்துகொள். - பொன்மொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## மகிழ்ச்சியைத் தடுப்பது வெளியாரில்லை!

ஐம்பது வயதைத் தாண்டியவர்கள் எதிர்காலத்தைப் பற்றி சிந்திப்பதில்லை. கடந்த காலத்தை நியாயப்படுத்துவதிலேயே அவர்கள் பொழுதைப் போக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லப்படுவதுண்டு.

ஒருவர் இளையவர்களின் செயல்களைப் பார்த்து பொதுவாகவே எரிச்சலுறத் தொடங்கி விட்டாரென்றால் அவர் பழைய தலைமுறைக்குச் சென்றுவிட்டார் என்பதுதான் பொருள். அல்லது "பெரிசு என்னவாம்?" என்று தாயிடம் மகன் கேட்கும்போதே இந்த இடைவெளி ஏற்பட்டுவிட்டதை புரிந்துகொள்ளவேண்டும்.

இந்தத் தலைமுறை மாற்றம் தவிர்க்க முடியாததுதான். இதைப் புரிந்து கொள்வதிலிருந்துதான் இளைஞர்களுடனான நல்லுறவைப் பெரியவர்கள் ஏற்படுத்திக்கொள்ள முடியும். இல்லாவிட்டால் வயதானவர்களுக்கேயுரிய கலைநயத்தோடு சும்மா புலம்பிக் கொண்டிருக்க வேண்டியதுதான்.

ஆனால், இந்த வயதானவர்கள் 'வர வர உலகம் கெட்டுக் கொண்டே போகிறதே' என்ற கவலையைக் கொண்டிருந்தாலும், உண்மையில் அவர்கள் மகிழ்ச்சியானவர்கள் என்ற செய்தியை ஆய்வொன்று வெளிப்படுத்தியிருக்கிறது. இதைக் கண்டு சொன்ன ஆய்வாளர்கள் வயதானவர்களாகத்தான் இருந்திருப்பர் என்பதை யூகிப்பது ஒன்றும் கடினமல்ல.

நாற்பது வயதுக்கு மேல் மனிதன் மகிழ்ச்சியாக வாழ முடியாது; இளமையில்தான் ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம் எல்லாம் என்ற கருத்து சரியல்ல என்று அந்த ஆய்வு கூறுகிறது. வேலையில் இருந்து ஓய்வு பெறும் காலத்தில்தான் மனிதர்கள் மிகுந்த மகிழ்ச்சியை அனுபவிக்கிறார்கள். வாழ்க்கையின் ஆகக் கடைசி காலத்தில்தான் – அதாவது 80 வயதுக்குப் பிறகு– இப்படியொரு வாழ்க்கை தேவைதானா என்ற விரக்தி மேலிடுகிறதாம்.

குயின்ஸ்லாந்தில் இரு பல்கலைக்கழகங்களின் பேராசிரியர்கள் மேற்கொண்ட ஆய்வு இது. அவுஸ்ரேலியா, இங்கிலாந்து, ஜெர்மனி ஆகிய நாடுகளில் அறுபதாயிரம் பேரிடம் பத்தாண்டுகளாக சேகரித்த தகவல்களை அலசியதில், 55 வயதில் இருந்து 75 வயது வரையிலான காலகட்டத்தில் மனிதர்கள் உச்சகட்ட மகிழ்ச்சியில் வாழ்கின்றனர் என்பது தெரிய வந்தது. எப்போதும் சந்தோஷத்தில் மிதப்பது இளைஞர்கள் என்ற கருத்து தவறானது என்பது இத்தால் தெரியவந்தது.

முழுமையான மகிழ்ச்சிக்கு 10 புள்ளிகள் போடலாம் என்றால் உங்கள் மகிழ்ச்சிக்கு எத்தனை புள்ளி கொடுப்பீர்கள் என்று 18 வயது ஆண், பெண்களிடம் கேட்டபோது கிடைத்த சராசரி புள்ளிகள் ஏழுதான். ஆனால், 65 வயதை தாண்டியவர்களோ 'வாழ்க்கை அட்டகாசமாகப் போகிறது' என்று இதைவிட அதிகமான புள்ளிகள் கொடுத்துள்ளனர்.

இதன்படி, 20 வயதில் அனுபவிக்கும் சந்தோஷங்கள் படிப்படியாக அதிகரித்து 70களில் உச்சத்தை எட்டுவதாக கூறலாம் என்று அந்தப் பேராசிரியர்கள் தெரிவித்துள்ளனர். உத்தியோக ஓய்வுக்குப் பிறகு வாழ்க்கை கசக்கும் என்ற கருத்து இதன் மூலம் தகர்க்கப்பட்டுள்ளது.

இளம் வயதில் எதிர்பார்ப்புகள் அதிகம் இருக்கும். நிறைய கனவுகள். அனைத்தும் பலிப்பதில்லை. அதனால் ஏமாற்றம். வயது ஏறும்போது மனம் முதிர்ச்சி அடைகிறது. சாத்தியமானதை மட்டுமே எதிர்பார்க்கிறது. ஏமாற்றம் குறைகிறது. அதனால் தன்னம்பிக்கை வலுக்கிறது. இழந்ததை எண்ணி கவலைப்படாமல் இருப்பதை பார்த்து திருப்தி அடைகிறது. அதில் மகிழ்ச்சி நிறைகிறது. இதுதான் அந்த ஆய்விலிருந்து கிடைத்த முடிவு.

இதிலிருந்து நாமும் பெற்றுக்கொள்ளப் படிப்பினை இருக்கிறது. சாத்தியப்படக் கூடியவற்றையே எதிர்பார்ப்பதற்கு மனங்களைத் தயார்படுத்திக் கொள்வோமென்றால் நமக்கும் மகிழ்ச்சியான வாழ்வு வந்துவிடும் என்பதில் சந்தேகமில்லை. - ஆசிரியர்

# அநீதியான முறையில் கைதான தந்தையை விடுதலை செய்யுங்கள்

## ஜனாதிபதிக்கு அசாத் சாலியின் மகள் கடிதம்

தமது தந்தையான அசாத் சாலி அநீதியான முறையில் கைது செய்யப்பட்டுள்ளதாக அசாத் சாலியின் மகள், அமீனா அசாத் சாலி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட தருணம் முதல் இதுவ்ரை உணவு, நீர் போன்றவற்றை உட்கொள்வதைத் தவிர்த்து உண்ணாவிரதம் மேற்கொண்டு வருவதால் தமது தந்தையின் உடல் நிலை மிகவும் மோசமடைந்துள்ளதாக அமீனா அசாத் சாலி ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

தாமும் தமது தாயாரும் உண்ணாவிரதம் மேற்கொண்டு வரும் தந்தையிடம் உண்ணாவிரதத்தை முடிவுக்குக்கொண்டுவருமாறு வேண்டுகோள் விடுத்த போதிலும் அவர் அதனை நிராகரித்துள்ளதாக அமீனாவின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நான் சிறுபராயம் முதல் நன்கு அறிந்த விடயம் என்னவெனில், நீங்கள் எமது குடும்பத்தின் மிகவும் நெருங்கிய நண்பர். ஆகையால், எனது பாசமிகு தந்தைக்கு உங்கள் கையால் ஒரு கோப்பை நீரைக் கொடுத்தால் கட்டாயமாக எனது தந்தை வழமை நிலைக் குத் திரும்புவார்.

நீங்கள் இந்த நாட்டின் ஜனாதிபதியாவதற்காக எனது தந்தை எந்தளவு அர்ப்பணிப்புக்களைச் செய்துள்ளார் என்பதை நீங்களும் இந்நாட்டு மக்களும் நன்கு அறிவீர்கள்.

ஆகையால், உங்கள் கைகளால் ஒரு கோப்பை நீரை வழங்குவதன் மூலம் இந்த நாட்டின் சமாதானத்திற்காக தம்மை அர்ப்பணித்த ஒருவரும், உங்களது நண்பருமாகிய அவரின் உயிரைப் பாதுகாக்க முடியும் என்பதில் நான் மிகுந்த நம்பிக்கைகொண்டுள்ளேன்.

எனவே, இது தொடர்பில் கருணை உள்ளம் கொண்டு எனது தந்தைக்காக நான் விடுத்துள்ள வேண்டுகோளை நிறைவேற்றுமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன், என்று அந்தக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# காப்புறுதி கொடுப்பனவைபெற 68 வயதை பூர்த்திசெய்ய வேண்டும்

## சைப்பிரஸில் இலங்கைப் பணிப்பெண்கள் அவலம்

(கொழும்பு)

தமக்குரிய காப்புறுதிக் கொடுப்பனவை பெற்றுக்கொள்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக் சைப்பிரஸில் தொழிலுக்குச் சென்று திரும்பிய இலங்கை பணியாளர்கள் கூறுகின்றனர்.

இதனால் தாம் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இந்த விடயம் குறித்து அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் இதுவரை உரிய தீர்வு கிடைக்கவில்லை என சைப்பிரஸில் தொழிலுக்குச் சென்று நாடு திரும்பிய இலங்கைப் பணிப்பெண் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தாம் பணியாற்றிய வீட்டின் உரிமையாளர் மாதாந்தம் காப்புறுதிக் கட்டணத்தை செலுத்தியதாகவும் நாடு திரும்புவதற்கு முன்னதாக அது தொடர்பான ஆவணங்களைப் பெற்றுக்கொண்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் காப்புறுதிக் கொடுப்பனவை உடனடியாக வழங்க முடியாது என இலங்கையிலுள்ள அதிகாரிகள் கூறியதாகவும் சைப்பிரஸில் தொழிலுக்குச் சென்று நாடு திரும்பிய ஆயிரக்கணக்கான பணியாளர்கள் இந்தப் பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொது முகாமையாளருமான மங்கள ரன்தெனிய தெரிவிக்கையில், சைப்பிரஸின் சட்டத்திற்கு அமைய காப்புறுதிக் கொடுப்பனவை பெற்றுக்கொள்வதற்காக பயனாளிகள் 68 வயதை பூர்த்தி செய்திருக்க வேண்டும் எனக் கூறினார்.

# சீரற்ற காலநிலையால் மழை; பல பகுதிகளில் வெள்ளப்பாதிப்பு

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள மழையுடன் கூடிய சீரற்ற காலநிலையால் 2212 பேர் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

வத்தளை மற்றும் கம்பஹாப் பகுதிகளில் சிறிய வெள்ள நிலை ஏற்பட்டுள்ளதென அந்த நிலையம் குறிப்பிட்டுள்ளது. இதனால் குறித்த பகுதியில் 81 குடும்பங்களைச் சேர்ந்த 331 பேர் 4 தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தொடர்ந்தும் நாட்டின் பல பகுதிகளிலும் மழை பெய்யக்கூடும் என வானிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது.

மழையுடன் சுழல் காற்று வீசுவதுடன் இடி, மின்னலும் காணப்படும் என வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை மேல் மாகாணத்தில் பலத்த மழை பெய்து வருகிறது. தாழ் வளிமண்டலத்தில் தளம்பல் நிலை ஏற்பட்டதன் காரணமாக மேல் மாகாணத்தில் நேற்று அதிகாலை தொடக்கம் பலத்த மழை பெய்து வருகின்றது. இதன்காரணமாக, கொழும்பு உள்ளிட்ட பெரு நகரப்பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

கொழும்பு, இரத்மலானை, இரத்தினபுரி, திருகோணமலை ஆகிய பிரதேசங்களில் கடந்த 24 மணித்தியாலங்களில் சராசரியாக 27 மில்லிமீற்றர் மழை பெய்துள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. இதேவேளை கம்பஹா மாவட்டத்தில் 479 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 212 பேர் பாதிக்கப்பட் டுள்ளனர்.

வத்தளை பகுதியில் 81 குடும்பங்களைச் சேர்ந்த 331 பேர் இடம்பெயர்ந்து 4 முகாம்களில் தங்கியுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்தியநிலையத்தின் பிரதி ஊடகப் பேச்சாளர் சரத் லால் குமார் தெரிவித்துள்ளார்.

# கொப்பேகடுவ வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை இடைநிறுத்தம்

(கொழும்பு)


தம்புள்ள வீர டென்ஸில் கொப்பேகடுவ வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை நடவடிக்கைகள் முழுமையாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. மழை நீரில் சத்திரசிகிச்சை உபகரணங்கள் நனைவதாகவும் மின்னல் தாக்கத்தின் போது பாதிப்பு ஏற்படக்கூடும் என்பதால் சத்திரசிகிச்சை நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆகையால் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்படவிருக்கும் நோயாளர்கள் வேறு வைத்தியசாலைகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர். இரண்டு வருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டடம் கொண்ட சத்திரசிகிச்சைப் பிரிவு தரக்குறைவானது என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இது குறித்து கருத்து வெளியிட்ட மத்திய மாகாண சுகாதாரப் பணிப்பாளர் சாந்தி சமரசிங்க, வீர டென்ஸில் கொப்பேகடுவ வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பில் விசாரணைகள் இடம்பெறுவதாகவும் குறிப்பிட்டார்.

## யதீந்திரா கட்டுரையிலிருந்து

# தமிழரசுக் கட்சியை எதிர்க்க "தில்" இருக்கிறதா முன்னாள் இயக்கங்களுக்கு?

**தமிழரசுக் கட்சியின் உயர்பீடத்தைப் பொறுத்தவரையில், அவர்களை தவிர்த்து ஏனைய கட்சிகளால் ஒரு தனிஅணியாக இயங்க முடியாதென்றே நம்புகின்றனர். ஏனெனில் இயக்கங்களுக்கென்று மக்கள் மத்தியில் குறிப்பான செல்வாக்கு இல்லையென்பதே தமிழரசுக் கட்சியின் நிலைப்பாடு. இவர்கள் எல்லோரும் வேறு வேலைகள் கிடைக்காமையால் இயக்கமென்னும் வேலையற்றோர் சங்கங்களில் இணைந்து கொண்டவர்கள். இவ்வாறான கூட்டத்தினருக்கு அரசியல் குறித்தும், கட்சிக் கட்டமைப்பு பற்றியும் பேசுவதற்கு என்ன தகுதியிருக்கிறது. இது உண்மைதானா? நிரூபிக்க வேண்டிய பொறுப்பு கூட்டமைப்பில் பெயரளவு பங்காளர்களாக இருந்து வரும் முன்னாள் இயக்கங்களான ஈ.பி.ஆர்.எல்.எப், புளொட் மற்றும் ரெலோ ஆகிய இயக்கங்கங்களுக்குரியதாகும். எவ்வாறு நிரூபிக்கப் போகின்றனர்? தமிழரசுக் கட்சியின் நிழலில் இருந்தவாறு இதனை நிரூபிக்க முடியுமா?**



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒரு கட்சியாக பதிவு செய்வதற்கான வழய்ப்புக்கள் இருக்கின்றனவா என்னும் விவாதம் இன்னும் முற்றுப்பெற்றுவிடவில்லை. பெரும்பாலும் விரைவில் இது முற்றுப்பெறக் கூடுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. தமிழரசுக் கட்சியை வழிக்குக் கொண்டுவரும் ஒரு முயற்சியாக, மன்னார் ஆயர் இராயப்பு யோசப் சமீபத்தில் மந்திராலோசனை ஒன்றில் ஈடுபட்டிருந்ததாக நம்பிக்கைக்குரிய தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் அம் முயற்சியும் வெற்றியளிக்கவில்லை என்றே அறிய முடிகிறது. தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒரு கட்சியாக பதிவு செய்ய முடியாமைக்கான காரணங்களை மன்னார் ஆயரிடம் தெரிவித்துள்ளதாகவும் மேற்படி தகவல் மூலங்கள் உறுதிப்படுத்துகின்றன. தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரையில், கூட்டமைப்பை ஒரு தேர்தல் கூட்டாக பேணிக் கொள்ளலாம், அதற்கு மேல் செல்ல முடியாதென்பதே அவர்களது திடமான நிலைப்பாடு ஆகும். தமிழரசுக் கட்சி தனது நிலைப்பாட்டில் மிகவும் நிதானமாகவும் தெளிவாகவும் இருப்பதாகவே தெரிகிறது. தமிழரசுக் கட்சி இவ்வாறானதொரு உடும்புப்பிடி நிலைப்பாட்டில் இருப்பதற்கு அதனளவில் சில தெளிவான காரணங்கள் உண்டு.

முதலாவது, ஏனைய கட்சிகளால் தமிழரசுக் கட்சியைத் தவிர்த்து இயங்க முடியாதென்றே அவர்கள் திட்டவட்டமாக நம்புகின்றனர். சமீபத்தில் புலம்பெயர் இணையம் ஒன்றிற்கு கருத்துத் தெரிவித்திருந்த தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் சி.வி.கே.சிவஞானம் இதனை மிகவும் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார். உதயசூரியன் சின்னத்தை எடுத்துக் கொண்டு ஆனந்தசங்கரி சென்றார். பின்னர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சென்றார். ஆனால் அவர்களால் வெற்றிபெற முடிந்ததா? பொதுவாக இத்தகையதொரு பார்வையே தமிழரசுக் கட்சியின் உடும்புப்பிடி வாதத்திற்கு பின்னால் மறைந்திருக்கிறது. அவர்களைப் பொறுத்தவரையில் கூட்டமைப்பில் உள்ள ஏனைய நான்கு கட்சிகளும், தமிழரசுக் கட்சி என்னும் மரத்தில் படரும் சிறு கொடிகள் மட்டுமே. வேண்டுமானால் கொடிகள் படர்வதற்கு இடம் தரலாம். ஆனால் கொடிகள் ஒரு போதும் மரத்தில் பங்கு கேட்க முடியாது. ஏனெனில், அச்சிறு கொடிகள் உயிர்வாழ்வது மரத்தின் தயவிலாகும்.

இரண்டாவது, பதிவை வலியுறுத்தி வருகின்ற கட்சிகளைப் பொறுத்தவரையில், அவர்கள் மத்தியில் ஒருமித்த கருத்துடன் செயலாற்றக்கூடிய ஆற்றல் இல்லையென்றே தமிழரசுக் கட்சி கருதுவதாகத் தெரிகிறது. இதன் காரணமாகவே, இன்றுவரை அறிக்கைகளுக்கு அப்பால் அவர்களால் செல்ல முடியவில்லை. இப்படியானதொரு பார்வையும் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் மத்தியில் காணப்படுகிறது. தமிழரசுக் கட்சி, தொடர்ந்தும் கூட்டமைப்பு விடயத்தில் மிகவும் இறுக்கமான நிலைப்பாட்டில் தரித்து நிற்பதற்கு இப்படியான விடயங்களே காரணமாகும். தவிர அவர்கள் பதிவு தொடர்பில் அவ்வப்போது வெளிப்படுத்தி வருகின்ற கருத்துக்களும் இதனையே உறுதிப்படுத்துகின்றது.

எனவே இந்தப் பின்புலத்தில் நோக்கினால், இனி தமிழரசுக் கட்சியை நோக்கி விரல் நீட்டுவதில் அர்த்தமில்லை. ஏனெனில் தமிழரசுக் கட்சி, தன்னுடைய நிலைப்பாட்டில் மிகவும் தெளிவாகவே இருக்கிறது.

ஆனால் ஏனைய கட்சிகளிடம் அவ்வாறானதொரு தெளிவு இருக்கின்றதா என்னும் கேள்வியை இந்தச் சந்தர்ப்பத்தில் தவிர்க்க முடியவில்லை. இன்றைய நிலையில்,ஏனைய கட்சிகள் மத்தியில் இரண்டு தெரிவுகள் மட்டுமே ஊசலாடுகின்றன. ஒன்று, தமிழரசுக் கட்சியை தவிர்த்து, தங்களுக்கான தனித்துவமான முடிவைத் தேடுவது. இல்லையேல், தமிழரசுக் கட்சியின் மேலாதிக்கத்திற்குள் அமைதியாக அடங்கிப் போவது. இதில் முதலாவது தெரிவை நோக்கி ஏனைய கட்சிகள் நகருவதாயின், அதற்கான தற்துணிவு ஏனைய நான்கு கட்சிகளிடம் இருக்கின்றதா என்பதே தற்போது மேலெழுந்திருக்கும் கேள்வியாகும். ஏனெனில், இதுவரை தமிமிழசுக் கட்சியிடம் கோரிக்கை வைத்ததைத் தவிர அவர்கள் எந்தவொரு முன்னேற்றத்தையும் காண்பித்ததில்லை.

இந்த இடத்தில் பிறிதொரு விடயத்தையும் சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது. தமிழரசுக் கட்சியுடன் ஏனைய கட்சிகள் நடத்திக் கொண்டிருக்கின்ற மேற்படி பனிப்போரானது, இரண்டு முக்கியமான கேள்விகளை தமிழர் அரசியல் அரங்கிற்குள் தள்ளியிருக்கிறது. அதாவது, ஆயுத இயக்கங்கள் வழியாக அரசியலுக்கு வந்தவர்களை தமிழ் மக்கள் இனி ஏற்றுக்கொள்ள மாட்டார்களா? இரண்டு, ஆயுத இயக்கங்கள் வழியாக வந்தவர்களுக்கு தமிழர் அரசியலை வழிநடத்தும் தகுதிப்பாடு இல்லையா? ஏனெனில், விடுதலைப்புலிகளின் மறைவைத் தொடர்ந்து, தலைமையாக வெளித்தெரிந்த கூட்டமைப்பிற்குள் ஆரம்பத்திலிருந்து இடம்பெற்றுவரும் மேற்படி பனிப்போரானது, குறித்த இரு கேள்விகளின் அடிப்படையில்தான் தொடருகிறது.

தமிழரசுக் கட்சியா அல்லது கூட்டமைப்பா என்னும் விவர்தத்தின் நடுவே மெல்லிதாக இந்த விடயமும் ஓடிக் கொண்டிருக்கிறது. பதிவைத் தவிர்ப்பதற்கு தமிழரசுக் கட்சித் தரப்பினர் கூறிவருகின்ற காரணங்களை ஆழ்ந்து நோக்கும் ஒருவர், இந்த விடயத்தைத் தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும். இந்தக் கேள்விகள் கூட்டமைப்பில் தற்போது அங்கத்துவம் வகித்துவரும் முன்னாள் இயக்கங்களுக்கு மட்டும் உரிய ஒன்றல்ல. போரின் இறுதிக்கட்டத்தில் அரச படைகளிடம் சரணடைந்து மீண்டும் சமூக நீரோட்டத்தில் இணைந்து கொண்டிருக்கும் முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கும் உரிய ஒன்றாகும். ஏனெனில், அவர்களில் சிலர் நாளை ஜனநாயக அரசியலுக்குள் வர எத்தனித்தாலும் மேற்படி கேள்விகளே அவர்களையும் துரத்தும்.

எனவே இந்த விடயங்கள் அனைத்தையும் தொகுத்து நோக்கினால், கூட்டமைப்பின் அதிருப்தி கட்சிகளின் முன்னாலுள்ள ஆக்கபூர்வமான, காலப்பொருத்தம் கருதிய தெரிவு ஒன்று இருக்குமாயின், அது நான்கு கட்சிகளும் இணைந்து கூட்டமைப்பாக இயங்குவது மட்டும்தான். ஏனெனில், இந்த விடயம் தொடர்ந்தும் இழுபறியில் இருக்குமாயின், குறித்த நான்கு அதிருப்தி கட்சிகளுக்கு மட்டுமல்ல, தமிழரசுக் கட்சியினர் மத்தியிலும் இது ஒரு தலையிடியாகவே அமையும். தவிர, தற்போது கூட்டமைப்பில் ஐந்து கட்சிகள் இருப்பதான தோற்றப்பாடு வெளித்தெரிந்தாலும், நடைமுறையில் தமிழரசுக் கட்சி தனித்தும், ஏனைய நான்கு கட்சிகளும் தமிழரசுக் கட்சி எதிர்மனோபாவத்துடனுமே இயங்கி வருகின்றன. இந்த அடிப்படையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது ஏலவே கருத்துரீதியாக உடைந்துவிட்டது. மேற்படி கருத்து ரீதியான உடைவிற்கு சட்ட வடிவம் கொடுக்கக் கூடிய ஆற்றல் ஏனைய நான்கு கட்சிகளுக்கும் இருக்கிறதா என்பதே அரசியல் ஆர்வலர்கள் மத்தியில் எழுந்துள்ள கேள்வி ஆகும்.

இங்கு பிறிதொரு விடயத்தையும் குறித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஒரு வேளை, குறித்த நான்கு அதிருப்தி, கட்சிகளும் கூட்டமைப்பை ஓர் அரசியல் கட்சியாக தரமுயர்த்துவது என்னும் இலக்கிலிருந்து பின்வாங்குமாயின், இதுவரை இவர்கள் பற்றி தமிழரசுக் கட்சியினர் குறிப்பிட்டுவந்த அபிப்பிராயங்கள் உறுதிப்படும். ஏனெனில் தமிழரசுக்கட்சியின் உயர் பீட்த்தைப் பொறுத்தவரையில், அவர்களைத் தவிர்த்து ஏனைய கட்சிகளால் ஒரு தனிஅணியாக இயங்க முடியாதென்றே நம்புகின்றனர். ஏனெனில் இயக்கங்களுக்கென்று மக்கள் மத்தியில் குறிப்பான செல்வாக்கு இல்லையென்பதே தமிழரசுக் கட்சியின் நிலைப்பாடு. இவர்கள் எல்லோரும் வேறு வேலைகள் கிடைக்காமையால் இயக்கமென்னும் வேலையற்றோர் சங்கங்களில் இணைந்து கொண்டவர்கள். இவ்வாறான கூட்டத்தினருக்கு அரசியல் குறித்தும், கட்சிக் கட்டமைப்பு பற்றியும் பேசுவதற்கு என்ன தகுதியிருக்கிறது. இது உண்மைதானா? நிரூபிக்க வேண்டிய பொறுப்பு கூட்டமைப்பில் பெயரளவு பங்காளர்களாக இருந்துவரும் முன்னாள் இயக்கங்களான ஈ.பி.ஆர்.எல்.எப், புளொட் மற்றும் ரெலோ ஆகிய இயக்கங்கங்களுக்குரியதாகும். எவ்வாறு நிரூபிக்கப் போகின்றனர்? தமிழரசு கட்சியின் நிழலில் இருந்தவாறு இதனை நிரூபிக்க முடியுமா?

# அழுத்தங்களை ஏற்படுத்துவோருக்கு வாய்ப்பை ஏற்படுத்துகிறது அரசு

## – சஜித் எம்.பி. தெரிவிப்பு

தகவல் அறிந்து கொள்ளும் உரிமை மற்றும் கருத்துகளை வெளியிடும் சுதந்திரமும் இன்று பறிக்கப்பட்டு, நாட்டின் ஜனநாயகம் கேள்விக்குறியாகியுள்ளது. இந்த நிலைமை தொடரும் வகையில் அரசாங்கத்தின் செயற்பாடுகள் அமைந்தால், எமது நாட்டின் உள்ளக விவகாரங்களில் தலையிட்டு அழுத்தங்களைக் கொடுக்க எதிர்பார்த்திருக்கும் குழுக்களுக்கு அது அதிக வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதாக அமைந்துவிடும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடா ளுமன்ற உறுப்பினர் சஜித் பிரே மதாஸ தெரிவித்தார்.

நாட்டை அதிகமாக நேசிப்பதாகக் கூறும் இந்த அரசாங்கம் உண்மையிலேயே நாட்டை நேசிப்பதானால் நாட்டு மக்களை நேசித்து அவர்களை வாழ் விக்கக்கூடிய வழிவகைகளைச் செய்ய வேண்டும். ஆனால் அது நடைபெறாமல் உள்ளது. ஆகையால் யுத்தத்தை வெற்றிகொண்ட இலங்கையில் மக்களை வாழ்விப்பதற்கான யுத்தத்தையும் வெற்றி கொள்ளவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்த தாவது,

நாட்டை நேசிக்கின்ற இந்த நாட்டுப் பிரஜைகள் என்ற அடிப்படையில் நாம் அனைவரும் எதிர்பார்ப்பது ஜனநாயகத்தைத் தான். அதாவது பேச்சுச் சுதந்திரம், விரும்பிய மதத்தை பின்பற்றுகின்ற சுதந்திரம் மற்றும் தமது விருப்பத்தின்படி அரசியலில் ஈடுபடும் சுதந்திரம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இந்தச் சுதந்திரமானது இன, மத, மொழி மற்றும் கட்சி பேதங்களின்றி அனைவரும் அனுபவிக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

இன்று நாட்டில் நடக்கின்ற செயற்பாடுகளைப் பார்க்கின்ற போது ஜனநாயகம் கேள்விக் குறியாகி மக்களின் அனைத்துச் சுதந்திரங்களும் படிப்படியாக பறிக்கப்படுகிறது. தகவல்களை அறிந்து கொள்ளும் உரிமை பறிக்கப்பட்டுள்ளது. கருத்துச் சுதந்திரம் பறிக்கப்படுகிறது. இந்த நிலைமை தொடர்ந்தால் எமது நாட்டின் உள்ளக விவகாரங்களில் தலையிட்டு அழுத்தங்களைப் பிரயோகிக்க எதிர்பார்த்திருப்பவர்களுக்கு அது வாய்ப்பை அதிகரிக்கும்.

மக்களுக்கான சிறந்த சேவைகளை வழங்கவேண்டும். அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டும். இவ்வாறான செயற்பாடுகளின் போது இன, மத, மொழி மற்றும் கட்சி வேறுபாடுகளைக் கருத்திற்கொள்ளாது எல்லோரும் எமது நாட்டு மக்களே என்ற நிலைப்பாட்டில் செயற்படவேண்டும்.

நாட்டை நேசிப்பதாகக் கூறும் இந்த அரசாங்கம் நாட்டு மக்களை கவனத்தில் கொள்ளாது



தான்தோன்றித்தனமாக செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே நாட்டு மக்கள் எதிர்நோக்கி வருகின்ற பல்வேறு பிரச்சினைகளிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதற்கான யுத்தத்தினை மேற்கொண்டு, அவர்களைக் காப்பாற்ற வேண்டியுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

# சந்திரிகா, ஷிராணி இணைந்து புதிய அரசியல் கட்சி உதயம்?

(கொழும்பு)



முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவும் இணைந்து புதியதோர் அரசியல்க் கட்சியை உருவாக்கத் திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. புதிய கட்சி ஒன்றினை உருவாக்கும் தங்களது திட்டம் தொடர்பில் இலங்கையிலுள்ள மேறகத்தைய நாடுகளின் தூதுவர்களுக்கும் அவர்கள் தெரியப்படுத்தியுள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் பிரபலங்கள் மற்றும் தற்போதைய அரசில் அங்கம் வகிக்கும் பலரும் இந்தப் புதிய அரசியல் கட்சியில் இணைந்து செயற்படவுள்ளனர் எனவும், முன்னாள் நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான வழக்குகள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதும் இந்தப் புதிய அரசியல் கட்சி ஸ்தாபிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளராக முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்காவின் மகன் விமுக்தி குமாரதுங்க நியமிக்கப்படவுள்ளார் எனவும் மேலும் தெரியவருகிறது.

# வடஇந்தியாவில் கடும் வெப்பம்; இலங்கைப் பயணிகளின் எண்ணிக்கை வீழ்ச்சி



இந்திய வட பிராந்தியத்திற்கு செல்லும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவிக கப்பட்டுள்ளது. அங்கு தற்போது ஏற்பட்டுள்ள கடுமையான வெப்பநிலை காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக பௌத்த வெளிநாட்டு பயணிகள் செயற்பாட்டுச் சங்கம் அறிவித்துள்ளது.

இதன் காரணமாக இலங்கையில் இருந்து புத்தகாயா, வர்ணாசி போன்ற மத வழிபாட்டு பிரதேசங்களுக்கு செல்பவர்களின் எண்ணிக்கையும் கணிசமான அளவு குறைவடைந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதேவேளை, இலங்கையில் இருந்து செல்லும் பௌத்த யாத்திரீகர்கள் தற்போது கொழும்பில் இருந்து நேரடியாக புதுடில்லிக்கு விமானம் மூலமே செல்வதாக தெரிவித்துள்ளதுடன், அதற்கு தற்போது சுமார் இலங்கை நாணயத்தில், 37ஆயிரம் ரூபாவினை அவர்கள் செலவிடுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தென் இந்தியாவில் அவர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் காரணமாகவே நேரடியாக விமானம் மூலம் அவர்கள் செல்கின்றனர். முன்னர் கொழும்பில் இருந்து சென்னைக்கு விமானம் மூலம் சென்று, அங்கிருந்து புகையிரத மார்க்கமாக இந்திய வட பிராந்தியத்திற்கு யாத்திரீகர்கள் சென்றனர்.

அதற்காக அவர்கள் 17 ஆயிரம் முதல் 19 ஆயிரம் ரூபா வரையிலேயே செலவிட்டதாகவும் இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

# "சுது அக்கா" கைது

(கொழும்பு)


கொழும்பில் பலவருடங்களாக போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டுவந்த் தம்பதியரை பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் கைது செய்துள்ளனர். இவர்கள் பிலியந்தலை பகுதியில் வைத்து நேற்றையதினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

"சுது அக்கா" என அழைக்கப்படும் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடும் குறித்த பெண்ணும் அவரது கணவரும் வாகனத்தில் பயணித்துக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஹெரோயின் மாதிரியை கொள்வனவாளர் ஒருவருக்கு காண்பிக்கச் சென்ற சந்தர்ப்பத்திலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் பயணித்த வாகனம் பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

# முருங்கைக்காயில் 80 சதவீதம் இரும்புச்சத்து

## – சுகாதார அமைச்சின் ஆய்வில் தகவல்



தனிநபர் ஒருவரின் உடலுக்கு நாளொன்றுக்கு அவசியமான இரும்புச் சத்தில் 80 சதவீதம் முருங்கைக்காயில் இருப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. சுகாதார அமைச்சின் உணவுப்பிரிவால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இத் தகவல் கண்டறியப்பட்டுள்ளது.

நாளொன்றுக்கு முருங்கை கீரை 100 கிராம் உணவில் சேர்த்துக் கொண்டால் அன்றைய தினத்திற்கு தேவையான இரும்புச் சத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட் டுள்ளது. மேலும் முருங்கைக்காயில் உள்ள எண்ணெய் உடலுக்கு தேவையான கொழுப்பு உருவாவதை உறுதி செய்கிறது.

அத்துடன் முருங்கைக்காய் விஷக்கிருமிகளை அழிப்பதுடன், உடலில் சுறுசுறுப்புத் தன்மையையும் அதிகரிக்கிறது என சுகாதார அமைச்சின் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இதுகுறித்து பொதுமக்களுக்கு தெளிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார அமைச்சு கூறியுள்ளது.

# வடமாகாண சபைத் தேர்தல் குறித்து தெளிவூட்ட நடமாடும் வேலைத்திட்டம்

PAFFREL

வட மாகாண சபை மற்றும் ஏனைய தேர்தல்கள் தொடர்பில் பொதுமக்களைத் தெளிவு படுத்தும் விரிவான வேலைத்திட்டம் ஒன்றை, தேர்தல் செயலகமும், பப்ரல் அமைப்பும் இணைந்து ஆரம்பிக்கவுள்ளது. 2013 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியலைப் பதிவு செய்யும் நோக்கில் எதிர்வரும் ஜுன் முதலாம் திகதி அனுஷ்டிக்கப் படவுள்ள வாக்காளர் தினத்தில் பணிகளை ஆரம்பிக்கத் தீர்மானிககப்பட்டுள்ளது.

பப்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டிஆராய்ச்சி இந்தத்தகவலை வெளியிட்டுள்ளார். தொடர்ந்து நடமாடும் தெளிவுபடுத்தல் நடவடிக்கைகளையும், தேசிய அடையாள அட்டைகளை பெற்றுக்கொடுக்கும் பணிகளையும் மேற்கொள்ளவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதுகுறித்த உயர்மட்ட தேர்தல் செயலக அதிகாரிகளுட னான சந்திப்பொன்று எதிர்வரும் வெள்ளிக்கிழமை இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# மண்முனைப்பற்று பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டு மக்கள் போராட்டம்

மட்டக்களப்பு, மண்முனைப்பற்று பிரதேச செயலாளரை இடமாற்றம் செய்வதற்கு மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகளை நிறுத்தக்கோரி நேற்றுக் காலை பிரதேச செயலகத்தினை முற்றுகையிட்டு போராட்டம் நடாத்தப்பட்டுள்ளது. மண்முனைப்பற்று பிரதேச செயலகத்துக்குட்பட்ட பெண்கள் அமைப்புகள் இணைந்து இந்தப் போராட்டத்தினை நடாத்தினர்.

காலை முதல் பிரதேச செயலக, வாயிற கதவைப் பூட்டிவிட்டு யாரும அலுவலகத்துக்குள் நுழையாத வகையில் இந்தப் போராட் டம் முனனெடுக்கப்பட்டுள்ளது. அண்மைக்காலமாக காத்தான்குடி நகரசபையினால் தமது பகுதிகளுக்குள் மேற்கொள்ளப்பட்டுவரும் தலையீடுகள் மற்றும் பிரதேச செயலாளரை அச்சுறுத்தும் செயற்பாடுகளை அரசியல் வாதிகள் நிறுத்தவேண்டும் என இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் கோரிக்கை விடுத்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோரிடம் போராட்டத்தை நிறுத்தி அலுவலகத்தினை திறக்குமாறு பொலிஸார் கேட்டுக் கொண்ட போதும் அதனை ஏற்றுக்கொள்ளாது தமது கோரிக்கைகளை நிறைவேறும் வரையில் போராட்டம் தொடரும் என தெரிவித்து, தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# தீவக பிரதேசத்தின் வளங்களை முகாமைத்துவம் செய்யவேண்டும்



(யாழ்ப்பாணம்)

தீவகப் பிரதேசங்களில் பல வளங்கள் காணப்படுகின்றபோதும் அவ் வளங்கள் சரியான வகையில் முகாமைத்துவம் செய்து பயன்படுத்தப்படவில்லையென ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வேலணை - அம்பிகை நகர் ஸ்ரீ மகேஸ்வரி விளையாட்டுக் கழகத்தின் 43 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வும், பரிசளிப்பு விழாவும் கழகத் தலைவர் சோதிலிங்கம் தலைமையில் நடைபெற்றபோது நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மக்களது தேவைகளை நிறைவேற்ற வேண்டியது எமது கடமையாகவுள்ளதுடன், மக்களுக்கான அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்துச் செல்லும்போது சில இடையூறுகள் ஏற்படுகின்றது தவிர்க்க முடியாததாகவுள்ளது. இக்கிராமத்தின் பிரதான வீதி வேலைகளுக்கான ஒப்பந்தகாரர்களின் சீரற்ற செயற்பாடு காரணமாக வீதி வேலைகள் தாமதமடைவதுடன் இவ்வாறான ஒப்பந்தகாரர்களின் ஒப்பந்தங்கள் இரத்துச் செய்யப்பட்டு புதிய கேள்வி கோரல்கள் கோரப்படவுள்ளது.

வேலணை பிரதேச அபிவிருத்திக்காக 100 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், ஜப்பானிய அரசின் நிதியுதவியுடன் நடைமுறைப்படுத்தப்படவுள்ள கிராமிய அபிவிருத்தித் திட்டத்தில் இக் கிராமமும் உள்ளடக்கப்படுகின்றது. இக்கிராமத்தில் பல்வேறு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான சிபார்சுகளையும் வழங்கியுள்ளோம்.

எமது பிரதேசங்களில் பல வளங்கள் உள்ளன. ஆனால் அவ் வளங்களை சரியான வகையில் முகாமை செய்து பயன்படுத்தப்படாதுள்ளது. இதனுடன், நாகரிக மாற்றங்கள் ஏற்படுகின்ற போதும் எமது கலாசாரங்கள் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும். அவ்வாறே நற்பண்புடையவர்களாக அடிப்படையில் இருந்தே மாற்றமடைய வேண்டும் என்றார்.

இந்நிகழ்வில், ஈ.பி.டி.பியின் வேலணை பிரதேச இணைப்பாளரும், வேலணை பிரதேச சபையின் தவிசாளருமான சின்னையா சிவராசா (போல்), ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி செனவிரட்ன மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## புதிய நிர்வாகத்தெரிவு

வடமராட்சி தேவரையாளி இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்க ஆண்டுப் பொதுக் கூட்டம் அண்மையில் நடத்தப்பட்டு புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது.

இதில் தலைவராக நாகலிங்கம் நாகேந்திரன், செயலாளராக மாணிக்கம் இலட்சுமிகாந்தன், பொருளாளராக செல்லத்தம்பி சுரேந்திரா, உப தலைவராக யோ.சுஜீந்திரன், உப செயலாளராக கி.கணேசன் ஆகியோருடன் நிர்வாகக் குழு உறுப்பினர்களாக பத்துப்பேரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.(90)

## சிறப்புப் பட்டிமன்றம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள புனித அந்தோனியார் ஆலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற புனித சூசையப்பர் தந்தையர் மன்றத்தின் 27 ஆவது ஆண்டு விழாவில் பங்கு மக்களின் சிறப்புப் பட்டிமண்டபம் நடைபெற்றது.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் இலத்திரனியல் தொழிநுட்ப சாதனங்களின் பெருக்கம் மனித வாழ்விற்கு சுகமா? சுமையா? என்ற தலைப்பில், சுகமே என்ற அணியில் மன்னார் கல்வி வலய ஆசிரியர். அ.யோகராஜா, வசாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலய அதிபர் ஜே.யூட் மரியரட்ணம், மாவட்டக் கூட்டுறவுக் காரியாலயக் கணக்காளர் தி.ஞானசீலன் ஆகியோரும் சுமையே என்ற அணியில் புனித பத்திரிசியார் கல்லூரி கிறிஸ்தவ நாகரிகப் பாட ஆசிரியர் திருமதி மல்லிகா ஜோன் அரியதாஸ், சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலய ஆசிரியர் திருமதி ஜே. அன்ரன், தெல்லிப்பளை சைவப் பிரகாச வித்தியாலய ஆசிரியர் எஸ்.ஞானரட்ணம் ஆகியோர் வாதிகளாகவும் பிரதிவாதிகளாகவும் கலந்து கொண்டனர்.



சுன்னாகம் பொது நூலகத்தின் உலக புத்தக தின நிகழ்வுகள் சுன்னாகம் பொது நூலக மண்டபத்தில் இடம்பெற்றபோது விருந்தினர்கள் புத்தகக் கண்காட்சியினைப்பார்வையிடுவதைக் காணலாம். (90)

# வீதியில் பரவப்பட்டுள்ள மண்; பயணிகள் அசௌகரியம்

(அச்சுவேலி)

அச்சுவேலி இராஜா வீதியில் வீதி அகலிப்பு பணிக்காக பல மாதங்களாக மண் பரவப்பட்டுள்ளதால் வீதியால் பயணம் செய்வோர் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

பல மாதங்களாக குறித்த வீதியில் கிரவல் மண் பரவி விடப்பட்டுள்ளதுடன், குறித்த விதிக்கு பைஸர் மூலம் நீர் விசிறாமல் அப்படியே விட்டுள்ளதால் வீதியால் செல்லும் கனரக வாகனங்களினால் எழுப்பப்படும் புழுதி யால் பாடசாலை மாணவர்கள் உட்பட பலரும் பல இன்னல்களை எதிர்நோக்கி வருவதாக விச னம் தெரிவிக்கின்றனர். இதனால் சுவாசம் தொடர்பான நோய்கள் ஏற்படும் நிலை காணப்படுகிறது.

அத்துடன் வீதியோர வீடுகள், உணவு கடைகளுக்கும் புழுதி செல்வதால் பல இன்னல்களை கடை உரிமையாளர்கள் எதிர்நோக்கி வருகின்றனர். தற்போது கோடை வெய்யிலின் தாக்கம் அதிகரித்து காணப்படும் நிலையில் புழுதி மேல் எழுந்து அருகில் வரும் வாகனங்களையும் கண்ணுக்கு தெரியாத வகையில் மறைக்கின்றது.

குறித்த வீதியினை ஒப்பந்த அடிப்படையில் எடுத்த ஒப்பந்தகாரர் இரு வேளைகளிலும் நீர் வீசப்படுவது இல்லை எனவும் இது தொடர்பாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் கேட்டுக்கொள்கின்றனர். (15)

# நல்லுறவை மேம்படுத்த முஸ்லிம் குழு விஜயம்

காத்தான் குடி கதீப்மார், இமாம்கள் சம்மேளனக் குழுவினர் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய இடங்களுக்கு இன நல்லுறவை மேம்படுத்தும் நோக்கத்துடன் விஜயம் ஒன்றை மேற்கொண்டனர்.

யாழ்.வருகைதந்த இக்குழுவினர் நல்லை ஆதீனம், நாகவிகாரை, ஆகிய சமய ஸ்தாபனங்களுக்கிடையில் விஜயம் மேற்கொண்டு சமயங்கள் மூலமாக சமுகங்களுக்கு நல்லுறவையும், நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவது சம்பந்தமான ஆலோசனைகள் பரிமாறப்பட்டன. இக்குழுவில் தலைவர் ஏ.எம்.ஆதம்லெப்பை, பிரதித் தலைவர் ஏ.ஜி.ம்.அமீன், எச்.எம்.சாஜகான் ஆகியோர் வருகைதந்தனர். யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியில் நல்லொழுக்க போதனையும் நடைபெற்றன. (105)

## முரசின் இன்றைய பலன்

(07.05.2013 - செவ்வாய்க்கிழமை)

விஜய வருஷம் சித்திரை மாதம் 24 ஆம் திகதி.
நட்சத்திரம் ரேவதி. இரவு 05.23 வரை. திதி திரியோதசி
பின்னிரவு 4.25 வரை. இராகுகாலம் 02.55 - 04.25 வரை.
சுபநேரம் 10.25 - 11.55 வரை. சித்தாமிர்தம்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | சந்தோஷநினைவுகளை, நண்பரிடம் பகிர்வீர்கள். வேலையில் ஆர்வமுடன் ஈடுபட்டு வெற்றிகள் காண்பீர்கள். தொழிலில், திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். பணவரவும், நன்மையும் கூடும். குடும்பத்துடன் வழிபாடு நிறைவேற்றுவீர்கள். |
| ரிஷபம் | உங்கள் உயர்ச்சிக்கு உதவுவதாக கூறி, சிலர் தவறான ஆலோசனை சொல்வர். போட்டி இருக்கும். அதிக உழைப்பினால், தொழிலில் சராசரி நிலை இருக்கும். சிக்கனம் பின்பற்றுவீர்கள். இல்லறத்துணை ஆதரவு நம்பிக்கை தரும். |
| மிதுனம் | சிலரது பேச்சு, உங்களை சங்கடப்படுத்தும். விலகுவதால், பகை தவிர்க்கலாம். தொழிலில், வேலைப் பளுவும் அலைச்சலும் இருக்கும். பணவரவில் தாமதம். உடல் நலத்திற்கு சிகிச்சை பெற நேரும். வெளியூர்ச் செய்தி ஆசுவாசம். |
| கடகம் | அவசர வேலை ஒன்று வரலாம். மேம்போக்காக விடுவீர்கள். தொழிலில், உள்ள அனுகூலத்தை பாதுகாப்பது நல்லது. வரவை விட செலவு கூடும். இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம். நண்பருடன் அரட்டையும் ஓய்வும் விரும்புவீர்கள். |
| சிம்மம் | பேச்சில் வசீகரம் நிறைந்திருக்கும். நண்பருக்கு உதவுவீர்கள். தொழிலில் இலாபம் அதிகரிக்கும். பணவரவில் முன்னேற்றம். குடும்பத்தினர் நலனுக்கு கூடுதல் நேரம் செலவிடுவீர்கள். விருந்து, விசேஷத்தில் கலந்து கொள்வீர்கள். |
| கன்னி | மனம், செயலில் பதற்றம் இருக்கும். சூழ்நிலை உணர்ந்து பேசுவது நல்லது. தொழில், தாமத கதியில். சேமிப்பு செலவுக்கு பயன்படும். கண்களின் பாதுகாப்பில் கவனம். எதிர்காலம் குறித்து கவலையுடன் சிந்திப்பீர்கள். பக்தியில் நாட்டம். |
| துலாம் | சமயோசிதமாக உங்கள் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிக் கொள்வீர்கள். வாழ்க்கைத்தரம் மேம்படும். தொழில், வியத்தகு அளவில் முன்னேற்றம். ஆதாய பணவரவு. சமூகத்தில் புகழ் வரும். குடும்பத்துடன், சுற்றுலாவுக்குத் திட்டம். |
| விருச்சிகம் | இடையூறாக இருந்தவர், விலகிப் போவார். மன சஞ்சலம் விலகி, வேலையில் ஆர்வம் கொள்வீர்கள். தொழில் வளர்ச்சி அதிகரிக்கும். சராசரி பணவரவு. கடன் மீளும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள். |
| தனுசு | நண்பர் ஒருவர், எதிர்பாராத உதவி வழங்குவார். தேங்கியிருந்த வேலை, நிறைவேறும். தொழில் வளர்ச்சி திருப்திகரம். உபரி பணவரவு. வீட்டுப் பொருள் வாங்குவீர்கள். அரச வகையில் அனுகூலம் வரும். வழக்கு விவகாரத்தில் சாதக தீர்வு. |
| மகரம் | நீங்கள் பெறும் கௌரவம் சிலரை பொறாமைப்படுத்தும். விலகி, மன அமைதியையும், நேரத்தையும் பாதுகாப்பீர்கள். தொழில், சீராக அதிக முயற்சி உதவும். சராசரி பணவரவு. தாயின் தேவை அறிந்து செய்வீர்கள். பிள்ளைகளால் பெருமை. |
| கும்பம் | மனதில் சஞ்சலம் ஏற்படலாம். குடும்பத்தினரிடம், விரக்தியுடன் பேசுவதை தவிர்க்கவும். தொழில், போட்டி அதிகரிக்கும். சுமாரான பணவரவு. பகட்டுக்காக பயன் தராத பொருள் வாங்க வேண்டாம். எதிர்கால முன்னேற்றத்திற்கான சிந்தனை. |
| மீனம் | மனதில் இருந்த தயக்கம் விலகும். அதிக நன்மை கிடைக்கும். தொழில், முன்னேற்றம் பெறும். உபரி பணவரவு. உத்தியோகத்தர்களுக்கு பாராட்டும் பதவியும் கிடைக்கும். உறவினர்களின் வருகையால், குடும்பத்தில் சந்தோஷம். |

## ஐ.பி.எல். துளிகள்



தொடர்ச்சியான வெற்றிகளால் நாங்கள் மெத்தனமாக இருப்பதை நினைத்து போட்டிக்கு முன்பாக பிளமிங் (சென்னை அணியின் பயிற்சியாளர்) கவலைப்பட்டு கொண்டிருந்தார். 7 வெற்றிகளுக்கு பின்னர் அது நடந்துள்ளது. 139 ஓட்டங்களை நாங்கள் எடுத்திருக்க வேண்டும். துடுப்பாட்டத்தின் போது ஏற்றுக்கொள்ள முடியாத நிறைய தவறுகளை செய்துவிட்டோம். இது எங்களுக்கு ஒருஎச்சரிக்கை மணி. தொடக்கத்தில் நாங்கள் சிறப்பாக பந்து வீசினோம். ஆனால் இறுதி கட்டத்தில் சில தவறுகளை செய்துவிட்டோம். பிராவோ 2 ஓவர் பந்து வீசியிருப்பதாக நினைத்தேன். ஆனால் அப்போது அவர் ஒரு ஓவர் மட்டுமே வீசியிருந்துள்ளார் என சென்னை சூப்பர் கிங்ஸ் அணி கப்டன் டோனி தெரிவித்தார்.



இது எங்களுக்கு முக்கியமான ஆட்டம் என்றாலும், சாதாரணமான ஆட்டமாகவே எடுத்துக் கொண்டோம். ஆடுகளம் வறண்டு போய் இருந்தது. அடிப்பதற்கு ஏதுவாக பந்து துடுப்புக்கு வரவில்லை. 140 ஓட்டங்கள் என்பது ஓரளவு நல்ல ஓட்ட எண்ணிக்கை தான். ஜோன்சன் அருமையாக பந்து வீசினார். போலாட் காயமடைந்து வெளியேறியபோது, கவலைப்பட்டேன். ஆனால் அவர் உடனடியாக களம் திரும்பியதுடன், ரெய்னாவின் பிடியைச் சிறப்பாக செய்து அசத்தி விட்டார். அது தான் போலாட். தொடர்ந்தும் அசத்துவோம் என மும்பை இந்தியன்ஸ் அணிக் கப்டன் ரோகித் சர்மா தெரிவித்தார்.



மும்பை அணியை 130 முதல் 140 ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்தியது சிறந்த முயற்சி. எங்களது துடுப்பாட்ட வரிசையைப் பார்க்கும் போது, இதை எளிதாக எடுத்திருக்கலாம். ஆனால் இந்த நாள் எங்களது துடுப்பாட்ட வீரர்களுக்கு மோசமான நாளாக அமைந்து விட்டது. வீரர்கள் விழித்துக்கொள்ள இதுவே சரியான நேரம். ஆடுகளத்தை குறை சொல்ல முடியாது. அது ஓரளவு நன்றாகத்தான் இருந்தது என சென்னை அணியின் பயிற்சியாளர் பிளமிங் தெரிவித்தார்.



சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கு எதிரான இந்த ஆட்டம் எங்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. ஹைதராபாத்திடம் நாங்கள் மோசமாக தோற்றோம். அதனை மாற்றும் விதமாக சென்னை சூப்பர் கிங்ஸ் அணியை அதிரடியாக வீழ்த்தியுள்ளோம்.சென்னைக்கு எதிராக நாங்கள் ஆதிக்கம் செலுத்தி வீழ்த்தியதால் நம்பிக்கை அதிகரித்துள்ளது. அடுத்து வரும் போட்டிகளில் சிறப்பாக விளையாட முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு அதிகமாகவே உள்ளது. லீக் சுற்று நிறைவை நெருங்கி வருகிற நேரத்தில் ஒவ்வொரு ஆட்டத்திலும் வெற்றி பெற முயற்சிப்போம் என ஆட்டநாயகன் விருது வென்ற மும்பை இந்தியன்ஸ் அணி வீரர் ஜோன்சன் தெரிவித்தார்.



இந்த வெற்றி உண்மையிலேயே சிறப்பான வெற்றி. நாங்கள் பந்துகளை எதிர்கொண்டு ஓட்டங்களைக் குவிப்பதில் மீண்டு வந்துள்ளோம். இது போன்று சிறப்பாக விளையாடினால் 200 ஓட்டங்களைக்கூட எதிர்கொள்வது சாத்தியமானதாகும். இது துடுப்பாட்ட வீரர்களுக்கு சிறப்பான ஆடுகளம். பந்து வீச்சாளருக்குத்தான் சிரமம். இளம் வீரர்கள் சிறப்பாக விளையாடி வெற்றி பெற வைத்தனர். என ராஜஸ்தான் றோயல்ஸ் அணி கப்டன் ராகுல் ராவிட் தெரிவித்தார்.



நாங்கள் சிறப்பாகவே விளையாடினோம். மேலும், இரண்டு ஓவர்கள் சிறப்பாக வீசியிருந்தால் எங்களுக்கு நன்றாக அமைந்திருக்கும். வெற்றியின் விளிம்பு வரை வந்து தோற்றது ஏமாற்றம் அளிக்கிறது. நாங்கள் நடுவரிசை ஓவர்களில் விக்கெட்டுகளை கைப்பற்றாததும் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியுடனான தோல்விக்கு காரணம். அடுத்து வரும் போட்டிகளில் வெற்றிக்காகப் போராடுவோம் என புனே வாரியர்ஸ் அணிக் கப்டன் பின்ச் தெரிவித்தார்.

# ஆறாவது ஐ.பி.எல். தொடர் சொதப்பிய இலங்கை வீரர்கள்



ஆறாவது பிரிமியர் தொடரில், இலங்கை வீரர்களின் செயற்பாடுகள் பெரும் ஏமாற்றமாக அமைந்துவிட்டது. இதனால், பல வீரர்கள் அந்தந்த அணியில் இருந்து காணாமல் போய்விட்டனர்.

இந்தியாவில் நடக்கும் பிரிமியர் தொடரில், பஞ்சாப் தவிர, 8 அணிகளில் இலங்கை சார்பில் மொத்தம் 13 பேர் பங்கேற்றனர். இலங்கையில் நடந்த கடைசி கட்ட போரில் தமிழர்கள் கொல்லப்பட்டதால், தொடக்கத்தில் இருந்தே தமிழக மண்ணில் காலடி வைக்க இலங்கை வீரர்களுக்கு அனுமதி கிடைக்கவில்லை.

இதனால், சென்னை அணியில் இடம் பெற்றிருந்த குலசேகரா, தனஞ்சயா இருவரும் போட்டிகளில் பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டது. பெங்களூர் அணியில் இருந்த முரளிதரன், 4 போட்டியில் 2 விக்கெட் மட்டும் வீழ்த்த, அத்துடன் மீண்டும் அணியில் இடம் பெறவில்லை. டில்சன் இதுவரை 76 ஓட்டங்கள் தான் (5 போட்டி) எடுத்துள்ளார்.

புனே அணியின் கப்டன் மத்தியூஸ், 5 போட்டியில் 52 ஓட்டங்கள், ஒரு விக்கெட் மட்டும் வீழ்த்த, பின்ச்சிடம் கப்டன் பொறுப்பைக் கொடுக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார். அஜந்தா மெண்டிஸ், ஒரு போட்டியுடன் (1 விக்.,) ஒதுக்கப்பட்டார்.

டில்லி அணியின் ஜீவன் மெண்டிஸ், 2 போட்டியில் 12 ஓட்டங்கள் மட்டும் எடுத்தார். கப்டனாக உள்ள ஜெயவர்த்தனாவும் (209 ஓட்டங்கள்) அணியை வெற்றிபெற வைப்பது எப்படி தெரியா-மல் திணறுகிறார்.

ராஜஸ்தானின் குஷல் பெரேரா (இரு போட்டி, 14 ஓட்டங்கள்), கொல்கத்தாவின் சேனநாயக்க (5 போட்டி, 5 விக்.,) அப்படியே அணியில் இருந்து ஓரங்கட்டப்பட்டனர். ஹைதராபாத் அணி கப்டன் சங்ககரா, 6 போட்டியில் 88 ஓட்டங்கள் மட்டும் எடுத்து, துடுப்பாட்டத்தில் படுமோசமாக சொதப்புகிறார்.

இந்த அணியில் திசரா பெரராவும் (144 ஓட்டங்கள்) சொல்லிக்கொள்ளும்படி இல்லை. மும்பை வேகப்பந்து வீச்சின் முதுகெலும்பு என்றழைக்கப்பட்ட மலிங்க, 6 போட்டியில், 5 விக்கெட் மட்டும் வீழ்த்தி, பல்போன பாம்பாக உள்ளார்.

மீதமுள்ள போட்டிகளிலும் இலங்கை வீரர்களின் இதே நிலை தொடரும் பட்சத்தில், அடுத்த தொடரில் சென்னை மட்டுமல்ல, எந்த அணியும் இவர்களை ஏலத்தில் எடுக்காது.

## ரொனால்டோ அதிரடி வென்றது ரியல் மட்ரிட்

(மட்ரிட்)

ரியல் வல்லடாயிட் அணிக்கு எதிரான லா லிகா கால்பந்து தொடரின் லீக் போட்டியில் ரியல் மட்ரிட் அணி வெற்றி பெற்றது.

ஸ்பெயினின் லா லிகா கால்பந்து தொடர் நடக்கிறது. இதன் லீக் போட்டியில் ரியல் மட்ரிட், ரியல் வல்லடாயிட் அணிகள் மோதின. போட்டியின் முதற்பாதியில் . ரியல் வல்லடாயிட் அணிக்கு ஆஸ்கர் (8ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்தார். இதற்கு ரியல் மட்ரிட் அணியின் ஏஞ்சல் டி மிரியா (26ஆவது நிமிடம்) பதிலடி கொடுத்தார். தொடர்ந்து மட்ரிட் அணியின் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ (32 ஆவது நிமிடம்) மற்றொரு கோல் அடித்தார். இதற்கு ரியல் வல்லடாயிட் அணியின் சேவி (35 ஆவது நிமிடம்) பதிலடி கொடுத்தார். இதனால் முதல் பாதியின் முடிவில் போட்டி 2-2 என சமநிலை வகித்தது.

இரண்டாவது பாதியில் அசத்தல் ஆட்டத்தை வெளிப்படுத்திய ரியல் மட்ரிட் அணிக்கு காகா (49 ஆவது நிமிடம்), கிறிஸ்டியானோ ரொனால்டோ (70 ஆவது நிமிடம்) ஆகியோர் கோல் அடித்து அணியின் வெற்றியை உறுதி செய்தனர். ரியல் வல்லடாயிட் அணிக்கு லூயிஸ் (87 ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்து ஆறுதல் அளித்தார். முடிவில், ரியல் மட்ரிட் அணி 4-3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

## சர்வதேச கிரிக்கெட் குழுவில் குமார் சங்கக்கார, ரஞ்சன்

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் கிரிக்கெட் குழுவில் இலங்கையர்களான குமார் சங்கக்கார, ரஞ்சன் மடுகல்ல ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இருவரும் கடந்த தடவையும் இப்பதவி வகித்த நிலையில், இம்முறையும் இப்பதவிக்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். தற்போது விளையாடிவரும் வீரர்களுக்கான 2 பிரதிநிதிகளில் ஒருவராக குமார் சங்கக்காரவும், போட்டி மத்தியஸ்தர்களுக்கான பிரதிநிதியாக ரஞ்சன் மடுகல்லவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இதில் ரஞ்சன் மடுகல்ல சர்வதேசக் கிரிக்கெட் சபையின் பிரதான போட்டி மத்தியஸ்தராகப் பதவி வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. அறிவிக்கப்பட்டுள்ள குழுவில் குறிப்பிடத்தக்க மாற்றமாக வீரர்களின் இரண்டாவது பிரநிதியாக இந்திய அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளரும், நேர்முக வர்ணனையாளருமான லக்ஷ்மன் சிவராமகிருஷ்ணன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இதற்கு முன்னர் பதவி வகித்த டிம் மே இற்குப் பதிலா-கவே லக்ஷ்மன் சிவராமகிருஷ்ணன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

சர்வதேசக் கிரிக்கெட் வீரர்களின் அமைப்பின் தலைவராக டிம் மே, இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையால் போட்டிக்கு அனுப்பப்பட்ட லக்ஷ்மன் சிவராம கிருஷ்ணனால் 6-4 என்ற அணித்தலைவர்களின் வாக்கு களால் தோற்கடிக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. ஆரம்பத்தில் லக்ஷ்மன் சிவராம கிருஷ்ணனுக்கு 2-8 என்ற ஆதரவு நிலையே காணப்பட்ட போதிலும், இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் அழுத்தத்தின் காரணமாக இலங்கை, பாகிஸ்தான், மேற்கிந்தியத் தீவுகள், பங்களாதேஷ் ஆகிய நாடுகளின் அணித்தலைவர்கள் லக்ஷ்மன் சிவராமகிருஷ்ணனுக்கு ஆதரவாக வாக்களித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் கிரிக்கெட் குழு:, தலைவர்: அனில் கும்ப்ளே (முன்னாள் இந்திய அணித்தலைவர்), சிரேஷ்ட அலுவலர்கள்: அலன் ஐசாக் (சர்வதேசக் கிரிக்கெட் சபைத் தலைவர், டேவிட் றிச்சர்ட்ஸன் (சர்வதேசக் கிரிக்கெட் சபை பிரதம நிறைவேற்று அதிகாரி), முன்னாள் வீரர்களின் பிரதிநிதிகள்: மார்க் டெய்லர் (முன்னாள் அவுஸ்திரேலிய அணித்தலைவர், அன்ட்ரூ ஸ்ட்ரோஸ் (முன்னாள் இங்கிலாந்து அணித்தலைவர்), தற்போதைய வீரர்களின் பிரதிநிதிகள்: குமார் சங்கக்கார (இலங்கை வீரர்), லக்ஷ்மன் சிவராமகிருஷ்ணன் (இந்திய முன்னாள் வீரர், நேர்முக வர்ணனையாளர்), முழுமையான அங்கத்துவமுள்ள நாட்டின் பயிற்றுவிப்பாளர் பிரதிநிதி: கரி கேர்ஸ்டன் (தென்னாபிரிக்கா), பெண்கள் கிரிக்கெட்டின் பிரதிநிதி: கிளெயர் கொன்னொர் (முன்னாள் இங்கிலாந்துப் பெண்கள் அணித்தலைவி), கிரிக்கெட் சபை பிரதிநிதி: டேவிட் வைட் (நியூசிலாந்துக் கிரிக்கெட் சபை பிரதம நிறைவேற்று அதிகாரி), உப அங்கத்துவ நாட்டின் பிரதிநிதி: ட்ரென்ட் ஜோன்சன் (அயர்லாந்து வீரர்), ஊடகப் பிரதிநிதி: ரவி சாஸ்திரி (இந்திய முன்னாள் வீரர், நேர்முக வர்ணனையாளர்), நடுவர் பிரதிநிதி: ஸ்டீவ் டேவிட் (அவுஸ்திரேலிய நடுவர்), போட்டி மத்தியஸ்தர் பிரதிநிதி: ரஞ்சன் மடுகல்ல (சர்வதேசக் கிரிக்கெட் சபையின் பிரதம போட்டி மத்தியஸ்தர்)

## பதிலடி கொடுத்தது சிம்பாப்வே



பங்களாதேஷ் அணிக்கெதிரான 2ஆவது ஒருநாள் போட்டியில், சிம்பாப்வே அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.சிம்பாப்வே சென்றுள்ள பங்களாதேஷ் அணி, மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடரில் ஆடி வருகின்றது. முதல் போட்டியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி 1-0 என முன்னிலை வகித்தது. இரண்டாவது போட்டி புலவாயோ நகரில் நேற்று முன்தினம் நடந்தது. நாணயச் சுழற்சியில் வென்ற சிம்பாப்வே அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. முதலில் ஆடிய பங்களாதேஷ் அணி ஆரம்பத்தில் தமிம் இக்பால், முகமொட் அஷ்ரபுல் ஆகியோர் இழந்து தடுமாறியது. இருப்பினும் அப்துர் ரசாக், கப்டன் முஷ்பிகுர் ரஹீம், நசீர் உசைன், முகமதுல்லா ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தில் கௌரவமான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் பங்களாதேக்ஷ் அணி 50 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 252 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நசீர் உசைன் 36, சாகிப் அல் ஹசன் 34, முக்ஷபிகுர் ரஹீம் 26, முகமதுல்லா 31, அப்துர் ரசாக் 53 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் எல்டன் சிகும்புரா மூன்று, டென்டாய் சடாரா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.பதிலுக்கு 253 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சிம்பாப்வே அணி வில்லியம்ஸ், சிபண்டா வோலர் ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் வெற்றிபெற்றது. இறுதியில் சிம்பாப்வே அணி 47.5 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் வில்லியம்ஸ் 78, வோலர் 39 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றனர். மற்றும் சிபண்டா 49, பிரண்டன் டெய்லர் 37, சிகந்தர் ரஜா 23 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் ஷபியுல் இஸ்லாம் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். போட்டியின் ஆட்டநாயனகாக வில்லியம்ஸ் தெரிவானார். இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் இரு அணிகளும் 1-1 என சமநிலையில் உள்ளன. . மூன்றாவது மற்றும் கடைசி போட்டி நாளை மறுதினம் புலவாயோ நகரில் நடக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இன்றைய ஆட்டம்



Season 6

IPL

ராஜஸ்தான் றோயல்ஸ் எதிர் டில்லி டேர்டெவில்ஸ்
இடம் : ஜெய்ப்பூர்
மாலை 4.00 மணி

மும்பை இந்தியன்ஸ் எதிர் கொல்கத்தா நைட் ரைடர்ஸ்
இடம் : மும்பை
இரவு 8.00 மணி

# பிரதேச மட்ட விளையாட்டு விழா

# 10ஆவது முறை மகுடம் சூடியது மட்டுவில் வளர்மதி



மகுடம் சூடிய மட்டுவில் வளர்மதி விருந்தினர்களுடன்...



நாவற்குழி அண்ணா



மட்டுவில் ஐங்கரன்

(மட்டுவில்)

தென்மராட்சிப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழாவில் மட்டுவில் வளர்மதி அணி தொடர்ந்து பத்தாவது முறை சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

தென்மராட்சிப் பிரதேச செயலகப் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா கடந்த நான்காம் திகதி மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இறுதி நாள் நிகழ்வில் தடகள விளையாட்டு நிகழ்வுகளும் மற்றும் கால்பந்து, கரப்பந்து போட்டிகளின் இறுதி ஆட்டங்களும் இம்பெற்றன.

கால்பந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டியில் நாவற்குழி அண்ணா அணியும், வரணி செல்வா அணியும்மோதின. இதில்இரு அணிகளும் சிறப்பான முறையில் ஆடியபோதும் நாவற்குழி அண்ணா அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக நாவற்குழி அண்ணா அணியைச் சேர்ந்த அன்ரனிதாஸ் தெரிவு செய்யப்பட்டார்.

தொடர்ந்து நடைபெற்ற கரப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டியில் மட்டுவில் ஐங்கரன் அணியும், கச்சாய் ஸ்ரீமுருகன் அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே அசத்திய மட்டுவில் ஐங்கரன் அணி 2-0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக ஐங்கரன் அணியைச் சேர்ந்த வினோதன் தெரிவு செய்யப்பட்டார்.

தொடர்ந்து தடகளப் போட்டிகள் நடைபெற்றது. இதில் வீர, வீராங்கனைகளுக்கான 100 மீற்றர், தடை தண்டால் போன்ற போட்டிகள் இடம்பெற்றன. இவ்விளையாட்டு விழாவில் மட்டுவில் வளர்மதி அணி 167 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இதன் மூலம் தொடர்ந்து பத்தாவது தடவையாக பிரதேச செயலக விளையாட்டு விழாவில் வெற்றி பெற்ற கழகம் என்ற சிறப்பைப் பெற்றுக்கொண்டது. கைதடி சரஸ்வதி அணி இரண்டாவது இடத்தைப் பிடித்துக் கொண்டது.

இப்போட்டியில் சிறந்த தடகள மற்றும் கள வீரராக மட்டுவில் வளர்மதி கழகத்தைச் சேர்ந்த ரஜீகரன், சிறந்த கள வீராங்கனையாக மட்டுவில் வளர்மதி கழகத்தைச் சேர்ந்த சாதனா, சிறந்த தடகள வீராங்கனையாக மட்டுவில் வளர்மதி கழகத்தைச் சேர்ந்த அனுசா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி அ. சாந்தசீலன் தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புத் தலைவரும், ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சில்வெஸ்திரி அலன்ரின், சிறப்புவிருந்தினராக வடமாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் எஸ்.எம். ராஜாரட்ணசிங்க ஆகியோர் கலந்து கொண்டு வெற்றியீட்டியோருக்குப் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தனர்.

மற்றும் தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களின் தலைவர், செயலாளர்கள், விளையாட்டு நலன்விரும்பிகள், விளையாட்டு ஆர்வலர்கள், ஆதரவாளர்கள், இரசிகர்கள் எனப் பலர் கலந்துகொண்டு போட்டியாளர்களுக்கு உற்சாகமூட்டினர்.

(118)

## பல்கலைக்கழகங்களுக்கிடையிலான மினி ஒலிம்பிக்

# கால்பந்தில் யாழ். பல்கலை தங்கம்

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களுக்கிடையிலான மினி ஒலிம்பிக் போட்டியின் கால்பந்தாட்டத்தில்யாழ். பல்கலைக்கழக அணி தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான 11ஆவது மினி ஒலிம்பிக் போட்டிகள் கடந்த இரண்டாம் திகதி மொறட்டுவப் பல்கலைக்கழகத்தில் ஆரம்பமானது.

அதில் யாழ். பல்கலைக்கழக அணி முதற் போட்டியில் கிழக்கு மாகாணப் பல்கலைக்கழக அணியை எதிர்கொண்டது.இதில் சிறப்பான முறையில் செயற்பட்ட யாழ். பல்கலைக்கழக அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது போட்டியில் ராஜரட்டைப் பல்கலைக்கழக அணியுடன் யாழ். பல்கலைக்கழக அணி மோதியது. இதில் 6-0 என்ற கோல் கணக்கில் அசத்திய யாழ்.பல்கலைக்கழகம் அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. தொடர்ந்து உவா வெல்லஸ பல்கலைக்கழக அணியுடன்மோதிய யாழ். பல்கலைக்கழகம் 7-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிப்போட்டிக்குத் தகுதிபெற்றது.

காலிறுதிப் போட்டியில் வயம்ப பல்கலைக்கழக அணியும், யா்ழ். பல்கலைக்கழக அணியும் மோதின. இதில் இரு அணிகளுமே சிறப்பான முறையில் ஆடின. இருப்பினும் யாழ். பல்கலைக்கழக அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணியும், கொழும்பு பல்கலைக்கழக அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே தாக்குதல் ஆட்டத்தை வெளிப்படுத்திய யாழ். பல்கலைக்கழக அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

இறுதிப்போட்டி நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றது. இதில் யாழ். பல்கலைக் கழக அணியும், மொறட்டுவ பல்கலைக் கழக அணியும் மோதின. இதில் முற்பாதி ஆட்டம் ஆரம்பமாக இரு அணிகளும் கோல்களைப் பெற்றுக்கொள்ளும் முனைப்புடன் செயற்பட்டன. இருப்பினும் முற்பாதி ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழக வீரர்களான ஞானரூபன்,சிறீன் ஆகியோர் ஒவ்வொருகோலைப் போட்டு அணியை முன்னிலைப்படுத்தினர். முற்பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, யாழ். பல்கலைக்கழக அணி 2-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

பிற்பாதி ஆட்டம் ஆரம்பமாகி சிறிது நேரத்தில் மொறட்டுவ பல்கலைக்கழக அணி ஒரு கோலைப் போட்டது. இதன் பின்னர் சுதாகரித்துக் கொண்ட யாழ். பல்கலைக்கழக அணி, ஜீவகுமார், ஜவாகர் ஆகியோரின் தாக்குதல் ஆட்டத்தின் மூலம் இரண்டு கோல்கலை அடுத்தடுத்துப் பெற்றுக் கொண்டது. இறுதியில் யாழ். பல்கலைக்கழக அணி 4-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றிக் கொண்டது. (எஸ்.பி.)

# சுதர்சன் அதிரடி ஆட்டம்

## வென்றது ஸ்ரான்லி பழைய மாணவர் அணி

(யாழ்ப்பாணம்)

சுதர்சனின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய பழைய மாணவர் அணி இலகுவாக வெற்றிபெற்றது.

முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மற்றும் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணிகளுக்கிடையிலான நண்பர்களின் போர் என வர்ணிக்கப்படுகின்ற இரண்டு நாள் இனிங்ஸ் போட்டியைத் தொடர்ந்து, இரு பாடசாலைகளின் பழைய மாணவர் அணிகளுக்கிடையில் இடம்பெறும் ஒரு நாள் கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியின் பழைய மாணவர் அணி வசீகரன், கஜதீபன் ஆகியோரின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இருப்பினும் அருண்ராஜ், லவன் 'ஆகியோர் பொறுமையாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை கௌரவமான நிலைக்கு இட்டுச் சென்றனர். இறுதியில் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி அணி 33 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 144 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அருண்ராஜ் 33, லவன் 22 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் வசீகரன் நான்கு, கஜதீபன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 145 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய பழைய மாணவர் அணி, சுதர்சனின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் இலகுவான வெற்றிபெற்றது. இறுதியில் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய பழைய மாணவர் அணி 16.4 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் அதிரடியில் அசத்திய சுதர்சன் 46 பந்துகளை எதிர்கொண்டு எட்டு சிக்ஸர்கள், ஆறு பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 87 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் அனோஜ் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இப்போட்டியின் ஆட்டநாயகனாகவும், சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய பழைய மாணவர் அணியைச் சேர்ந்த சுதர்சன், சிறந்த பந்து வீச்சாளராக அதே அணியைச் சேர்ந்த வசீகரன், சிறந்த களத்தடுப்பாளராக முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி பழைய மாணவர் அணியைச் சேர்ந்த அனோஜ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (எஸ்.பி.)

# வெள்ளை நிற மேற்குலகை புரிந்துகொள்வதற்கான இன்னொரு தருணம்!

வலுவற்ற பற்றரி காரணமாக கடந்த ஜனவரி 16ஆம் நாளிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போயிங் கிறீன்லைனர் விமானம், 2013 ஏப்பிரல் 19ஆம் நாள், புதிய பற்றரியுடனான தனது முதலாவது பரீட்சார்த்தப் பறப்பை, எதியோப்பிய அடிஸ் அபாபாவில் இருந்து கென்யா நைரோபி வரை வெற்றிகரமாக முடித்துக்கொண்டது. இதை "ஆகா..." "ஓகோ..." என்று கொண்டாடிக் குதூகலித்த வர்கள் அமெரிக்க ஃப்பெடரல் அவியேசன் அற்மினிஸ்ட்ரேசன் மட்டுமல்ல, எதியோப்பிய ஏயார்லைன் முதல் ஆசிய (ஜப்பான், மத்திய கிழக்கு நாடுகள், இந்தியா என்று) விமான நிறுவனங்கள் பலவும் இதைக் கொண்டாடி மகிழ்ந்தன. இந் நாடுகள் எல்லாமே போயிங் கிறீன்லைனர் விமானத்தை ஏற்கனவே கொள்முதல் செய்திருந்தபோதும் கடந்த 3 மாதங்களுக்கு மேலாக பறப்பைக் கைவிட்டு விமான நிலையங்களின் தரையை அலங்கரித்திருந்தன!

புதிய நூற்றாண்டின் ஆரம்பத்தில் தயாரிப்புப் பணிகளில் ஈடுபட்டு, ஆண்டு 2005இற்குப் பின் உருவான ஐரோப்பியத் தயாரிப்புக் களான ஏயார் பஸ் ஏ 330, ஏ 380 ஆகிய விமானங் களுக்குப் போட்டியாக உருவாக்கப்பட்டதுதான் அமெரிக்க போயிங் விமானங்கள்.

ஏயார் பஸ் தொடர்ச்சியாக 16903 கிலோ மீட்டர் தூரம் பறந்தபோது, கிறீன்லைனர் 19800 கி.மீ. தூரத்தைத் தொடர்ந்தது! எடைகுறைந்த மற்றீறியல்களை அதிகளவில் உள்ளடக்கியதால், இது எரிபொருள் சிக்கனத்தையும் (20வீதம்) நீண்ட தூரம் பயணிக்கக்கூடிய வலுவையும் கொண்டிருந்ததாகக் கணிக்கப் பட்ட நிலையில், ஆசிய, ஆபிரிக்க மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் பலவும் இவற்றை வாங்கியதில் வியப்பில்லை!

2008 மே இல் ஆரம்பிக்கப் பட்டு 2009 டிசம்பரில் இதன் தயாரிப்புப் பணிகளை முடித்துக்கொண்டு 2010இல் அதன் பரீட்சார்த்தப் பறப்பை மேற்கொண்டபோது அது தீப்பிடித்ததையடுத்து பாதுகாப் பாக தரையிறக்கப்பட்டது! இதையடுத்து இதன் பரீட்சார்த்தப் பறப்பு மீண்டும் 2011 நடுப்பகுதியில் வெற்றி கரமாக நிகழ்ந்ததையடுத்து, 2011 ஒக்ரோபர் 26இல் பயணிகளுடனான முதலாவது பறப்பு நிகழ்ந்தேறியது. ஜப்பான் றேய் கோர்னர் நிறுவனம் இவ் விமானத்தை முதலில் வாங்க ஆரம்பித்த தைத் தொடர்ந்து ஏனைய ஆசிய, ஆபிரிக்க நாடுகளும் இவற்றைக் கொள்வனவு செய்வதில் அதிகம் ஆர்வம் காட்டின.

சுமார் மூன்று மாத இடைவெளிக்குப்பின்னான போயிங் கிறீன் லைனரின் மீள் பரீட்சார்த்தப் பறப்பில் அவதானிக்கப்படவேண்டிய விடயம், டிப்பாச்சர் (புறப்பாடு), அர்றைவல் (சேர்தல்) இரண்டுமே ஆபிரிக்க நாடுகளை மையப்படுத்திய வகையில் தான் நிகழ்ந்திருக்கிறது! இது ஒன்றும் தற்செயலான நிகழ்வல்ல, வெள்ளைநிற மேற்குலக மூளையில் நன்றாகப் பதிந்த விடயம், இவ்வித பரீட்சார்த்தப் பறப்பில் தப்பித்தவறிக்கூட எந்தவொரு வெள்ளையனும் தொற்றிவிடக்கூடாது என்பதுதான். மற்றொன்று, அமெரிக்காவிலோ ஐரோப்பாவிலோ இப் பரிசோதனை முயற்சியை மேற்கொண்டிருந்தால்... வெள்ளையர்கள் இவ் விமானத்தில் 'ஏறுவதற்கு முற்பட்டிருக்க மாட்டார்கள் என்பது, இப் பரீட்சார்த்தப் பறப்பில் போயிங் விமான நிறுவனத்தின், மார்க்கெற்றிங் டிப்பாட்மென்ரின் வைஸ் பிறசிடன்ட் றன்டி றின்செத் அவர்களும் கூடவே பறந்தார் என்பது பரப்புரையாக்கப்பட்டிருக்கிறது! ஆனால் இங்கு கேள்வி... றன்டி றின்செத்தும் சரி, விமான ஓட்டியும் சரி ஆபத்து நிலையில், தம்மைப் பாதுகாத்துக்கொள்ளும் பொருட்டு எவ்வளவு பயிற்சிகளுக்கூடாக தம்மை தயார்ப்படுத்தியிருப்பார்கள் என்பதுதான்?

மேற்குலகு, புதியவகை மருந்துகளைத் தயாரித்தபோது அதன் பரீட்சார்த்தக் களமாக ஆசிய, ஆபிரிக்க மக்களைப் பயன்படுத்துவது ஒன்றும் இரகசியமல்ல! ஆரம்பகால அணுஉலைக் கழிவுகளை புதைக்கும் இடமாகவும் இதே நாடுகளே பயன்படுத்தப்பட்டன!

இன்று வெள்ளை நிற மேற்குலகு அதன் புதிய வகை தொழில் நுட்பங்களைப் பரீட்சிப்பதற்கும் ஆசிய, ஆபிரிக்க நாடுகளையே தமது களமாக பயன்படுத்த முற்படுகின்றன என்பதே இங்கு மையக்கரு!

**யோகா - ராஜன்**




# குரங்குச் சிந்தனை!



விலங்குகளில் நமது நெருங்கிய சொந்தக்காரர்கள் சிம்பன்ஸிகள்தான் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். அவற்றின் பல செய்கைகள் மனிதனு டையது போன்றே இருக்கின்றன.

சிம்பன்ஸிக்கு சிந்தனையைப் பற்றி சிந்திக்கத் தெரி யும் என்று இரு அமெரிக்க பல்கலைக்கழகங்களில் நடாத்திய ஆராய்ச்சியில் தெரிய வந்திருக்கிறது. சிந்தனை என்கிற ஒரு மனநிலை மனிதனுக்கு மட்டும்தான் உண்டு என்கிற கருத்து மாறி சில ஆண்டுகள் ஆகிவிட்டன. விலங்குகளுக்கு சிந்தனை பற்றி சிந்திக்கும் சக்தி உண்டா? என்ற ஆராய்ச்சி சில ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது.

அமெரிக்காவில் ஜோர்ஜியா மாநில பல்கலைக்கழகத்தில் உள்ள மொழி ஆய்வு மையத்தில் இது பற்றிய முக்கிய ஆராய்ச்சிகள் நடக்கிறது. இங்கு சிம்பன்ஸிகளுக்கு அடையாளம் தெரிந்து கொள்ளுதல் தொடர்பாகப் பலவிதப் பயிற்சிகள் கொடுத்திருக்கிறார்கள். ஒரு பொருளுக்கு அடை யாளமாக ஒரு சின்னம் என்கிற வகையில் ஒரு சைகை-சின்னம் அடிப்படையிலான மொழியை உருவாக்கியிருக்கிறார்கள். அவற்றைக் கொண்டே சிம்பன்ஸிகளுடன் அங்குள்ள விஞ்ஞானிகளால் ஒரு வகைத் தகவல் பரிமாற்றம் செய்து கொள்ள முடிகிறது. ஒரு பொருளைப் பற்றி சிம்பன்ஸிகள் சிந்திக்கின்றனவா என்பதை சோதிக்க பழங்களை மறைத்து வைத்து கண்டுபிடிக்கச் செய்வது போன்ற சில விளையாட்டுகளை உருவாக்கியிருக்கிறார்கள்.

சரி, குரங்குக்கு சிந்தனை பற்றி சிந்திக்கத் தெரியுமா என்று தெரிந்துகொண்டு நமக்கு என்ன ஆகப் போகிறது என்று யோசிக்கிறீர்களா..? மனித குலத்தின் விசேஷ குணமான சிந்தனை ஆற்றல் எப்படித் தோன்றியது? அது எப்படி வளர்ச்சி பெற்றது? என்பதையெல்லாம் தெரிந்துகொள்ள இது போன்ற ஆராய்ச்சிகள் உதவுகின்றன.

# ஆணான டயானா!



பிரிட்டன் இளவரசி டயானா, தன்னுடைய, மனிதாபிமான செயல்களால், உலக மக்களின் இதயங்களில் இடம் பிடித்தவர். கடந்த, 1997இல், பாரிசில் நடந்த கார் விபத்தில், அவர் மரணமடைந்தார். அவருடன் மிக நெருங்கிப் பழகிய, பிரபல ஹொலிவுட் நடிகை ஷெலோ ரோகோஸ், தன், கடந்த கால நிகழ்வுகளை, the power of positive drinking என்ற புத்தகமாக வெளியிட்டுள்ளார். அதில், இளவரசி டயானாவைப் பற்றிய, சுவாரசியமான சம்பவங்களையும், எழுதியுள்ளார்.

கடந்த, 1988இல், தெற்கு லண்டனில் இருந்த, பிரபலமான இரவு விடுதிக்கு, டயானா செல்ல விரும்பியதாகவும், அதற்காக, டயானாவுக்கு ஆண் வேடமிட்டு, அங்கு அழைத்துச் சென்றதாகவும், ரோகோஸ் அந்தப் புத்தகத்தில் தெரிவித்துள்ளார். ஆண்கள் அணிவது போன்ற, மேலங்கியும், கண்களை மறைக்கும் வகையில் கறுப்புக் கண்ணாடியும், டயானாவுக்கு அணிவித்து, "பார்"இற்கு அழைத்துச் சென்றுள்ளனர். இதுகுறித்து, ரோகோஸ் கூறுகையில், "விடுதியில் உள்ளவர்கள், எந்த நேரத்திலும், இளவரசியை அடையாளம் கண்டுபிடித்து விடுவர் என, நினைத்தோம். கடைசிவரை, யாராலும் அவரை அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை. தான், ஒரு இளவரசி என்பதை மறந்து, அங்கிருந்த ஒவ்வொரு நொடியையும், சந்தோஷமாக அனுபவித்தார் டயானா..." என்று, தன் புத்தகத்தில் எழுதியுள்ளார் ரோகோஸ்.

# நாடுகள்... நடப்புகள்...


- இங்கிலாந்து தபால் முத்திரைகளில் அந்த நாட்டின் பெயர் இருக்காது.
- உலகிலேயே ஜப்பானியப் பெண்கள்தான் அதிக காலம் உயிர் வாழ்கிறார்கள்.
- சுரிநாம் நாட்டில் ஒரே ஒரு நீச்சல்குளம்தான் இருக்கின்றது. ஆனால் இந்த நாடு 1985-ஆம் ஆண்டு நடந்த ஒலிம்பிக் நீச்சல் போட்டியில் தங்கப்பதக்கம் ஒன்றை வென்றது.
- உலகில் மிக அதிகமாக பூக்கள் மலர்வது நெதர்லாந்து நாட்டில்தான்.
- துருக்கி நாட்டிலுள்ள இஸ்தான்புல் நகரில் மட்டும் 450 மசூதிகள் உள்ளன.
- பப்பாசிப் பழத்தின் தாயகம் மெக்சிக்கோ நாடு.
- உலகில் கட்டாயமாக வோட்டுப் போட வேண்டும் என்ற சட்டம் அவுஸ்ரேலியாவில் மட்டும்தான் உண்டு.
- இராணுவத்தை வைத்திருந்தாலும் சுவிட்சர்லாந்து நாடு இதுவரை வேறு எந்த நாட்டுடனும் போரிட்டதில்லை.
- தாய்லாந்து நாட்டில் மீன் சண்டை ஒரு பிரபலமான விளையாட்டு.






- அமெரிக்காவில் ஒவ்வொரு நிமிடமும் 12 கார்கள் தயாரிக்கப்படுகின்றன.
- மின்னல் தாக்குதலால் அதிக அளவில் பாதிக்கப்படும் நாடு பனாமா.
- ஜப்பானில் மாணவர்களுக்கு இரண்டு கை- களாலும் எழுதுவதற்குக் கற்றுக் கொடுக்கிறார்கள்.
- உலகம் முழுவதும் வர்த்தக ரீதியாகப் பயன்படுத்தப்படும் அன்னாசிப் பழங்களில் மூன்றில் ஒரு பகுதி ஹவாய் தீவில் இருந்துதான் வருகிறன.

# சின்னச் சின்னதாய்...









◗ பிரமீள் என்னும் பெயரிலும் மற்றும் பல புனைபெயர்களிலும் எழுதிய பிரபல கவிஞர் தரு.மு.சிவராம். அவரின் 74ஆவது பிறந்த நாளைக் கொண்டாடும் வகையில் அவரின் இலக்கியப் பங்களிப்புகளைக் கொண்ட பேஸ்புக்கை இணையத்தில் தொடங்கியிருக்கின்றனர் அவரது இரசிகர்கள்.

◗ பரதநாட்டியக் கலைஞர் தனஞ்செயன் முன்னணி நாளிதழ்கள் பலவற்றுக்கும் ஆசிரியருக்கு எழுதிய கடிதங்களைத் தொகுத்து ஒரு நூலாக வெளியிட்டுள்ளார்.

◗ பெண் கல்விக்காகப் பாடுபட்டு வரும் பாகிஸ்தானிய சிறுமி மலாலா யூசுஃப்ஸாய் குண்டடிபட்டு உயிர் தப்பியது தெரிந்த தகவல். தீவிர சிகிச்சைக்குப் பின் குணமடைந்த இவர், மீண்டும் பாடசாலை செல்லத் தொடங்கியது சமீபத் தகவல். இவருக்கு உலகின் பல இடங்களில் இருந்து ஆதரவும், நன்கொடைகளும் வந்து குவிந்து கொண்டேயிருக்கின்றன. மிகச் சிறிய வயதில் நோபல் பரிசுக்காகப் பரிந்துரைக்கப்பட்ட மலாலா, முதன்முதலாக ஐக்கிய நாடுகள் சபையில் உரையாற்றுகிறார். வரும் ஜுலை 12ஆம் திகதி அவரின் 16ஆவது பிறந்தநாள் அன்று ஐ.நா.வில் உரையாற்ற உள்ளார். ஜுலை 12ஆம் திகதி "மலாலா தினம்" என்று அழைக்கப்படலாம் என்ற கருத்தும் உண்டு.


◗ ஹில்டன் சங்கிலித் தொடர் ஹொட்டல்களின் தலைமை நிறைவேற்றதிகாரி கிறிஸ்டோபர் ஜே. ந்ஸீத்தா (50). வருடத்தில் 250 நாட்களுக்கு மேல் உலக நாடுகளில் உள்ள தங்களது ஹொட்டல்களைச் சுற்றிப் பார்க்கவே ஒதுக்குகிறார். 2007ஆம் ஆண்டில் C.E.O வாக பதவியேற்றதிலிருந்து இதுவரை 1100 புதிய ஹொட்டல்களை உருவாக்கியிருக்கிறார். 2016ஆம் ஆண்டிற்குள் இன்னும் 50 ஹொட்டல்களை நிறுவத் திட்டம் வைத்திருக்கிறார் இவர்.


◗ கணித மேதை ராமானுஜத்தின் வாழ்க்கை படமாகிறது. "ராமானுஜன்" என்ற பெயரில் உருவாகும் இப்படத்தை ஞானராஜசேகரன் எழுதி இயக்குகிறார். தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் உருவாகிறது. நடிகை சாவித்ரியின் பேரன், அபிநய் நாயகனாக நடிக்கிறார். மலையாள நடிகை பாமா ஹீரோயின். சுஹாசினி, நிழல்கள் ரவி, அப்பாஸ் உள்ளிட்டோர் முக்கிய பாத்திரங்களில் நடிக்கின்றனர். இசை, ரமேஷ் விநாயகம்.

◗ சினிமா தயாரிப்புப் பணியில் பல இளம் ஹீரோக்கள் இறங்கியுள்ளனர். தனுஷ் தயாரித்துள்ள "எதிர்நீச்சல்" இம்மாதம் வெளியாகியுள்ளது. விஜய் சேதுபதி தான் நடிக்கும் "சங்கு தேவன்" உட்பட சில படங்களைத் தயாரிக்கிறார். இதே போல் விமல், விதார்த் இருவரும் படத் தயாரிப்பில் ஈடுபட பேசி வருகின்றனர். சிவகார்த்திகேயனும் படம் தயாரிக்க உள்ளார். சித்தார்த் "காதலில் சொதப்புவது எப்படி" படத்தின் மூலம் விநியோக உரிமையைப் பெற்றிருந்தார். ஆர்யா "படித்துறை" படத்தின் மூலம் தயாரிப்பில் இறங்கியுள்ளார். விஷால் தற்போது "பாண்டிய நாடு" என்ற படத்தைத் தயாரிக்கிறார். அருள்நிதி உள்ளிட்ட ஹீரோக்கள் ஏற்கெனவே படத் தயாரிப்பில் உள்ளனர்.

# மகாபாரதத்திலிருந்து ஒரு குட்டிக்கதை







**மு**ன்னொரு காலத்தில் அவந்தி மாநகரை ஓர் அரசன் ஆண்டு வந்தான். அவனுக்கு ஒரு மகன் இருந்தான். செல்லமாக வளர்ந்து வாலிப வயதை அடைந்தான். காட்டிற்குச் சென்று வேட்டையாடுவதில் அவனுக்கு ஆர்வம் அதிகம்.

ஒரு நாள் வழக்கம்போல் காட்டிற்கு வேட்டையாடச் சென்றான். துணைவர்களும் கூடவே வந்தார்கள். பல விலங்குகளை அம்பு எய்து மாய்த்தான். அந்த உற்சாகத்தில் துணைவர்களை விட்டு, காட்டுப் பாதையில் தனியாகச் சென்றுவிட்டான். திக்குத் திசை தெரியவில்லை. அடர்ந்த காடு அது.

அந்திவேளை இருள்பரவத் தொடங்கியது. அரசகுமாரனை அச்சம் பற்றிக் கொண்டது. பசியும், களைப்பும் வேறு சேர்ந்து கொண்டன. காட்டைக் கடக்க வழி தெரியவில்லை. தவிப்புடன் அங்கும் இங்கும் அலைந்தான்.

அப்போது பயங்கரமான உறுமல் ஒலி கேட்டது. புலி ஒன்று தொலைவில் வருவது தெரிந்தது. குதிரையைப் புதர் மறைவில் அனுப்பிவிட்டு, தான் உயிர்தப்ப ஓடினான். புலி அவனைத் துரத்திக்கொண்டு வந்தது.

நல்லகாலம்! எதிரே அரசமரம் தெரிந்தது. பரபரப்புடன் அதன்மேல் ஏறிக்கொண்டான். உயரத்தில் அகலமான கிளையொன்றில் உட்கார்ந்து கொண்டான். அங்கே அவனுக்கு வேறொரு அதிர்ச்சி காத்திருந்தது. பெரிய கரடி ஒன்று அங்கே இளைப்பாறிக்கொண்டிருந்தது.

அரசகுமாரன் நடுங்கிப்போனான். கீழே மரத்தடியில் வாயைப் பிளந்து கொண்டு நின்றது புலி. அதற்குப் பசி. அரசகுமாரன் கரடியைப் பரிதாபமாகப் பார்த்தான். கரடியின் கண்களில் பரிவு தென்பட்டது. கரடி சொல்லிற்று: "மனிதா, பயப்படாதே! நீ என் இடத்திற்குப் புகல்தேடி வந்திருக்கிறாய், நான் உனக்கு அடைக்கலம் அளிக்கிறேன். நீ இரவு முழுவதும் இங்கு இளைப்பாறி, பொழுது விடிந்ததும் உன் இருப்பிடத்திற்குப் போய்ச்சேர்".

அரசகுமாரன் அகம் மகிழ்ந்தான். அவன் பசியைப் போக்க காய்கனிகளைக் கொடுத்து உதவியது கரடி. இதையெல்லாம் பார்த்துப் பொருமிக் கொண்டிருந்தது கீழே இருந்த புலி.

களைப்பு மிகுதியால், அரசகுமாரனுக்குத் தூக்கம் கண்ணை உறுத்தியது. கரடி அவனைப் பார்த்து "நீ என் மடியில் படுத்து உறங்கு நீ களைப்பாறியதும் நான் உன் மடியில் படுத்து உறங்குகிறேன்..." என்றது.

அப்படியே அரசகுமாரன் கரடி மடியில் படுத்தான். உறங்கி விட்டான். புலி கரடியை நோக்கிச் சொல்லிற்று.

"கரடி அண்ணே! இந்த மனிதனை எதற்காகச் சுமந்து கொண்டிருக்கிறீங்கள்? நன்றி கெட்டது இந்த மனித இனம். இன்று பகல் முழுவதும் நம்போன்ற காட்டு மிருகங்களைக் கொன்று குவித்திருக்கிறான் இவன். நாளை உங்களையும் கொல்லத் தயங்கமாட்டான். இவனைக் கீழே தள்ளிவிடுங்கள், நான் இன்று முழுவதும் பட்டினி. உங்கள் புண்ணியத்தில் என் பசியைப் போக்கிக் கொள்கிறேன். தயவு செய்யுங்கள் கரடியாரே!"

கரடி பதிலே சொல்லவில்லை. புலி பலமுறை வேண்டிக் கொண்டது. "என்னைத் தஞ்சமென அடைந்தவனுக்குத் துரோகம் செய்ய மாட்டேன். இந்த மனிதனைக்காப்பது என் கடமை" என்று சொல்லிவிட்டது கரடி.

சிறிது நேரத்திற்கெல்லாம் மனிதன் உறக்கம் கலைந்து எழுந்தான். கரடிக்குத் தூக்கம் வந்தது. முந்திய ஏற்பாட்டின்படி, கரடி மனிதனின் மடியில் தலைவைத்துப் படுத்தது. சிறிது நேரத்திற்கெல்லாம் உறங்கி விட்டது. அப்போது கீழேயிருந்து புலியின் குரல் கேட்டது.

"வாலிபரே! நீங்கள் பகுத்தறிவு படைத்தவர். வருமுன் காப்பதுதான் பகுத்தறிவுக்கு அடையாளம். இந்தக் கரடியை நம்பி வீணுக்கு உயிரைப் பலி கொடுக்காதீர்கள். நாளை காலையில் இந்தக் கரடி உங்களைக் கொன்றுவிடப் போகிறது. அதற்கு முன்பே நீங்கள் இதை ஒழித்துவிட்டால்... கீழே தள்ளிவிடுங்கள் கரடியை. நான் கொன்று தின்று விடுகிறேன். நீங்கள் நாளை காலையில் ஆபத்தில்லாமல் வீடு போய்ச் சேரலாம்".

மனிதனின் சுயநல சிந்தனை கிளர்ந்தது. புலியின் வஞ்சகப் பேச்சு மேலும் ஊக்கமளித்தது. விரைவிலே-யே முடிவுக்கு வந்தான் அரசகுமாரன். உறங்கிக்கொண்டிருந்த கரடியைச் சட்டென்று கீழே தள்ளிவிட்டான். ஆனால் மனிதனின் முயற்சி பலிக்கவில்லை. கீழே தள்ளப்பட்ட கரடி, சட்டென்று கீழ்க்கிளையை இறுகப் பற்றிக்கொண்டு விட்டது. உடனேயே மேலே ஏறி வந்தது. அரசகுமாரன் நடுநடுங்கிப் போனான். அவமானத்தால் அவன் உடல் குன்றியது. கரடி ஏளனமாகச் சொல்லியது.

"பயப்படாதே மனிதா! நீ இந்த நிலையிலும் என் விருந்தாளி, என்னைத் தஞ்சமடைந்தவன், செய்நன்றி கொன்றார்க்கு உய்வில்லை எனும் நன்னெறி வாக்கை. உணர்ந்தவன் நீ. படிப்போ பகுத்தறிவோ இல்லாத காட்டுமிருகம் நான். நீ செய்த துரோகத்திற்கு தெய்வம் உனக்குத் தண்டனை கொடுக்கும். நான் உன்னை ஏதும் செய்யமாட்டேன் பயப்படாதே!"

மறுநாள் நிம்மதி குலைந்து அரண்மனைக்குத் திரும்பினான் அரசகுமாரன்.



# ஏஞ்சலினாவின் புகைப்படம்!

**ஹொ**லிவுட் வட்டாரத்தில், ஏஞ்சலினா ஜோலிக்கென, தனி மரியாதை உள்ளது. தான், சம்பாதிக்கும் பணத்தின் கணிசமான பகுதியை, உலகின் பல பகுதிகளிலும் உள்ள, அகதிகளின் மறு வாழ்வுக்காக, தாண்மாக அளித்து விடுவார். மனிதாபிமான செயல்களுக்கு, முதலில் உதவிக் கரம் நீட்டுவது, ஏஞ்சலினாவாகத்தான் இருக்கும்.

இவருக்கு, தற்போது, 37 வயதாகிறது. ஆனாலும், ஹொலிவுட்டில், இன்னும் பிசியான நடிகையாகவே, வலம் வருகிறார். இந்நிலையில், 12 ஆண்டுகளுக்கு முன், மேலாடை அணியாமல், ஏஞ்சலினா குதிரையுடன் கொஞ்சி விளையாடுவது போல் எடுக்கப்பட்ட புகைப்படம், தற்போது, பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த படம், ஏஞ்சலினாவுக்கு 25 வயதாக இருக்கும்போது. எடுக்கப்பட்டது. இதனால், அந்தப் படத்தில், தற்போது உள்ளதை விட, அழகாகவும், இளமையாக்வும் காணப்படுகிறார். டேவிட் லாச்செப்பல் என்ற புகைப்படக்காரர் எடுத்த, இந்த புகைப்படத்தை, விரைவில் ஏலம் விட திட்டமிட்டுள்ளனர். இந்த அரிய (?) புகைப்படம், 50 இலட்சம் ரூபாய்க்கு ஏலம் போகும் என எதிர்பார்க்கப்படுகிறது.



# வடபகுதியில் தெங்கு அபிவிருத்தி

# திறைசேரியூடாக நிதி ஒதுக்கீடு

## வரணியில் தெங்கு அபிவிருத்தி அமைச்சர் உரை



(யாழ்ப்பாணம்)

வடபகுதியின் அபிவிருத்தியை மேம் படுத்தும் பொருட்டு செயற்றிட்டங்களை வகுத்து அதற்கான நிதியினை திறை சேரியூடாக பல்வேறு இடர்பாடுகளுக்கு மத்தியில் பெற்று, அவற்றை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் சிறப் பாக முன்னெடுத்து வருகின்றார் என தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சர் ஜகத் புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

தென்மராட்சி வரணிப் பகுதியில் தென்னை உற்பத்திக் கிராம சங்கங்க ளுக்கான கொடுப்பனவுகளை (கப்றுக புறவர) கடந்த 4ஆம் திகதி வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தென்னை உற்பத்தி கிராம சங்கங்களி னூடாகவும், பிரதேச செயலகங்களின் ஊடாகவும் சங்கங்கள் அமைக்கப்பட்டு இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின் றது. நாடளாவிய ரீதியில் 3 ஆயிரத்திற் கும் மேற்பட்ட சங்கங்கள் அமைக் கப் பட்டுள்ளதுடன், சாவகச்சேரி மற்றும் பருத்தித்துறை பிரதேச செயலகங்களில் 62 சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ள அதே வேளை, குறித்த சங்கங்கள் ஊடாக பிரதிநிதிகளை உடனடியாக நியமித்து அதனூடாக தென்னை சார்ந்த உச்ச பயன்பாடுகளை பெறுவதற்கான நடவ டிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளது டன், இதற்காக ஒவ்வொரு சங்கங்களுக் கும் 14 இலட்சம் ரூபாவை வழங்கவுள் ளோம்.

தென்னைகளிலிருந்து பெறப்படும் கழிவுப் பொருட்களினூடான உற்பத்தி களை மேம்படுத்தும் பொருட்டு துறை சார்ந்தோருக்கு பயிற்சிகளை வழங் கவும் அதனூடாக அவர்களது பொருளா தாரத்தை மேம்படுத்தவும் நாம் செயற் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம். அதன்பிரகாரம் 2016ஆம் ஆண்டளவில் நாடளாவிய ரீதியில் 15 இலட்சம் தென் னக்கன்றுகளை நாட்டும் அதேவேளை, 2010ஆம் ஆண்டு 2 இலட்சத்து 310 தென் னக்கன்றுகளும், 2012ஆம் ஆண்டு 12 இலட்சத்து 50 ஆயிரம் தென்னக்கன்றுக ளும் ஏற்கனவே நடுகை செய்யப்பட்டுள் ளன.

ஜனாதிபதி மகிந்த ராஜபகஷ இத்திட்டத்திற்காக மானிய திட்டங்களை அறிமுகப்படுத்தி அதனை நடைமுறைப்ப டுத்தும் வகையில் 4,200 ரூபா பெறுமதி யான உரத்தை மானிய அடிப்படையில் 1,200 ரூபாவாக தென்னை பயிர்ச்செய்கை யாளர்களுக்கு வழங்கவுள்ளோம். அத்து டன் 5 ஏக்கர் காணியை வைத்திருப்போ ருக்கு நாம் இலவசமாக தென்னக்கன்று களை வழங்கவும் திட்டமிட்டுள்ள அதே வேளை, தென்னந்தோட்டத்தில் தென் னையை மட்டும் நடுகை செய்யாது ஊடு பயிர்ச்செய்கையை மேற்கொள்வது தொடர்பாகவும் அறிவுரைகளை வழங்க வுள்ளோம் என்றார். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமை யில் நடை பெற்ற இந்நிகழ்வில், தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் நிஹால் சோமவீர, தெங்கு அபிவிருத்திச் சபைத் தலைவர் சரத்கீர்த்திரட்ன, ஆகி யோர் உரைநிகழ்த்தினர்.

# ஆலய திருப்பணிவேலைகள் நடைபெற நடவடிக்கை தேவை



(வரணி)

தம்பான் வரணி வடக்கு கும்பிட்டான் புலம் கற்பகவிநாயகர் ஆலயமானது பல நூற்றாண்டுகால பழமையும், புதுமையும் வாய்ந்த ஆலயமாகும். இவ் ஆலயத்தில் மூன்றுகாலப் பூஜைகள் தினமும் உரிய நேரத்தில் நடைபெறுவது வழமையாகும். அதனைவிட 10 தினங்கள் மகோற்சவமும் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கதா கும்.

இவ் ஆலயமானது பல நூற்றாண்டு களிற்கு முன்பு சுண்ணாம்புக் கற்களால் கட்டப்பட்ட கட்டடமாக உள்ளதால் ஆலய மடப்பள்ளி, களஞ்சியம், வாகனசாலை என்பன பழுதடைந்து உடைந்துவிழும் நிலையில் உள்ளன. எனவே சம்பந்தப் பட்ட தரப்பினர் கவனமெடுத்து இவ் ஆலயத்தின் திருப்பணிவேலைகள் நடை பெற ஒத்துளைப்பு நல்கவேண்டுமென இப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றன. (130)

# வீதியில் அதிகரித்தவேகம் கட்டுப்படுத்த நடவடிக்கை தேவை

"A9" வீதி காப்பெற் வீதியாக மாறிய பின்பு தினமும் வாகன விபத்துக்கள் இடம்பெறுவது வழமையாக உள்ளது. வீதியில் பயணிக்கும் வாகனங்களின் அதிகரித்த வேகம் காரணமாகவே விபத் துக்கள் இடம்பெறுகின்றன. வாகனங் கள் செலுத்தும்போது தொலைபேசியில் உரையாடிக்கொண்டு இருப்பதனையும் காணமுடிகின்றது.

அண்மையில் பளைப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் இருந்து மல்லாவி நோக்கிச் சென்ற தனியார் பேருந்து டிப் பர் வாகனத்தை முந்திச் செல்ல முட்பட்ட வேளை மோதுண்டு பலத்த தேசம் அடைந்ததும், பரந்தன் உமையாள் புரத் தில் டிப்பர் வாகனமொன்று பாலத்துடன் மோதுண்டு பலத்த சேதமடைந்ததும் குறிப்பிடத்தக்கவையாகும்.

எனவே அதிகரித்த வேகத்தில் வாக னங்களைச் செலுத்துவதனால் உயிர், உட மைகள் பாதிக்கப்படுவதுடன் பொதுச் சொத்துக்களிற்கும் சேதம் ஏற்படு கின்றது. வாகனங்களின் வேகக்கட்டுப் பாடு குறியீடுகள், முழுமையாக ஓமந் தையில் இருந்து யாழ்ப்பாணம் வரை காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

எனவே வேகக்கட்டுப்பாட்டுக் குறியீடு களைப் பொருத்தி அதனை மீறும் வாகன சாரதிகளிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத் தால் விபத்துக்களையும், உயிர் இழப்புக்களையும், பொதுச்சொத்துக்க ளிற்கு சேதம் ஏற்படுவதையும் ஓரளவே னும் குறைக்கமுடியுமென பொதுமக்கள் கருத்துத்தெரிவிக்கின்றனர். (130)

# குருநகர் கரையோரப்பகுதி மக்கள் இடிதாங்கி பொருத்தக்கோரிக்கை

குருநகர் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் அண் மைக்காலமாக இடி மின்னலுடன் மழைபெய்து வருகின்றது. இதன் போது ஏற்படும் இடி மின்னல் தாக்கத்தில் இருந்து பொதுமக்களின் உயிர், உடமை இழப்புக்களைத் தவிர்க்கு முகமாக பொதுமக்கள் குடியிருப்புக்கள் அமைத்துள்ள பகு திகளில் இடி தாங்கிகள் பொருத்தப்பட வேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டுள்ளது.

அண்மையில் யாழ்.பிரதேச செயலகத்திற்கு பின்புறமாக வுள்ள குருசே வீதியில் இடி மின்னல் தாக்கி அப்பகுதியில் உள்ள வீடு ஒன்றின் மின் உபகரணங்கள் சேதமடைந்ததுடன் தென்னை மரமொன்றும் தீப்பற்றி எரிந்துள்ளது.

அத்துடன் யாழ்.குருநகர் தண்ணீர்தாக்கிக்கு அருகே உள்ள வீதியில் வீடு ஒன்றின் மீது இடி மின்னல் தாக்கியதில் வயோ திபப் பெண் ஒருவர் அதிர்ச்சிக்குள்ளாகியதாகவும் தெரியவரு கின்றது. இவ்வாறு காலநிலை சீர்கேட்டினால் ஏற்படும் இடி மின்னல் தாக்கங்களில் இருந்து பொதுமக்களைப் பாதுகாக்க உயர்ந்த கட்டடங்களிலும், பொருத்தமான பகுதிகளிலும் இடிதாங்கிகளைப் பொருத்தி பொதுமக்களை இடி மின்னல் தாக்கங்களில் இருந்து பாதுகாத்துக்கொள்ளும் முகமாக சம்பந்தப்பட்ட தரப்பிடம் இந்தக் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

குருநகர் ஐந்து மாடிக்குடியிருப்புப்பகுதி முகத்துவாரப்ப குதி, மற்றும் மக்கள் குடியிருப்புகளில் உள்ள உயர்ந்த கட்டடங்களில் இவ்வாறு இடி தாங்கிகளைப்பொருத்துமாறும் மேலும் கோரப்பட்டுள்ளது. தற்சமயம் குருநகர் பிரதான தண்ணீர்த்தாங்கி மற்றும் கத்தோலிக்க தேவாலயங்களில் இடி தாங்கிகிள் பொருத்தப்பட்டிருப்பது தெரிந்ததே. (பா)



ஈ.சிற்றி ஆங்கிலக் கல்லூரியின் பட்டமளிப்பு விழா யாழ்.ஞானம்ஸ் விருந்தினர் விடுதியில் நடைபெற்ற போது பிரதமவிருந்தினராக கலந்து கொண்ட பேராசிரியர் இரா.சிவச்சந்திரனையும், பட்டம் பெற்ற மாணவர்களையும் காணலாம்.

# சமய விழுமியங்களினூடாகவே பிள்ளைகளை நல்வழிப்படுத்த முடியும்

– இரா. செல்வவடிவேல்

(யாழ். நிருபர்)

பெற்றோர் தமது பிள்ளைகளுக்குச் சமய விழுமியங்களைக் கற்றுக்கொடுக்க முன்வர வேண்டும். சமய விழுமியங்களைக் கைக்கொள்ளத் தவறியமையே இன்றைய இளைய தலைமுறையினர் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குக் காரணமாகும் என சைவசமய அபிவிருத்திக் கழக தலைவர் இரா. செல்வவடிவேல் தெரிவித்தார்.

வண்ண - சாந்தையர்மடம் ஸ்ரீகற்பகவிநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகம் நடத்திய திருநாவுக்கரசு நாயனார் குருபூசையும், திருமுறை மனனப் போட்டி பரிசளிப்பு விழாவுக்கும் தலைமை வகித்து உரை நிழ்த்தியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கடந்த சனிக்கிழமை மேற்படி ஆலய மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து பேசுகையில்,

பெற்றோர் தமது பிள்ளைகளைச் சமய விழுமியங்களுக்குள் கொண்டுவர வேண்டும். இன்று பெரும்பாலான சைவப்பிள்ளைகளின் நெற்றியில் திருநீறுகிடையாது. திருநீறு அணிவதற்காவது உங்கள் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுங்கள். வீண்விவாதங்களில் நேரத்தைச் செலவிடாது அக்கபூர்வமான விடயங்களில் சிந்தித்துச் செயற்படுங்கள். பிள்ளைகளின் கல்வியில் கவனம் செலுத்துங்கள்.

பெரும்பாலான பெற்றோர் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையோடு தமது கடமை முடிந்துவிட்டதென நினைக்கிறார்கள். பிள்ளைகளின் உயர் கல்வியில் பெற்றோர் கூடிய கவனம் எடுக்கவேண்டும். உயர்நிலைக்கு வரவேண்டுமானால் பெற்றோரின் செயற்பாடுகளில் மாற்றம் எற்படவேண்டும். ஒவ்வொரு பெற்றோரும் தனது பிள்ளை கல்வியில் உயர்நிலை பெறவேண்டும் என்ற குறிக்கோளுடன் செயற்படவேண்டும்.

எண்பத்தொரு வருடங்கள் மண்ணுலகில் வாழ்ந்து சரியை நெறிநின்று மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்று கூறி வாழ்ந்து காட்டிய நாவுக்கரசரின் வழிகாட்டல் இன்று மிகவும் அவசியமாகிறது என்றார். (10)

# கிளிநொச்சி கணேசபுரத்தில் முன்பள்ளி கட்டடம் திறப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி கணேசபுரத்தில் புதிய முன்பள்ளி கட்டடம் கடந்த சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. சிறுவர் அபிவிருத்தி பெண்கள் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த, வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து கொண்டு கட்டடத்தினை திறந்து வைத்தார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச, ஈ.பி.டி.பி யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டார்கள். ஹேமாஸ நிறுவனத்தின் ரூபா 12 மில்லியன் நிதி உதவியில் இம்மாதிரி முன்பள்ளி கட்டடம் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது..

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சத்தியசீலன், கிளிநொச்சி மாவட்ட இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா, ஹேமாஸ் நிறுவனத்தின் முகாமையாளர் சிரோமி மற்றும் பிரதேச செயலர்கள், பொலிஸ் அதிகாரிகள், முன்பள்ளி ஆசிரியர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# வலுவிழந்தோருக்கான கொடுப்பனவு; தென்மராட்சியில் பயனாளிகள் தெரிவு

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் வலுவிழந்தோருக்கான மாதாந்தக் கொடுப்பனவை பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பித்தவர்களில் 16 பயனாளிகளுக்கான கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இவர்களுக்கு கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் 3ஆயிரம் ரூபா வீதம் இம்மாதக் கொடுப்பனவுடன் நிலுவையும் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே பின்வரும் பயனாளிகளை தென்மராட்சி பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவினருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பயனாளிகளின் பெயர் விபரம் வருமாறு, ஐயாத்துரை இராமமூர்த்தி வரணி வடக்கு, பரமேஸ்வரன் புவனேஸ்வரி உசன், தர்மசீலன் செந்திலகுமார் கல்வயல், கௌரீசன் சுதர்சனி கற்குளி, இராஜரத்தினம் விஜயராசா மட்டுவில் வடக்கு, சிவக்கொழுந்து ரவீந்திரன் கைதடி மேற்கு, கணபதிப்பிள்ளை தெய்வேந்திரன் கந்தையா ஞானகுமார் கெற்பேலி மேற்கு , சிதம்பரப்பிள்ளை செல்வராசா வரணி இயற்றாளை, முருகன் அருமைச்சந்திரன் வரணி வடக்கு, சின்னதம்பி இராசையா மந்துவில் மேற்கு, ரங்கராசன் கவிசங்கர், நாகமுத்து இராஜேஸ்வரன் கல்வயல், கே.மகாதேவன் மந்துவில் மேற்கு, சந்திரரேசு சுவாமி அருளானந்தம் மட்டுவில் வடக்கு, கந்தையா விக்னேஸ்வரன் இடைக்குறிச்சி. (11)



கைதடி சரஸ்வதி சனசமூகநிலையத்தின் 57ஆவது ஆண்டுவிழாவின் போது நிலையத்தலைவர் சி.சங்கர் உரையாற்றுவதையும், க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவி ஒருவருக்கு ஊவா மாகண பிரதிக்கல்விப் பணிப்பாளர் சி.மதியழகன் பரிசில் வழங்குவதையும், கலை நிகழ்வையும் காணலாம். (21)

# பதிவிருக்கப் பெட்டகம்

பேசி
அழவைக்க
மிச்சமிருக்கிறது
கொஞ்சம் கவிதைகளும்
கழுதங்களும்.
**– ரவி சுப்பிரமணியன்**

நதியில் புதிய வெள்ளப்பெருக்கு
நாணல் நடனம் என்ன ஆனது?
**– தேனரசன்**

காக்கைகள் கொத்த
எருமை நிற்கிறது இணங்கி
உண்ணிகள் காரணம்
**– ராஜ சுந்தரராஜன்**

வசந்தம் தவறியபோதும்
வண்ணத்துப்பூச்சிகளின் வாழ்க்கையில்
வன்கொலைச் சாவுக்கு இடமில்லை.
**– விக்ரமாதித்யன்**

பூமி
இது தண்ணீரின் கல்லறை
கடல்
அது பூமியின் சமாதி
**– அறிவுமதி**

எந்தக் குறிப்பிட்ட திசையையும்
பின்பற்றாது
வண்ணத்துப் பூச்சிகள்
வாழ்க்கை நடத்துகின்றன
**– ஆத்மாநாம்**

தென்னை ஆடுகையில்
தேங்காய்க்குள்ளே
சிற்றலை நெளியுமோ?
**– சந்திரலேகா**

பால் குடிக்க வேண்டுமென்றால்
முன்னங்கால்கள் மடக்கி
முட்டி போட்டு
பணிவுடன் பதுங்கினால்தான்
மடியெட்டும்
என்பதாய் இருக்கிறதிந்த வாழ்வு.
**– இலக்குமிகுமாரன் ஞானதிரவியம்**

'பசி' என்று
வானம் அழுதது
...மழை!
'பொறு' என்று
பூமி சிரித்தது
...பயிர்!
**– தாமரை**

ஜாக்கிரதையாய் போய்வா
எங்கும் ஆட்கள் நெரிசல்
உன்னைத் தள்ளி உன் மேல்
நடக்கப் போகிறார் பார்த்துக்கொள்.
**– ஞானக்கூத்தன்**

பழத்தின் அழகைப்
பாராட்டுகிறார்
உள்ளிருந்து குடையும்
வண்டின் குடைச்சலை
யாரறிவார்? **– அபி**

கந்தையானாலும்
கசக்கிக் கட்டுவது சரி
காயும் வரை
எதைக் கட்டுவது?
**– பொன் ரவீந்திரன்**

பிணவறைக் காப்பாளருக்கு
பொன் முட்டைகளைப் பரிசளிக்கும்
சிறப்பு விருந்தாளியான
நடிகையின் சில்லிட்ட சதை
**– மாலதி மைத்ரி**

காரிருள் நேரம்
க்காலையோ தூரம்
கண்ணீர் பாரம்
நெஞ்சிலே
**– கம்பதாசன்**

நிலவை மழித்தான் தேவ நாவிதன்
சிகையாய் முகில்கள் வானில் விரிந்தன
**– பிரமிள்**

நேரங் கழித்துக்
குளிக்கின்றன
மரத்தடியில் சிந்திய
மலர்கள்
மழை பெய்கையில்.
**– கலாப்ரியா**

மாடியில் உறங்குகையில்
நட்சத்திரம் எண்ணும் காசாளன்
தோட்டத்தில் ஆடு மாடுகளைப்
பிரம்பால் அடிக்கும் ஆசிரியன்
தினந்தோறும் காலத்தை
ஓட்டும் ஓட்டுனர்
பக்கத்து வீட்டுப் பெண்ணின்
காவல்காரன்
எதிர்வீட்டுக்குத் தபால்காரன்
எப்படிச் சொல்லமுடியும் அவனை
வேலையில்லாப் பட்டதாரி என்று?
**– ஜெயந்தி**

எல்லா இடத்திலும்
பொய் சொல்ல
வேண்டியிருக்கிறது
கண்ணாடியில்
சிரிக்கும்பொழுதும் கூட.
**– சல்மா**

வாயார உண்டோர்
வாழ்த்துவதும்
நொந்த பேர் வைவதுவும்
எங்கள் உலகம்
**– தாயுமானவர்**

கயிற்றின் நுனியில்
இழுபடும் கால்களுக்குத்
திசையை நிர்ணயிக்கச்
சுதந்திரம் ஏது?
**– தேவிபாரதி**

கூண்டுக் கிளிகள்
காதலால் வந்த
குஞ்சுக் கிளிக்கு
எப்படி எதற்கு
வந்தன சிறகுகள்?
**– கல்யாண்ஜி**

மகா ஞானி ஒருவர்
மண்டியிட்டு என் முன்னமர்ந்து
உபதேசம் கேட்டார்
நேற்று என் கனவில்.
புளகாங்கிதமடைந்து
மறுநாள் முழுவதும்
பூரித்து வந்தது
என் மண்டை,
ஒரு பிச்சைக்காரனிடம்
சில்லறை திருடிவிட்டு
இன்னொரு கனவில் நான்
பிடிபட்டு விழிக்கும் வரை.
**– எஸ்.வைத்தீஸ்வரன்**

உள்ளதிலேயே
சிறந்த புகைப்படத்தைத்தான்
பெண் வீட்டுக்கு அனுப்பினேன்
வந்ததிலேயே
சிறந்த புகைப்படத்தைத்
தேர்வு செய்திருப்பார்கள்போல
பதில் இல்லை!
**– பா.ராஜாராம்**

# கிளி/ எடிசன் கல்லூரியும் -தினமுரசு பத்திரிகையும் இணைந்து நடாத்தும் வருடமொரு கல்விச் செயலமர்வு -2013



G.C.E.(A/L)

அளவையியலும் விஞ்ஞானமுறையும்

நேரம்: 2 மணி

## பகுதி 1

01) "இடைமாறு" தொடர்பினை வெளிப்படுத்தி நிற்கும் கூற்று எது?

1) A யின் தந்தை B : B யின் தந்தை C
2) A யின் எதிரி B : B யின் எதிரி C
3) A யின் நண்பன் B : B யின் நண்பன் C
4) A யிலும் B பெரிது : B யிலும் C பெரிது
5) A யின் சகேதரன் B : B யின் சகோதரி C

02) விஞ்ஞானம் தொடர்பான பிழையான கூற்றைத் தெரிவு செய்க.

1) சோதனையின் மூலம் பொய்ப்பிக்கப்படக்கூடிய அறிவாகும்.
2) பௌதிக அதீத அறிவாகும்.
3) விஞ்ஞானிகள் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் செயற்பாடாகும்.
4) விஞ்ஞான முறைகளைப் பின்பற்றி உருவாக்கப்படும் அறிவாகும்.
5) 15 ஆம் நூற்றாண்டு தொடக்கத்தில் இருந்து ஐரோப்பாவில் துரிதமாக வளர்ச்சி அடைந்த அறிவின் பகுதியாகும்.

03) "அழகியல்" என்பது

1) விடய விஞ்ஞானம்
2) விபரிப்பு விஞ்ஞானம்
3) விடயி விஞ்ஞானம்
4) சமூக விஞ்ஞானம்
5) இயற்கை விஞ்ஞானம்

04) வாய்ப்புப் பார்த்தல் அல்லது பொய்ப்பித்தலை விஞ்ஞானத்தின் முறையாகக் கொள்வதற்கு காள் பெப்பரிற்கு இருந்த ஒரு காரணம்

1) வாய்ப்புப் பார்த்தலுக்கு அவதானம் தேவை.
2) அளவையியல் ரீதியில் வலிதான வாதத்தினை முறையியல் அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்.
3) விஞ்ஞான அறிவு பொய்யேயன்றி ஒருபோதும் உண்மையானதல்ல.
4) வாய்ப்புப் பார்த்தலுக்கு பல பரிசேதனைகள் தேவை.
5) தர்க்க ரீதியான உண்மைகள் விஞ்ஞான ரீதியானவை அல்லாதிருப்பதனால்.

05) "அவன் வழுக்கல் தலை உடையவனாகவும் அதேநேரம் வழுக்கல் தலை அற்றவனாகவும் இருக்க முடியாது" எனும் கூற்று உண்மையாவதுடன் தொடர்புபடுவது

1) ஒருமை விதி
2) எதிர்மறை விதி
3) புரணாமை விதி
4) இரட்டை மறுப்பு விதி
5) போதிய நியாய விதி

06) "உலகம் நீரினால் ஆனது" எனக் கூறியவர்

1) தேலிஸ்
2) அனெக்சி மாந்தர்
3) அனக்சிமினஸ்
4) டேக்காட்
5) ஹெரக்கிளைட்டஸ்

07) பௌதிக விஞ்ஞானத்திற்குள்ளும் சமூக விஞ்ஞானத்திற்குள்ளும் ஒருங்கே உள்ளடக்கும் துறை.

1) உளவியல்
2) மானிடவியல்
3) புவியியல்
4) இரசாயனவியல்
5) வெப்பவியல்

08) பின்வருவனவற்றுள் எது நற்சூத்திரம் அல்லாதது

1) $N(NP \rightarrow Q)$
2) $[PV\ QVR]$
3) $(P \rightarrow Q \rightarrow R)$
4) $(P \wedge N\ Q)$
5) $\{P \rightarrow [Q \leftrightarrow R\ (-) \rightarrow 5)]\}$

09) "கைவினைவாத மரபும் புலமைவாத மரபும் ஒன்றிணைவதன் அவசியத்தை" ஒரு தீர்க்கதர்சியைப் போல வலியுறுத்தியவர்.

1) டேவிட் ஹியூம்
2) லைபினிஸ்ற்
3) விக்கன்ஸ்ரைன்
4) பிரான்சிஸ் பேக்கன்
5) டேக்காட்

10) $N(NP \rightarrow Q)$ எனும் வாக்கியத்திற்கு தர்க்க ரீதியாக சமனான வாக்கியமாக அமைவது

1) $(P \leftrightarrow Q)$ 2) $(NPnNQ)$ 3) $(NPVN6)$
4) $N\ (P \rightarrow NQ)$ 5) $[(PnQ) \rightarrow NQ]$

11) "கருவியின்" அவசியமாக அமையாதது

1) அளவிலுக்கு
2) பரிசோதனைக்கு
3) அவதானத்திற்கு
4) தனியாள் ஆய்விற்கு
5) அகழ்வாய்விற்கு

12) எல்லா மாணவர்களும் புத்திசாலி எனின் ஒவ்வொரு மாணவரும் புத்திசாலி என்பது

1) முறையான மறுமாற்றம்
2) முறையற்ற நேர்மாற்றம்
3) முறையற்ற எதிர்வைக்கை
4) முறையற்ற மறுமாற்ற நேர்மாற்றம்
5) முறையற்ற மறுமாற்ற எதிர்வைக்கை.

13) விற்தராசிற்கு அடிப்படையாக அமைவது

1) சார்ள்சின் விதி
2) ஹீக்ஸின் விதி
3) கலிலியோவின் விதி
4) உலோகம் விரிவடைவது
5) புவியீர்ப்புக் கோட்பாடு

14) விஞ்ஞானத்தில் தொடர்புவாதம் எனும் கருத்தை முன்வைத்த விஞ்ஞான முறையியலாளர் பெயர்

1) கான்பொப்பர்
2) தோமஸ்கூன்
3) லக்காதோஸ்
4) கான்ஹெம்பல்
5) பெயிராபென்ட்

15) "இருமதிப்பு அளவையியலில் மாறிகள் நான்கினைக் கொண்ட உண்மை அட்டவணையின் பெறுமதிகளின் எண்ணிக்கை


1) 2 2) 4
3) 8 4) 16 5) 32

16) எழுவாயும் பயனிலையும் முறையே வியாப்த்தி அல்லாமலும் வியாப்த்தியாகவும் இருக்கும் வரிசை ஒழுங்கானது

1) நிறை விதி எடுப்பு 2) நிறை மறை எடுப்பு
3) குறை விதி எடுப்பு 4) குறைமறை எடுப்பு
5) தனி விதி எடுப்பு

17) பொயிலின் விதி -
1) தனி நேர்வாகும்.
2) கொள்கையாகும்.
3) அனுபவ பொதுமையாக்களும் ஆகும்.
4) புள்ளிவிபரவியல் பொதுமையாக்கம் ஆகும்.
5) வெப்பநிலை மாற்றமடையும்போது பொருந்துவதில்லை.

18) பின்வருவனவற்றுள் சமூக விஞ்ஞானங்கள் எவ்வகை சோதனையை அதிகமாக பயன்படுத்திக்கொள்ளும்.
1) அவதானம்
2) பரிசோதனை
3) தீர்ப்புசோதனை
4) கட்டுப்பாட்டு குளுமுறை
5) தனியாள் ஆய்வுமுறை

19) 


என்ற வெண்வரைபடத்திலிருந்து பின்வருவனவற்றில் எது வலிதான முடிவு எனக்கூறுக.
1) A = w  2) xy ∉ A  3) y ∉ B
4) B = ⊙  5) A ∉ O

20) நீள்வட்ட வடிவிலான பாதை எந்தக் கோளிலிருந்து முதலில் கண்டு பிடிக்கப்பட்டது.
1) செவ்வாய்  2) புதன்  3) வியாழன்
4) வெள்ளி  5) சந்திரன்

21) "நாகமும், புடையனும் ஆபத்தானது ஆகவே நாகமெல்லாம் புடையனாகும்" எனும் வாதத்தில் இடம்பெறும் போலி
1) நாற்பதப் போலி
2) இருகூற்றுப் போலி
3) பெரும்பதசட்டவிரோதப் போலி
4) சிறுபதசட்டவிரோதப் போலி
5) மத்தியபதப் போலி

22) நியூட்டனின் புவியீர்ப்புக் கோட்பாடு விளக்குவது
1) எரிநட்சத்திரக்கல்லினை
2) பொயிலின் விதியினை
3) சூரியமையக்கோட்பாட்டினை
4) கெப்ளரின் விதிகளை
5) வியாழக்கிரகத்தின் சந்திரன்களை


23) பின்வரும் கூற்றுக்களில் "சரியானது" எது
1) நேர்ப் பெறுகையில் மட்டுமே துணைப்பெறுகை பயன்படுத்தப்படும்.
2) நிபந்தனைப் பெறுகையில்தான் எடுகோள் முன்வைக்கப்படுகிறது.
3) நேர்ப்பெறுகையில் மட்டும்தான் எடுகோள் பயன்படுத்தப்படுகிறது.
4) சரிவு நிபந்தனை வாக்கியமாக இருக்கும்போது மட்டுமே நிபந்தனைப் பெறுகை பயன்படுத்தப்படுகிறது.
5) துணைப் பெறுகை நிறைவு பெற்றவுடன் பிரதான பெறுகை நிறைவு பெற்றுவிடும்.

24) 13 வரையான இரட்டை எண்களின் இடையமாக அமைவது
1) ஓர் ஒற்றை இலக்கம்
2) 6
3) முழுமையின் அரைவாசி
4) ஓர் இரட்டை இலக்கம்
5) 8

25) "பெண்களைத் தவிர வேறெவரும் தாய்மை உடையார் அல்லர்" என்ற எடுப்பின் சரியான எடுப்பு வடிவம்
1) பெண்கள் மட்டுமே தாய்மை உடையவர்
2) தாய்மை உடையவர் மட்டுமே பெண்கள் ஆவர்.
3) பெண்கள் எல்லோரும் தாய்மை உடையவர் ஆவர்.
4) தாய்மை உடையவர் எல்லோரும் பெண்கள் ஆவர்.
5) சில பெண்கள் தாய்மை உடையவர்.


26) சேர்தல் விதி, மறுத்து விதித்தல் விதிகள் இரண்டும் பின்வருவனவற்றில் எவ்வாக்கியத்திற்கு பொருத்தப்பாடுடையது
1) உட்கிடை
2) இணைப்பு
3) உறழ்வு
4) இரட்டை உட்கிடை
5) மறுப்பு

27) பின்வரும் படலத்தின் வெளியீட்டைச் சரியாகக் குறிப்பிடும் சூத்திரம் எது?



1) [(P n Q) V N (PVQ)]  2) [ (PAQ) V (PVQ)]
3) [N(P n Q) V (PVQ)]  4) (PnQ) V N (PVR)
5) [(P → Q) V N(P→ NQ)]

28) (NPVN Q) என்பதன் உண்மை விருட்சம்
1) NP
2) 


3) NP
Q
4) P
NQ
5) 



29) புறவயத் தன்மை என்பதன் மூலம் கருதுவது
1) புறஉலகில் மட்டும் இருக்கின்ற ஒன்றாகும்.
2) அனைவராலும் ஏற்கக்கூடியது.
3) பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்படுவது
4) நூறுவீதம் துல்லியமானது
5) சோதிக்கப்படக்கூடியது.

30) பால்வெளியிலிருந்து ஏனைய அசைகின்ற நட்சத்திரக் கூட்டத்தினைக் கண்டுபிடித்தவர்.
1) சேர்ஹெட்மண்ட் ஹெலி
2) எட்வின் அபல்
3) ஜோர்ஜ்கெமவ்
4) சேர் பிரட்ஹொயில்
5) சிறிஸ்டியன் ஹெப்ளர்


31) நியூட்டன் தனது முதலாவது விதியினால் வெளிப்படுத்துவது
1) வலு என்பதன் அர்த்தத்தினை எடுத்துக்காட்டுவது
2) உட்கிடையாக்கத்தின் அர்த்தத்தினை எடுத்துக்காட்டுவது
3) வலுவின் விசாலத்தன்மையினை நிர்ணயம் செய்வதற்கான முறை ஒன்றினை எடுத்துக்காட்டுவது.
4) நிலையான அசைவு நேர்கோடொன்றின் நிலையான வேகத்தில் நிகழ்கின்றது என்பதனைக் காட்டியமை.
5) ஈர்பின் திணிவினை நிலையான திணிவிலிருந்து வேறுபடுத்துவதாகும்.

32) பின்வருவனவற்றுள் எது மூடிய உண்மை விருட்சமுறைக்கு அமைவாக உள்ளது?
1) (P n Q) P  : NQ
2) (PV Q) Q  : NP
3) (NP→Q) NQ: P
4) (NP →Q) (QVR) NP : R
5) (P →Q) (QnR) : (PnR)

33) பின்வரும் தர்ப்படலைகளுள் எது (P → Q) எனும் வெளிப்பாட்டினைக் கொண்டுள்ளது.
1) 

2) 

3) 

4) 

5) 

34) சமூக விஞ்ஞானத்தில் நேரடியாக பயன்படுத்த முடியாத நவீன தொழில்நுட்பம் எது?

1) DNA தொழில்நுட்பம்
2) கணனித் தொழில்நுட்பம்
3) தகவல் தொழில்நுட்பம்
4) விண்வெளி ஆய்வுத் தொழில்நுட்பம்
5) கதிரியக்கத் தொழில்நுட்பம்

35) லாவோசியரின் தகனம் பற்றிய பிராணவாயுக் கோட்பாட்டினைப் போன்று வோல்டன் அணுக்கோட்பாடு பின்வருவனவற்றுள் எதில் கவனம் செலுத்தப்பட்டதால் பெறப்பட்டது.

1) அணுக்கள்
2) வெப்பம்
3) இரசாயனத் தொகுதி
4) நிறை
5) புலொஜிஸ்டன்

36) "மாணவர் மட்டுமே புத்திசாலி" என்பதைக் குறித்து நிற்கும் சரியான குறியீட்டு வாக்கியம்

1) $A\dot{B} = \odot$
2) $AB = \odot$
3) $AB \neq \odot$
4) $A\dot{B} \neq \odot$
5) $\dot{A}B = \odot$

37) இந்திய அளவையியலில் பரார்த்த அனுமானத்தில் காணக்கூடிய அனுமானப் படிமுறைகள் மொத்தம் எத்தனை?

1) 2    2) 3
3) 5    4) 6    5) 7

38) சமூக விஞ்ஞான ஆய்வில் வினாக்கொத்து முறை

1) ஒரு பரிசோதனையாகும்.
2) நேர்முக விசாரணை முறை சாத்தியமில்லாத நிலையில் மட்டுமே பயன்படுத்தப்படல் வேண்டும்.
3) மாதிரியினைப் பயன்படுத்துவதில்லை.
4) பரந்தளவிலான விடையப் பரப்பிலிருந்து தரவுகளைத் திரட்டிக்கொள்ளப் பயன்படும்.
5) தொலைபேசியினூடாக செயற்படுவதில்லை.

39) எந்த ஒரு காகமும் நான்கு காலுடைய விலங்கு அல்ல என்பதன் சரியான குறியீட்டாக்கம்

1) $\wedge x\ fx \rightarrow Gx$
2) $\wedge x\ Fx \rightarrow x\ Gx$
3) $Vx\ (Fx\ n\ Gx)$
4) $\wedge x\ (F\ x\ n\ Gx)$
5) $Fx \rightarrow NGx$

40) உன்பொருள் தனியனாக்கத்தில் புதிய மாறி பயன்படுத்தப்படவேண்டுமாயின் $Vx\ (Fy \wedge Hx)$ என்பதற்கு பின்வருவனவற்றுள் எது பொருத்தமானது

1) $(Fa \wedge Hx)$
2) $(Fy \wedge HB)$
3) $(Fx \wedge Hy)$
4) $Fy \wedge Hq)$
5) $(Fa \wedge Ha)$

41) முற்கூற்று நியாயத்தொடையில் சிறுமதப் போலி நிகழ்வதற்கு

1) முடிவு விதி எடுப்பாக இருப்பது அவசியம்
2) முடிவு மறை எடுப்பாக இருப்பது அவசியம்
3) முடிவு குறை எடுப்பாக இருப்பது அவசியம்
4) முடிவு நிறை எடுப்பாக இருப்பது அவசியம்
5) முடிவு நிறை, குறை எடுப்பாக இருப்பது அவசியம்

42) கீழ்வரும் விஞ்ஞானிகளில் பரிணாமவாதக் கோட்பாட்டுடன் நேரடியாக தொடர்பு இல்லாதவர் யார்?

1) சாா்ஸ் டார்வின்
2) எஸ்மஸ்டார்வின்
3) லாமார்க்
4) தோமஸ் ஹக்ஸ்லி
5) லீனியஸ்

43) சமயம் மற்றும் ஒழுக்கவியலிற்கு ஒரே நேரத்தில் பிரச்சினையினை ஏற்படுத்தாத தொழில்நுட்ப செயற்பாடு

1) குளோனிங்
2) பிறப்புரிமை தொழில்நுட்ப
3) சூரிய சக்தியைப் பயன்படுத்திக் கொள்ளல்
4) சுகமரணம்
5) சந்திரனை வெற்றி கொள்ளல்

44) நவீன மெய்யியலின் தந்தை யார்?

1) டேவிட் கியூம்
2) ஜோன்லொக்
3) டேக்காட்
4) ஸ்பினோசா
5) விக்கன்ஸ்ரைன்

45) "பிரபஞ்ச தோற்றத்திற்கு அடிப்படைக் காரணம் காற்று" எனக் கூறிய மெய்யியலாளர்

1) தோல்ஸ்
2) அனெக்சி மாந்தர்
3) அனெக்சி மினஸ்
4) ஹெரக்கிளைட்டஸ்
5) டேக்காட்

46) விஞ்ஞானத்தின் தாய் விஞ்ஞானம் என அழைக்கப்படுவது

1) மெய்யியல்    2) சமூகவியல்
3) பௌதிக விஞ்ஞானம்    4) ஒழுக்கவியல்
5) அழகியல்

47) அனுபவ முதல்வாத சிந்தனையாளர்களில் ஒருவராக கருதக்கூடியவர்

1) டோக்காட்
2) லைபினிஸ்ற்
3) ஸ்பினோரா
4) ஜோன்லொக்
5) அரிஸ்ரோட்டில்

48) அறிவுமுதல்வாத சிந்தனையாளர்களில் ஒருவராக கருதக்கூடியவர்

1) டோக்காட்
2) ஜோன்லொக்
3) டேவிட்ஹியூம்
4) பாக்லி
5) விக்கன்ஸ்ரைன்

49) "பிரமச்சாரிகள் திருமணமாகாதவர் அல்லர்" என்பது

1) பகுப்பெடுப்பு
2) தொகுப்பெடுப்பு
3) கூறியது கூறல் எடுப்பு
4) முரண்பாட்டெடுப்பு
5) குறைமறை எடுப்பு

50) "சென். ஜோண்ஸ் சிறந்த கல்லூரி" என்பது நாற்பிரிவுத் திட்டத்தில்

1) நிறைவிதி    2) நிறை மறை
3) குறை விதி    4) குறை மறை
5) தனி விதி


# நாடாளுமன்றத்தில் தொடரும் அமளி
# இரு அவைகளும் நேற்று ஒத்திவைப்பு

(புதுடில்லி)

பிரதமர், அமைச்சர்கள் பதவி விலக கோரி நாடாளுமன்றத்தில் நேற்று கடும் அமளிதுமளி ஏற்பட்டது. இதனால் இருசபைகளும் ஒத்தி வைக்கப்பட்டன.

ரயில்வே, நிலக்கரி ஊழல் தொடர்பாக மத்திய மந்திரிகள் அஸ்வினிகுமார், பன்சால் இருவரும் பதவி விலகுவார்கள் என்று எதிர் பார்க்கப்பட்டது. ஆனால் அவர்கள் பதவி விலக மாட்டார்கள் என்று காங்கிரஸ் கட்சி அறிவித்தது.

நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நேற்று இந்த விவகாரம் எதிரொலித்தது. நாடாளுமன்ற மக்களவை 11 மணிக்கு கூடியதும் நிலக்கரி ஊழலுக்குப் பொறுப்பேற்று பிரதமரும், அமைச்சர் அஸ்வினிகுமாரும் பதவி விலக



வேண்டும் என்று பா.ஜ.க. எம்.பி.க்கள் கோஷம் எழுப்பினார்கள்.

இதேவேளை சமாஜ்வாதி கட்சி எம்.பி.க்கள், ரயில்வேயில் நடந்த முறைகேடுக்கு பொறுப்பு ஏற்று பன்சால் பதவி விலக வேண்டும் என்று கூச்சலிட்டனர். இதனால் மக்களவையில் கடும் குழப்பமும், அமளியும் காணப்பட்டது.

வழக்கமாக கூச்சல், குழப்பம் கட்டுப்படுத்த முடியாதபடி இருந்தால் சபையை சபாநாயகர் மீராகுமார் ஒத்தி வைத்து விடுவார். ஆனால் நேற்று அவர் சபையை ஒத்திவைக்கவில்லை.

கடும் கூச்சல் குழப்பத்துக்கிடையே அவர் தொடர்ந்து சபையை நடத்தினார். ஆனால் அது நீடிக்கவில்லை. பா.ஜ.க. எம்.பி.க்களின் கடுமையான அமளியால் மக்களவை ஸ்தம்பித்தது.

சபாநாயகர் மீராகுமார் பல தடவை கோரிக்கை விடுத் தும் எதிர்க்கட்சிகள் சமரசம் ஆகவில்லை. இதையடுத்து பிற்பகல் 2 மணி வரை அவர் சபையை ஒத்திவைத்தார்.

அதுபோல மேல்சபையிலும் அமைச்சர் பதவி விலக கோரி எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டன. முதலில் 12 மணி வரை மேல்சபை ஒத்தி வைக்கப்பட்டது. அதன்பிறகும் மேல்சபையில் அமளி ஏற்பட்டதால் பிற்பகல் 2 மணி வரை மேல் சபையை ஒத்தி வைப்பதாக துணை ஜனாதிபதி ஹமீத் அன்சாரி அறிவித்தார்.

# 8 பேரைக் கொன்ற கரடி

ஒடிசாமாநிலம் கோராபுட் கிராமத்தில் உள்ளது. தவரங்காபூர் கிராம வனப்பகுதியை ஒட்டியுள்ள இந்தக் கிராமத்தில் காட்டுக்கரடி புகுந்தது. கிராம மக்களின் தோட்டத்துக்குள் புகுந்த அந்தக் கரடி பயிரகளை சேதப்படுத்தியது. அத்தோடு நிற்காமல் கிராம மக்களை தாக்கி கொன்று தனது பசியை தீர்த்துக் கொண்டது.

கரடி தாக்கியதில் 8 பேர் பலியானார்கள். இவர்களில் 2 பேர் பெண்கள். மேலும் 10 பேரை கடித்து காயப்படுத்தியது. ஆட்களை அடித்துக் கொன்ற கரடி பிணத்தை இழுத்துச் சென்று அதே இடத்தில் பொதுமக்கள் முன்னிலையிலேயே கடித்து குதறிதின்றது பொதுமக்களை ஆவேசமடையசெய்தது.

இதனால் மக்கள் கும்பலாக திரண்டு கொலை வெறி பிடித்த கரடியை வேட்டையாடி கொன்றனர்.




## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ....................................

முகவரி : ....................................

பிறந்த ஆண்டு : ....................................


கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

....................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# தமிழறிவு வினாவிடைப்போட்டி
## சுப்பர் ஓவர் சாத்தியமா?



2013ஆம் ஆண்டுக்கான தமிழ்த் தினப் போட்டிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்த ஆண்டு மாவட்ட மட்டத்திலான தமிழ்த்தினப் போட்டியை வடமராட்சி வலயம், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் சிறப்பாக நடத்தி முடித்துள்ளது. போட்டிகள் ஒழுங்கு செய்யப்பட்ட முறையில் இருந்து அதன் முடிவுகள் அறிவிக்கப்பபடும் வரையில் சிறப்புற ஒழுங்கமைப்பு செய்யப்பட்டிருந்தது. போட்டி முடிவுக்ள் தொடா்பிலான ஆட்சேபனைகள் எழுத்து மூலம் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களிடம் இருந்து பெறப்பட்டு அதற்கான பதில்களும் உடனடியாகவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் வழங்கப்பட்டன.

அதேவேளை வெற்றி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்களும் போட்டி முடிவு அறிவிக்கப்பட்ட உடன் அதிகாரிகளால் வழங்கப்பட்டிருந்தன.

இத்தனை சிறப்புக்களோடு நடைபெற்ற போட்டிகளில் ஒருசில தவறுகள் நிகழ வாய்ப்புக்கள் ஏற்படாமல் இல்லை. அதற்காகவே ஒரு கருமபீடம் இயங்கியுள்ளது. இக்கரும் பீடம் தொடர்பில் ஆசிரியர்களுக்கு முன்னரே அறிவிக்கப்பட்டிருந்தது. இவற்றைக் கருத்தில் கொள்ளாது சில ஆசிரியர்கள் சிறப்புற நடை பெற்ற இந்த போட்டிகள் தொடர்பிலும் கருத்துக்களை வெளிப்படுத்துவதை அவதானிக்க முடிகின்றது.

தமிழ்த் தினப் போட்டிகளில் தமிழ் அறிவு வினா விடை தொடர்பாக வருடந்தோறும் போட்டிகளில் கலந்து கொள்வோர் இடையேயும், போட்டிகளை நடத்து வோர் இடையேயும் குழப்பங்கள் நிகழ்வதுண்டு. இந்த ஆண்டு தமிழ்த்தினப் போட்டிகளில் தமிழறிவு வினாவிடை நிகழ்ச்சியில் தவறுகள், குழப்பங்கள் ஏற்பட்டிருப்பதாக அறிய வருகின்றது.

மூன்று சுற்றுக்களாக நடைபெறும் தமிழறிவு வினாவிடை போட்டியில் ஒரு அணியில் ஐந்து மாணவர் வீதம் பத்து மாணவர்கள் பங்கு கொள்வார்கள். மூன்று சுற்றுக்களும் போட்டிகளில் கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளித்தமையை கொண்டு புள்ளிகள் வழங்கப்படும். ஒரு அணியில் உள்ள மாணவரை வினாகேட்கும் போது அந்த மாணவர் விடை அளித்தால் 10 புள்ளிகள் வழங்கப்படும். அந்த மாணவர் விடை அளிக்காத சந்தர்ப்பத்தில் அதே அணியில் ஏனைய மாணவர் விடை அளித்தால் ஐந்து புள்ளிகள் வழங்கப்படும். அந்த அணி விடை அளிக்க தவறும் சந்தர்ப்பத்தில் மாற்று அணிக்கு விடை அளிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டு மாற்று அணி விடை அளித்தால் 05 புள்ளிகள் அந்த அணிக்கு வழங்கப்படும்.

இரு அணிகளும் இவ்வாறு வினாக்களுக்கு விடை அளித்து சமமான புள்ளிகளை மூன்று சுற்றின் இறுதியில் பெற்றிருந்தால் என்ன செய்ய வேண்டும் போட்டியின் முடிவை எவ்வாறு தீர்மானிக்க வேண்டும் என்பது தொடர்பில் சுற்றறிக்கைகளில் எந்த விதமான குறிப்புக்களும் காணப்படவில்லை.

இத்தகைய ஒரு நிலையில் தமிழ்த் தின தமிழறிவு வினாவிடை நிகழ்வினை நடத்தும் நடுவர்கள் போட்டி ஏற்பாட்டாளர்களின் முடிவை ஏற்றுக்கொள்ள வேண்டியது போட்டிகளில் கலந்து கொள்ள வந்தவர் கடமை ஆகின்றது. தமிழ் அறிவுப் போட்டிகளில் மாணவர்களை தயார்ப்படுத்திய ஆசிரியர்கள் சமநிலையில் முடிவுகள் வந்தால் என்ன செய்வது என்று போட்டியின் முன்பே போட்டி நடத்துபவர்களிடம் கேட்டு அறிந்திருத்தல் வேண்டும்.

போட்டி நடத்துபவர்கள் இன்றைய சூழ்நிலையில் பிரபல்யம் பெற்றிருக்கும் இருபதுக்கு இருபது கிரிக்கெற் போட்டி முடிவுகளில் சமநிலைப் போட்டிகளுக்கு வழங்கப்படும் 'சுப்பர் ஓவர்' முறையைப் பயன்படுத்தி 'சுப்பர் வினா' ஒன்றினை இரு அணியினருக்கும் தனித்தனியே கேட்டு அந்த வினாக்களுக்கு வழங்கப்பட்ட விடையை அடிப்படையாகக் கொண்டு போட்டியை முடிவுக்கு கொண்டு வந்திருந்தார்கள்.

போட்டியில் வென்ற அணி இந்த நடைமுறை தொடர்பில் தனது ஆட்சேபனைகளை தெரிவிக்கவில்லை. போட்டியில் தோற்ற அணி போட்டியின் முடிவில் தனது ஆட்சேபனைகளை அதிகாரிகளுக்கு தெரியப்படுத்த இருந்தது இவ் அணி போட்டியில் வெற்றி பெற்று இருந்தால் தமது ஆட்சேபனையை தெரிவித்து போட்டி முடிவில் மாற்றத்தை ஏற்படுத்துமாறு கேட்டிருப்பார்களா என்றால் இல்லை என்பதே விடையாக அமையும். ஒவ்வொரு போட்டியாளர்களும், போட்டிக்கு அழைத்து வருபவர்களும் தமக்கு வெற்றி கிடைக்க வேண்டும் என்பதை விரும்புகின்றார்கள். வெற்றி கிடைத்ததும வெற்றிக்களிப்பில் மிதக்கின்றார்கள் தோல்வி பெறும் சந்தர்ப்பத்தில் போட்டி விதிமுறைகளை குறை கூறுகின்றார்கள் அல்லது நடுவுநிலைமையில் சந்தேகம் கொள்கின்றார்கள்.

போட்டிக்கு அழைத்து வரும் ஆசிரியர்கள் மாணவர்களை போட்டியில் பங்குபற்ற வைத்துவிட்டு போட்டி முடிவுகளின் பின்ரே இப்படி செய்திருக்கலாம் இப்படிச்செய்தது தவறு என விவாதிக்கின்றார்கள்.

தமிழறிவு வினாவிடைப் போட்டியில் சுப்பர்வினாவை எவ்வாறு கேட்கலாம் என்பது தொடர்பிலும் ஒரு அணியில் மேலும் ஐந்து வினாக்கள் வீதம் பத்து வினாக்களை இரண்டு அணிகளிலும் கேட்டு முடிவை தீர்மானித்து இருக்கலாம் என்றும் விவாதிக்கின்றார்கள்.

இத்ததைய நிலையிலும் சமநிலை என்றால் மீண்டும் ஐந்து வினாக்களை கேட்பதா என்ற நிலை உருவாகும்.

தமிழ் அறிவு வினாவிடைப் போட்டியில் அதிஷ்டமும் கைகொடுக்க வேண்டிய ஒரு சந்தர்ப்பம் இந்த நிலையில் ஏற்படுவதனை உணர வேண்டும். அதற்காக தமிழறிவு அதிஷ்ட வினாவிடைப் பேர்ட்டியாகப் போட்டியின் தலைப்பை மாற்ற வேண்டும் என்றும் கேட்கின்றார்கள். போட்டிகளில் அதிஷ்டமும் கைகொடுக்க வேண்டும் என்பதை தெரிந்து கொள்ளவேண்டும்.

இறுதியாக பேர்ட்டிகளின் முடிவில் ஆட்சேபனை முறைப்பாடுகளை தெரிவித்து அதற்கான பதிலையும் பெற்றுக் கொண்ட பின்னர் அப்பகுதி தொடர்பில் விமர்சனங்களை செய்வது உகந்த முறையன்று. பதில்களை வைத்துக் கொண்டு மேன்முறையீடுகளை செய்து கொள்வது உகந்த முடிவாகும். போட்டிகளில் நடுவர்களாக கலந்து கொண்டவர்கள் போட்டிகளை அமைப்பாளர்களின் வேண்டுகோளுக்கு நடத்தி தருவதற்காகவே அழைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் உணர வேண்டும் அவர்களை குறை கூறுவதில் பயன் எதுவும் ஏற்பட்டுவிட மாட்டாது என்பதையும் புரிதல் வேண்டும்.

(பூஞ்சிட்டு)

# பங்களாதேஷில் மத அவமதிப்புச் சட்ட விவகாரம்

# போராட்டத்தில் பலியானோர் பத்தாக உயர்வு





மத அவமதிப்பு சட்ட விவகாரத்தால் பங்களாதேஷில் ஏற்பட்ட கலவரத்தில் பலியானோர் எண்ணிக்கை 10ஆக உயர்ந்துள்ளது.

பங்களாதேஷில் மதச்சார்பின்மை சட்டம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. ஆனால், அங்கு பெரும்பான்மையாக முஸ்லிம்கள் வாழ்வதால் ஷரியத் சட்டம் கொண்டு வரவேண்டும். மதத்தை அவதிக்கும் நாத்திகர்களைத் தூக்கில் போட வேண்டும். அதற்கு வகை செய்யும் மதஅவமதிப்பு சட்டம் கொண்டுவரவேண்டும் என ஹிபாஷத்-இ-இஸ்லாம் அமைப்பினர் வலியுறுத்தி வருகின்றனர்.

ஆனால், பங்களாதேஷ் மதசார்பற்ற ஜனநாயக நாடு. தற்போது இருக்கும் சட்டமே போதுமானது என பிரதமர் ஷேக் ஹசீனா தெரிவித்துவிட்டார். இதைத் தொடர்ந்து, மதஅவமதிப்புச்சட்டம் கொண்டு வர வலியுறுத்தி தலைநகர் டாக்காவில் மிகப்பெரிய போராட்டம் நடத்தப் போவதாக ஹபாஷத்-இ- இஸ்லாம் அமைப்பினர் தெரிவித்தனர்.

அதன்படி, நாடு முழுவதும் இருந்து பஸ், கார், லொரி போன்ற 3 ஆயிரம் வாகனங்களில் சுமார் 5 இலட்சம் பேர் டாக்காவில் குவிந்தனர். ஏராளமானவர்கள் ரயில்களிலும் வந்தனர். அவர்கள் டாக்கா நகரை முற்றுகையிட்டு முக்கியமான 6 வீதிகளையும் அடைத்தனர். டாக்காவை நாட்டின் மற்ற பகுதிகளில் இருந்து தடை செய்தனர். பின்னர் வன்முறையில் ஈடுபட்டனர்.

அதைத்தடுத்த பொலிஸார் மீது கல் வீசித் தாக்கினர். எனவே கூட்டத்தினரை கலைக்க பொலிஸார் தடியடி நடத்தியும், கண்ணீர்ப்புகைக் குண்டுகளையும் வீசினர்.

இதனால் கலவரம் வெடித்தது. கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்கு தீ வைக்கப்பட்டது. பொலிஸ் வாகனங்கள் மற்றும் வீதியில் சென்ற வாகனங்கள் தீ வைத்து கொளுத்தப்பட்டன.

கலைவரம் கட்டுப்பாடை மீறியதால் அதை அடக்க பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள். இச்சம்பவத்தில் 6 பேர் சம்பவ இடத்திலேயே பலியானார்கள். 60 பேர் காயம் அடைந்தனர். நேற்று பலியானோர் எண்ணிக்கை 10-ஆக உயர்ந்தது. ரப்பர் குண்டு தாக்கியதில் பெரும்பாலானவர்கள் காயம் அடைந்தாகக் கூறப்படுகிறது. இவர்களில் பலரது நிலைமை கவலக்கிடமாக உள்ளது. எனவே, இக்கலரத்தில் பலியானோர் எண்ணிக்கை மேலும உயரும் அபாயம் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## பிள்ளையார் வடிவில் லண்டனில் கத்தரிக்காய்

(லண்டன்)

பிரிட்டனில், பிள்ளையார் உருவில் கிடைத்த கத்தரிக்காயை, பக்தர்கள் வணங்கி வருகின்றனர். பிரிட்டனின், லீசெஸ்டர் பகுதியைச்சேர்ந்தவர் பிரபுல விஸ்ராம், (வயது 61) அப்பகுதியில், உணவு தயாரித்து கொடுக்கும் பணியை செய்து வருகிறார்.

கடந்த வாரம் இவர், பெட்டியில் அடைக்கப்பட்ட கத்தரிக்காய்களை வாங்கினார். அதில் ஒரு கத்தரிக்காய், பிள்ளையார் வடிவில் இருந்ததைக் கண்டு, விஸ்ராம் ஆச்சரியப்பட்டார். அந்தக் கத்தரிக்காயை சமைக்காமல், மனைவி ரேகாவிடம் கொடுத்து, பூஜை அறையில் வைக்கச் சொன்னார். தற்போது, இந்தக் கத்தரிக்காய்க்குத் தினமும் பூஜை செய்யப்படுகிறது. இதைக்கேள்விப்பட்ட இந்துக்கள், இவர் வீட்டு பூஜை அறையில் வைக்கப்பட்டுள்ள கத்தரிக்காய்ப் பிள்ளையாரை வழிபட்டுச் செல்கின்றனர்.

உலகச் செய்திகள்

## கடாபி கால அதிகாரிகளை பதவி நீக்க லிபியாவில் புதிய சட்டம்

லிபிய நாட்டில் பதவி நீக்கம் செய்யப்பட்ட சர்வாதிகாரி முயாம்மர் கடாபியின் ஆட்சிக் காலத்தில், பதவியில் இருந்த அதிகாரிகள் அனைவரையும் பதவி நீக்கம் செய்யும் வண்ணம் ஒரு புதிய மசோதா, ஞாயிறு அன்று அவர்களது நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. மொத்தம் 200 உறுப்பினர்களில் 169 பேர் இத்தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர். இந்த வாக்கெடுப்பில், பங்கு பெறாதவர்களில் குறிப்பிடத்தக்கவர் நாடாளுமன்றக் கட்சித் தலைவர் முகமது அல் மெகாரிப் ஆவார். புதிய சட்டத்தின படி, இவரும் பதவிநீக்கம் செய்யப்படும் அரசியல் தலைவர்களில் ஒருவர் ஆவார். பிரதமர் அலி சிடானும், கடாபி காலத்தில் பதவியில் இருந்ததால், அவரும் பதவி நீக்கம் செய்யப்படுபவர்களில் ஒருவர் ஆகின்றார்.

அரசியல் தனிமைப்படுத்தும் சட்டம் என்ற இந்த மசோதா, லிபிய நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே, நீண்ட மாதங்களாக விவாதத்தில் இருந்து வந்தது. கடாபியின் புரட்சிப்படையில் இருந்த அதிகாரிகள், அரசியல் அமைப்புச் சட்டங்களில் தலையிட்டுள்ளதாகவும், அவர்களின் தலையீட்டினால் சட்டங்கள் தெளிவில்லாமல் அமைந்துள்ளதாகவும், அவர்களின் தலையீடு அறவே நீக்கப்படவேண்டும் என்பதற்காகவும் இத்தகைய ஒரு புதிய சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

புதிய சட்டதிருத்தம் குறித்த சுற்றறிக்கைகளுக்கு இன்னும் இறுதிவடிவம் கொடுக்கப்படவில்லை. கடந்த 40 வருடங்களாக நடைபெற்ற கடாபியின் ஆட்சியை 2011 ஆம் ஆண்டு நீக்க, துணைபுரிந்திருந்தாலும் அவர்



ஆட்சிக்காலத்தில் பதவியில் இருந்த அனைத்து அதிகாரிகளையும் நீக்கும் வகையிலேயே புதிய சட்டம் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## 56 ஆண்டுகள் தொடர் ஆட்சியுடன் மலேசியாவில் தேசிய முன்னணி வெற்றி



மலேசியவில் நடைபெற்ற தேர்தலில் தேசிய முன்னணி வெற்றி பெற்றது. 222 உறுப்பினர்களைக் கொண்ட மலேசியா நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது.

13ஆவது நாடாளுமன்றத்திற்காக பிரதமரை தேர்ந்தெடுக்க 5 மணிவரை நடந்த இந்தத் தேர்தலில் 80 சதவீத வாக்குகள் பதிவாயின. இதில் ஆளும் தேசிய முன்னனியும், எதிர்க் கட்சியான மக்கள் கூட்டணியும் போட்டியிட்டன.


உடனே தேர்தலின் முடிவுகள் அறிவிக்கப்பட்டன. அதில் பிரதமர் நஜிப்ரசாக் தலைமையிலான ஆளும் தேசிய முன்னணி 129 சீட்டுகள் பெற்று மிக எளிதாக வெற்றி பெற்று மீண்டும் ஆட்சியை பிடித்துள்ளது. அன்வர் இப்ராஹிமின் தலைமையிலான எதிர்க் கட்சி வெறும் 77 சீட்டுகள் பெற்று தோல்வியைத் தழுவியது.

வெற்றி பெற்றுள்ள பிரதமர் நஜிப்ரசாக், கூட்டணிக்குள் உள்ள பிரச்சினைகளை சரி செய்வேன் என்று உறுதியளித்துள்ளார். மலேசியா சுதந்திரம் அடைந்ததில் இருந்து தேசியக் கூட்டணிக் கட்சி கடந்த 56 ஆண்டுகளாக தொடர்ந்து ஆட்சி நடத்தி வருகிறது.

ஐக்கிய மலாய் தேசிய அமைப்பு தலைமையின் கிழ் உள்ள இந்த கூட்டணியில் மலேசிய சைனீஸ் சங்கம், மலேசிய இந்திய காங்கிரஸ் ஆகிய கட்சிகள் உள்ளன. மலேசியாவில் சுமார் 17 இலட்சம் தமிழர்கள் வாழ்ந்து வ்ருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கென்யாவில் தமிழ்ப் புத்தாண்டு

(மும்பாசா)



கென்யா நாட்டின் மும்பாசா நகரில், சுப்ரமணியம் என்பவரது தலைமையில், தமிழ்ச் சங்கம் செயற்படுகிறது. இந்தச் சங்கத்தின் சார்பில், கடந்த மாதம், 21ஆம் திகதி மும்பாசா நகரின் லிட்டில் தியேட்டர் அரங்கில், புத்தாண்டுக் கலை நிகழ்ச்சிகள் நடந்தன. கென்யா மற்றும் இந்திய தேசிய கீதங்கள் பாடப்பட்டன. தமிழ்த்தாய் வாழ்த்தையும், பக்திப் பாடல்களையும், சங்க உறுப்பினர்கள் பாடினர். பட்டிமன்றம், சிறுவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடந்தன. சந்தியா, ஸ்ரீநிதி உள்ளிட்டோர் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினர்.

## எகிப்து பிரதமரின் கார் மீது துப்பாக்கிச்சூடு

### ஐவர் மட்க்கிப்பிடிப்பு



எகிப்து பிரதமர் கார் மீதுதுப்பாக்கி சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் 5பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எகிப்து பிரதமர் ஹிஷாம் காண்டில். நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் தலைநகர் கெய்ரோ புறநகர் பகுதியில் காரில் சென்றார். அவ்ருடன் அதிகாரிகள் மற்றும் பாதுகாவலர்கள்ும் கார்களில் சென்றனர். ஒரு இடத்தில் பிரதமர் காண்டிலின் கார் கடந்து சென்றது. அப்போது, வீதியில் மற்றொரு வாகனத்தில் சென்றவர்கள் பிரதமர் கார் மீது துப்பாக்கியால் சுட்டனர்.


இச்சம்பவத்தில் பிரதமர் காண்டிலுக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை. இதேவேளை அந்த வாகனத்தைப் பிரதமரின் பாதுகாவலர்கள் விரட்டிச் சென்றன்ர். ஆனால், அதில் இருந்த நபர்கள் இவர்களையும் சுட்டு விட்டு தப்பி ஓட முயன்றனர். இருந்தும் அவர்களை பொலிஸார் மடக்கிப் பிடித்தனர்.

வாகனத்தில் 5 பேர் இருந்தனர். அவர்களுக்கு 18 முதல் 29 வயது இருக்கும். பின்னர் அவர்கள் 5 பேரும் கைது செய்யப்பட்டனர். பிரதமர் கார் மீது துப்பாக்கியால் சுட்டது ஏன் என்பது குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.



மங்கோலிய சுற்றுப்பயணத்தை முடித்து விட்டு, யாங்கூன் விமானநிலையம் திரும்பிய மியான்மர் எதிர்க்கட்சித் தலைவர் ஆங் சாங் சூயிக்கு ஆதரவாளர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

# வறிய மக்களுக்கு உறுதுணை சமுர்த்தித் திட்டம் மட்டுமே



காலத்திற்கு காலம் பல மக்கள் நலத்திட்டங்கள் அறிமுகப் படுத்தப்பட்ட போதும் சமுர்த்தித் திட்டம் மட்டுமே ஒரு நிரந்தர திட்டமாக நின்று நிலைத்து வறுமைப்பட்ட மக்களின் மேம்பாட்டிற்கு உறுதுணை புரிகின்றது என ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

வலி. மேற்கு பிரதேச செயலகத்தில் சமுர்த்தி புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் சமுர்த்தித் திட்டத்தின் கீழ் க.பொ.த சாதாரணதரத்தில் சித்தியெய்தி க.பொ.த உயர்தரக் கல்வியைத் தொடரும் மாணவர்களில் சமுர்த்தி உதவி பெறும் வறுமைக் கோட்டிற்குட்பட்ட மாணவர்களின் கல்விக்கான புலமைப்பரிசிலை வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் யாழ். மாவட்டத்தில் மட்டும் சுமார் 392 மாணவர்களுக்கு இப்புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன.

வறுமைக்கோட்டிற்குட்பட்ட மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகளை வழங்குதல், கல்விக்கான உதவிக் கொடுப்பனவுகளை வழங்குதல் என்று அச்செயற்பாடுகள் தொடர்கின்றன எனக் குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் இலவச கல்விக்கும் சுகாதாரத்திற்கும் அரசாங்கம் முன்னுரிமை வழங்கி வரவு செலவுத் திட்டத்தில் அதிக நிதி ஒதுக்கீடுகளையும் மேற்கொண்டு வருகின்றது.

இருப்பினும் இவ்விரு தேவைகளையும் நிவர்த்தி செய்வதற்காக இன்று மக்கள் அதிக பணத்தை செலவு செய்கின்ற யதார்த்தம் சமூகத்தில் நிலவுகின்றமை வேதனைக்குரியது எனவும் அவர் குறிப்பிட்டார்.

சங்கானை பிரதேச உதவி அரசாங்க அதிபர் சோதிநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சங்கானை பிரதேச செயலகத்திற்குட்பட்ட 30 மாணவர்களுக்கு சமுர்த்தி புலமைப் பரிசிலை நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் வழங்கினார்.

இந்நிகழ்வில் வலி.மேற்கு பிரதேச சபையின் உறுப்பினரும், ஈ.பி.டி.பியின் வலிகாமம் பிரதேச இணைப்பாளருமான சிவகுரு பாலகிருஸ்ணன் (ஜீவன்), வலி. மேற்கு பிரதேச சபை உறுப்பினர் செல்வகுமார் ஆகியோரும் மற்றும் சமுர்த்தி அதிகாரிகளும் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதியில் சமுர்த்தி உதவி பெறும குடும்பங்களைச் சேர்ந்த வறுமைக் கோட்டிற்குட்பட்ட மாணவர்களில் 2012 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரணதரத்தில் சித்தி பெற்று உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் சுமார் 31 மாணவர்களுக்கும் சமுர்த்தி புலமைப்பரிசில்களை நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் வழங்கினார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பாடசாலைகளில் 5000 பாடசாலை திட்டத்திற்கு தெரிவான 13 பாடசாலைகளின் வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்காக முதற்கட்ட நிதியை நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் வழங்கினார்.

இந்நிகழ்வில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் முரளிதரன், மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் மகேஸ்வரன், யாழ். மாவட்ட சமுர்த்தி இணைப்பாளர் ரகுநாதன், ஈ.பி.டி.பியின் வலிகாமம் பிரதேச இணைப்பாளருமான சிவகுரு பாலகிருஸ்ணன் (ஜீவன்), ஈ.பி.டி.பியின் மானிப்பாய் பிரதேச இணைப்பாளர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் (ஜீவா), சண்டிலிப்பாய் பிரதேச சமுர்த்தி முகாமையாளர் பகீரதன் ஆகியோரும் பிரதேச பாடசாலைகளின் ஆசிரியர், மாணவர்கள், பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.

# திருட்டு சந்தேகநபர் பொலிஸார் வலையில்

திருடிய நீர் இறைக்கும் மோட்டார் பம்பியினை விற்க முற்பட்ட சமயம் கையும் மெய்யுமாக ஒருவர் பிடிபட்டுள்ளார். இச்சம்பவம் நேற்று உரும்பிராய் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

அச்செழுப் பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய ஒருவரே இவ்வாறு பிடிபட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். பல நாட்களாக குறித்த இளைஞர் வீடுகளில் உள்ள மோட்டார் இயந்திரங்களை திருடி விற்பனை செய்ததாக விசாரணையில் தெரிவித்துள்ளார். மேலும் இவ்வாறான திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டு சிறைத்தண்டனை பெற்று தற்போது விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதனையடுத்து இன்றைய தினம் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாக அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர். (15)

## இந்திய...

எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, 26 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டதுடன் குறித்த வழக்கு விசாரணைகளை யாழ். மேல் நீதிமன்றிற்கு மாற்றுமாறும் உத்தரவிட்டார். (25)

## அசாத்...

எனினும் மீண்டும் நேற்றுப் பிற் பகல் 4.00 மணியளவில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## சிசுவின்...

இறந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு அங்கிருந்து யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து திடீர் மரண விசாரணை அதிகாரி பிரேம்குமார் விசாரணைகளை நடத்தியதுடன் சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனையின் பின்னர் சடலம் உரியவர்களிடம் ஒப்படைக்கப்படவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. (பா)

## சிவில்...

நாம் மோதல் நடந்த வலயங்களான வடக்கு மற்றும் கிழக்கு ஆகிய மாகாண்ணங்களுக்கு உதவுகின்றோம். ஆங்கிலம் கற்பித்தல், பெண் முயற்சியாளர்கள், இளைஞர் பரிமாற்றம் மற்றும் சுகாதாரம் போன்ற பல செயற்திட்டங்களை மேற்கொள்கின்றோம்.

எனினும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் குறிப்பிட்டதனைப் போன்று இலங்கை அரசாங்கம் ஒரு குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் மட்டுமே கவனம் செலுத்தியுள்ளதாகத் தெரிவித்துள்ளார். மனித உரிமை மீறல்கள் மற்றும் யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் சகல தரப்பினர் மீதும் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சுயாதீன பக்கச்சார்பற்ற விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். அசாத் சாலி கைது செய்யப்பட்டமை தொடர்பிலும் அவர் கருத்து வெளியிட்டுள்ளார். அசாத் சாலிக்கு தேவையான சட்ட வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டுமெனவும், நாட்டில் சட்டம், ஒழுங்கு உரிய முறையில் நிலைநாட்டப்பட வேண்டுமெனவும் சிஸன் தெரிவித்துள்ளார்.

## 'நோத்சீ'...

திரைநீக்கம் செய்து வைத்ததுடன், இயந்திர உபகரணங்களின் செயற்பாட்டையும் வைபவரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

இதன்மூலமாக இந்த வலை உற்பத்தித் தொழிற்சாலை ஏற்கனவே உற்பத்தி செய்த 60 மெற்றிக் தொன் என்ற அளவிலிருந்து 300 மெற்றிக் தொன் வலைகளை உற்பத்தி செய்துகொள்ளமுடியும்.

நோத்சீ நிறுவனத்தின் பணிப்பாளர் ஆர்.பரந்தாமன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முன்னாள் இந்தியத் தூதுவர் அசோக் கே காந்தா, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி ஆகியோர் உரையாற்றினர்.

இதனையடுத்து அதிதிகள் வலை உற்பத்தி இயந்திரங்களின் செயற்பாட்டை பார்வையிட்டனர். மேலும் இந்நிகழ்வில் யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், இந்தியத் துணைத்தூதுவர் மகாலிங்கம் மற்றும் இந்திய தூதரக அதிகாரிகள், நோத்சீ நிறுவன பணியாளர்களும் கலந்துகொண்டனர். (பா)

## முள்ளியவளை...

இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த மக்கள் சந்திப்பிற்கு முன்னதாக முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலாளர் வேதநாயகம், பிரதேச செயலர் பி.குகநாதன் ஆகியோரை அமைச்சர் சந்தித்து இந்த விடயங்கள் குறித்து நீண்ட நேரம் கலந்துரையாடினார்.

பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகளைக் காண்பதில் அரச அதிகாரிகள் மட்டத்தில் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் பற்றி இதன்போது விரிவாக ஆராயப்பட்டது. அமைச்சர் ஹக்கீம் முள்ளியவளை மக்கள் மத்தியில் உரையாற்றும் போது தெரிவிக்கையில்,

யுத்தத்தின் அகோரம் முடிந்து மீண்டும் இயல்பு வாழ்க்கைக்கு படிப்படியாகத் திரும்பிக்கொண்டிருக்கும் சூழ்நிலையில் முள்ளியவளையில் காணிப்பிரச்சினை தலைதூக்கியுள்ளது. ஏன்? எதற்காக? இதனைச் செய்தார்கள் என்பதைப் பற்றி கூறுவதைவிடுத்து இனங்களுக்கு இடையில் நிலவும் நல்லெண்ணமும் நல்லுறவும் பாதிக்கப்படாதவிதத்தில் பிரச்சினைக்குரிய தீர்வுகளைக் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த விடயத்தை மிகவும் பக்குவமாக அணுக வேண்டும். மக்களுக்கு உரிய முறையில் அறிவுறுத்தப்படாமல் மேற்கொள்ளப்பட்ட அவசர செயற்பாடுகள் நிலைமையை சிக்கலாக்கியுள்ளன. சுற்றறிக்கைகள் பற்றி சாதாரண பொதுமக்கள் தெரிந்து வைத்திருப்பதில்லை.

இப்பொழுது சிவன் பூசையில் கரடி புகுந்தது போல வன பரிபாலனத் திணைக்களம் இதில் தலையிட்டு யாருக்கும் இந்தக் காணி கிடைக்காமலேயே போய்விடக்கூடிய நிலைமையை தோற்றுவித்துள்ளதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். மனிதாபிமான அடிப்படையில் நெகிழ்வு தன்மையுடன் இப்பிரச்சினையை அணுகுமாறு வன பரிபாலனத்துக்குப் பொறுப்பான அமைச்சரை வேண்டவுள்ளேன்.

அரசியல் பிரதிநிதிகளுடனும் பேச வேண்டியுள்ளது. காணிப் பங்கீடு அரச அதிகாரிகளினாலேயே மேற்கொள்ளப்படும். அதில் நாம் சம்பந்தப்பட முடியாது. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விதந்துரைக்கேற்பவும் காணிப் படிவங்கள் வழங்கப்படுகின்றன. வேறு காணியில்லாத பாதிக்கப்பட்ட மக்களுக்கு காணி வழங்கப்பட வேண்டும் என்றார்.

முள்ளியவளை காணிப் பிரச்சினையால் பாதிக்கப்பட்ட மக்கள், அமைச்சர் ஹக்கீம் மற்றும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முத்தலிப் பாவா பாரூக் ஆகியோர் முன்னிலையில் தமது நிலைமையை எடுத்துக்கூறினார்.

## அசாத் சாலிக்கு...

எதிரான 18 குற்றச்சாட்டுக்களில் நிதி மோசடி பற்றிய குற்றச்சாட்டுத் தொடர்பிலும் சி.ஐ.டி. குற்றத்தடுப்பு புலன்விசாரணையாளர்கள் விசாரித்துவருகின்றனர்.

கைது செய்யப்பட்டுள்ள அசாத் சாலியை விடுதலை செய்யுமாறு ஜனாதிபதியிடம் கோருவது பயனற்றது.

ஒரு நாடு தொடர்பில் இன்னொரு நாட்டிற்குச் சென்று கருத்து வெளியிடுவது நியாயமான ஒன்று அல்ல முஸ்லிம்கள் நாட்டை காட்டிக் கொடுக்கும் வகையில் கருத்து வெளியிடுவர் என்று எங்கும் சொல்லப்படவில்லை.

சர்வதேச மட்டத்தில் அசாத் சாலி வெளியிட்டுள்ள அந்தக் கருத்து உள்ளிட்ட 18 முறைப்பாடுகள் தொடர்பில் குற்றத் தடுப்புப் பிரிவினர் அவரிடம் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் அசாத் சாலிக்கு எதிராக நிதி மோசடி குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டுள்ளதென வும் லக்ஷ்மன் ஹுலுகல்ல குறிப்பிட்டார்.

இதேவேளை, இலங்கையில் பொதுபலசேனா என்ற கடும்போக்கு பௌத்தவாத அமைப்பின் அண்மைக்கால நடவடிக்கைகள் தொடர்பில், அரசாங்கம் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியபோது, அந்த அமைப்பினர் அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமளவுக்கு எதனையும் செய்யவில்லை என்று லக்ஷ்மன் ஹுலுகல்ல பதிலளித்துள்ளார்.

## முஸ்லிம் மக்களை...

விசாரணை நடத்த வேண்டும் என்று தற்போது ஏற்றுக் கொண்டிருக்கிறது. அதில் கூறப்பட்டுள்ளது மனித உரிமை விடயத்திலே இருதரப்பினர்களும் சர்வதேச மனித உரிமைச் சட்டங்களுக்கெதிராக குற்றம் புரிந்துள்ளார்கள். இது விசாரிக்கப்பட வேண்டும், தண்டிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதை நாங்கள் ஆதரிக்கின்றோம். அவ்வாறான விசாரணை இருதரப்பினரையும் உட்படுத்தி இந்த விசாரணை இடம்பெற வேண்டும்.

சர்வதேச சட்டத்திலே மிகப் பாரிய குற்றமான இனப்படுகொலை இடம்பெற்றுள்ளது என்பதையும், இறுதிக்கட்ட யுத்தத்தின் போது வன்னிப் பகுதியில் வாழ்ந்த மூன்று இலட்சம் மக்களுக்கெதிராக இலங்கை அரசாங்கம் துன்புறுத்தல் செய்தது என்பதையும் சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டுள்ளது. சர்வதேச சட்டங்களுக்கு முரணாக எங்களுடைய பூர்வீக நிலம் தற்போது சுவீகரிக்கப்படுகின்றன என்பதையும் சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டுள்ளது.

அதேநேரம் எங்களுடைய தரப்பிலிருந்தும் தவறுகள் இடம் பெற்றுள்ளதை நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். எங்களுடைய மண்ணிலிருந்து இன சுத்திகரிப்பை நாங்கள் செய்திருக்கிறோம். தமிழர் தரப்பிலிருந்து இனச்சுத்திகரிப்பு செய்யப்பட்டுள்ளது.

வடக்கிலிருந்து முஸ்லிம் சகோதரர்கள் இரவோடு இரவாக வெளியேற்றப்பட்டதை எவரும் நியாயப்படுத்த முடியாது இந்த கசப்பான உண்மை. நாங்களும் இன சுத்திகரிப்பிற்குரிய குற்றவாளிகள் என்பதை ஏற்றுக்கொள்ளும் வரைக்கும் எமக்கெதிராக இடம்பெறுகின்ற அடக்குமுறைகளை சர்வதேச சமூகம் ஏற்றுக் கொள்ளாது என்று தெரிவித்தார்.

# அரசியல் நடாத்துகிறார் ஆசிரியர்
# மாணவர்கள் கல்வி நாசம்

## யார் கண்ணிலும் இது தெரியவில்லையா?

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் பிரதேச கண்ணகைபுரம் பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் கரைச்சி பிரதேச சபையில் உறுப்பினராக இருப்பதனால் பாடசாலை நாட்களில் அதிகமாக விடுமுறை எடுப்பதாகவும் இதனால் பிள்ளைகளின் கல்வி மிக மோசமாக பாதிக்கப்படுவதாகவும் பெற்றோர்களும் பாடசாலை சமூகத்தினரும் கவலை தெரிவித்துள்ளனர்.

மேற்படி பாடசாலையில் அதிபர் உள்ளிட்ட இரண்டு ஆசிரியர்கள் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் அதில ஒரு ஆசிரியராக குறித்த பிரதேச சபை உறுப்பினராக இருந்துகொண்டு மாணவர்களின் கல்வி செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் முழுநேர அரசியலல் ஈடுபுட்டு வருகின்றார் என பெற்றோர்களால் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பின்தங்கிய கிராமத்தின் பாடசாலையாகவும், வறிய மக்களையும் கொண்ட கிராமமான கண்ணகைபுரம் பல்வேறு நிலைகளில் பல தேவைகளைக் கொண்ட பிரதேசம் இது. ஏற்கெனவே ஆசிரியர் பற்றாக்குறையுடன் இயங்கி வருகிறது. இந்தநிலையில் ஆசிரியராகவுள்ள குறித்த பிரதேச சபை உறுப்பினர் மிக அதிகமான விடுமுறைகள் எடுப்பது அந்த பிரதேச மாணவர்களின் கல்விச் செயற்பாட்டினை முற்றுமுழுதாக பாதிக்கும் என பெற்றோர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

கடந்த தவணை ஒன்றில் குறித்த ஆசிரியர் இருபது நாட்களுக்கு மேல் விடுமுறை எடுத்தமையினால் மாணவர்களுக்கு உரிய முறையில் பாடவிதாணங்கள் முடிக்காமல் போனதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஒரு அரச உத்தியோகத்தர் ஒருவர் பிரதேச சபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டிருந்தால் அவருக்கு சபை அமர்வு நாடகளில் மட்டும் சம்பளத்துடனான விடுமுறை வழங்கபடுவதற்கு சட்டரீதியான அனுமதி உண்டு. ஆனால் அவர் மேலதிக விடுமுறைகளை எடுக்கமுடியாது. இருப்பினும் இந்த ஆசிரியர் தனது அரசியல் செயற்பாடுகளுக்கு மாணவர்களின் கல்வியைக் கருத்தில் எடுக்காமல் செயற்பட்டு வருகின்றார் என மாணவர்களின் பெற்றோர்களால் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே கிளிநொச்சி வலய கல்வித் திணைக்களம் இதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் பெற்றோர்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (29)

## விசேட மனித உரிமைகள் திட்டம் முன்னெடுக்க உத்தேசம்

இலங்கையில் விசேட மனித உரிமைகள் செயற்பாட்டுத் திட்டமொன்றை முன்னெடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகத்திற்கும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும் இடையிலான சந்திப்பின்போது இந்த விடயம் குறித்து கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய இவ்வருடம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் மாநாட்டை இலக்காகக் கொண்டு உத்தேச மனித உரிமைகள் செயறபாட்டுத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு எண்ணியுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் கலாநிதி பிரதீபா மஹனாமஹேவா கூறியுள்ளார்.

ஆறு மாத காலத்திற்கு இந்தத் திட்டத்தை அமுல்படுத்தவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்காக பொதுநலவாய நாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகம் கமலேஷ் ஷர்மாவின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமைகள் நிலைமை மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்தும் வகையில் இந்த செயற்பாட்டுத் திட்டத்தை அமுல்படுத்துமாறு கமலேஷ் சர்மா வேண்டுகோள் விடுத்ததாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.


## மரண அறிவித்தல்



### செல்லையா கண்ணகை

கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா கண்ணகை நேற்று திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் நாகம்மாவின் அன்புச் சகோதரியும், தவமணி, புஸ்பராணி மற்றும் சிவபாலசுப் பிரமணியம் (ஜேர்மனி), வரதராணி, காலஞ்சென்ற வரதலட்சுமி மற்றும் யோகலிங்கம் (ஜேர்மனி), தர்மகுலசிங்கம் (ரவி - கிளி நொச்சி) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சிறிஸ்கந்தராஜா, சதானந்தன், அம்பிகா (ஜேர்மனி) பூதத்தம்பி, பவானி (ஜேர்மனி), பத்மினிதேவி (கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமியாரும்,

செந்தில், தர்சிகா (ஜேர்மனி), ஜெயச்சந்திரன் (லண்டன்), கமல், மோகனவிஜிதா (லண்டன்), நிரோஸ், பிரசாந், திவ்யா (ஜேர்மனி), யுகந்தன் (பிரான்ஸ்), உசாநந்தினி, கேசவரூபினி, யோகராஜா, லாவன்யாய, தேனுஜா (ஜேர்மனி), சஜீவன், துர்க்காயினி, கனியா (கிளிநொச்சி) ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார், பானுஜா, சிந்துஜா (ஜேர்மனி), நிவேதா, சஜித் (லண்டன்), ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.05.2013) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கந்தன் காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**முகவரி :**
இலகடி, கோப்பாய் வடக்கு,
கோப்பாய்

**தகவல் :**
தர்மகுலசிங்கம்
(ரவி) மகன்

(C/2524)


# துரத்தி அடித்தது கிங்ஸ் லெவன்
# துவண்டு விழுந்தது பெங்களூர்



(மொகாலி)

மில்லரின் புயல்வேக அதிரடி சதத்தின் மூலம் பலம் வாய்ந்த பெங்களூர் றோயல்ஸ் கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியிடம் வீழ்ந்தது.

மொகாலியில் நடைபெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற கிங்ஸ்லெவன் களத் தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் களமிறங்கிய பெங்களூர் றோயல்ஸ் அணியின் ஆரம்ப வீரர்களான கெய்ல் மற்றும் புஜாரா இணை, கிங்ஸ்லெவன் பஞ்சாப் பந்துவீச்சாளர்களைப் புரட்டியெடுத்தது. அவ்வணி 11.2 ஓவரில் 102 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் இணைப்பாட்டம் பிரிக்கப்பட்டது. இதில் கெய்ல் (61) ஆட்டமிழந்தார்.

புஜாராவுடன் இணைந்த ஹோலி மந்தமாக ஆடியபோதிலும் ஐ.பி.எல். முதலாவது போட்டியில் விளையாடிய புஜாரா அரைச் சதம் (51) கடந்து அவுட்டமிழக்க. இதன்பின்னர் ஹோலி (14) அவுட்டமிழக்க, வில்லியர்ஸ் 19 பந்தில் 38, ஹென்றிஜியூஸ் 7 பந்தில் 16 ஓட்டங்கள் பெற பெங் களூர் றோயல் சலஞ்சர்ஸ் 3 விக கெட்டுக்களை இழந்து 190 ஓட் டங்களைக் குவித்தது.

பந்துவீச்சில் கோனி 2, ஆவன்னா 1 விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 191 ஓட்டங்கள் எடுததால் வெற்றி எனக்களமிறங் கிய கிங்ஸ் லெவன் பஞ்சாப் 9.5 ஓவரில் 64 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை இழந்து தத்தளித்தது. இதில் மார்ஷ் (6), மன்டீப் சிங் (16), குர்கீரட்சிங் (20), டேவிட்ஹசி (13) என விக்கெட்டுக்கள் வீழ்ந்தன.

எனினும் புயலாக மாறிய மில்லர் பெங்களூர் பந்துகளை துவமசம் செய்தார். இவருடன் இணைந்த சத்திஸ் சிறந்த ஒத்துழைப்பு வழங்க, மில்லர் பந்துகளை எல்லைக் கோட்டிற்கு வெளியே அனுப்பிக்கொண்டிருந்தார். மில்லரின் சுலபமான பிடியொன்றை ஹோலி தவறவிட்டதும் பெங்களூர் அணியின் தோல்விக்கு முக்கிய காரணம். 24 பந்துகளில் அரைச்சதம் கடந்த மில்லர் அடுத்த 14 பந்துகளில் சதம் கடந்தார்.

இறுதியில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் 4 விக்கெட்டுக்களை இழந்து 194 ஓட்டங்களை எடுத்து 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. இதில் மில்லர் 38 பந்துகளில் 7 சிக்ஸர், 8 பவுண்டரிகள அடங்கலாக 101, சத்திஸ் 18 பநதில் 27 ஓட்டங்களைப் பெறறார்.

பந்துவீச்சில் கார்த்திக் 2, வினய்குமார், ராம்பவுல் தலா 1 விக்கெட்டைக் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக மில்லர் தெரிவானார்.

## இந்திய மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

இந்திய மீனவர்கள் 30 பேரை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்னம் உத்தரவிட்டார்.

இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டின் கீழ் 30 இந்திய மீனவர்கள் கடந்த ஏப்ரல் 6 ஆம் திகதி தலைமன்னார் கடற்பரப்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் அவர்கள் மீண்டும் நேற்று மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். இதன்போது குறித்த இந்திய மீனவர்கள் அனைவரையும் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்னம் உத்தரவிட்டார்.

## இலங்கையிலிருந்து வெளியேறும் நோர்வே அகதிகள் பேரவை
### நாளையுடன் திட்டங்கள் முடிவு

நோர்வே அகதிகள் பேரவை நாளையுடன் தனது திட்டங்களை முடித்துக்கொண்டு இலங்கையிலிருந்து வெளியேறுகின்றது. இதன் காரணமாக நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து அலுவலகங்களையும் மூடுவதற்கு நோர்வே அகதிகள் பேரவை தீர்மானித்துள்ளது. இதன் சிறப்பு நிகழ்வொன்று நேற்றைய தினம் திருகோணமலை சன்சைன் ஹோட்டலில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் நோர்வே அகதிகள் பேரவையின் சர்வதேச செயலாளர் டொரின் பிரக்கே, ஆசிய தலைவர் அடம் கோம்ஸ் மறறும இலங்கைக்கான தலைவர் ஏகில் வேண்மோ ஆகியோர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# மின்கட்டண அதிகரிப்பு இரத்து தவறின் வேலைநிறுத்தம்
### ஜனாதிபதிக்கு லால்காந்த கடிதம்

உத்தேச மின் கட்டணத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள திருத்தத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே உடனடியாக மின் கட்டண அதிகரிப்பை முழு அளவில் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் இரத்துச்செய்யாவிட்டால் நாடு தழுவிய ரீதியில் போராட்டத்தை முன்னெடுப்போம் என்று தேசிய தொழிற்சங்க மத்திய நிலையத்தின் தலைவர் கே.டி.லால்காந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

இக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

ஜனாதிபதியாகிய நீங்களும் அரசாங்கமும் கடந்த ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி மிகவும் அநீதியான வகையில் மின் கட்டணத்தை அதிகரித்து மக்களுக்கு பெரும் சுமையை அளித்துள்ளீர்கள். அரசியல் கட்சிகளின் எதிர்ப்பு மற்றும் தொழிற்சங்கங்களின் போராட்டங்கள் உட்பட பொதுமக்களின் கடுமையான விமர்சனங்களுக்கும் பதிலளிக்கும் வகையில் தற்போது கட்டண உயர்வில் திருத்தத்தை உட்படுத்தி உள்ளீர்கள். ஆனால், தற்போது திருத்தத்தை விட அதிகரிக்கப்பட்ட மின் கட்டணத்தை முழு அளவில் இரத்துச் செய்யவேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும்.

அதற்கு பின்னர் மின் கட்டணம் தொடர்பில் தேசிய கொள்கையினை அமைக்க அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், சிறு மின் உற்பத்தியாளர்கள் உட்பட பல தரப்புகளையும் தொடர்புபடுத்தி உரிய வேலைத்திட்டமொன்றை அமைக்கவேண்டும். அவ்வாறு அல்லாது ஆட்சிக்கு வந்தபோது இந்த நாட்டின் உரிமையாளர் நான் இல்லையென கூறியது தற்போது தலைகீழாக மாறி அரசாங்கத்தின் நடவடிக்கை நாட்டை உரிமையாக்கிக் கொண்டுள்ளதாகவே அமைந்துள்ளது.

அமைச்சர்களின் உத்தியோக பூர்வ வீடுகளுக்கு வழங்கப்படுகின்ற மின் நிவாரணங்களை நிறுத்தவோ மின்சார சபையில் காணப்படுகின்ற மாபியாக்களை தடை செய்யாமலோ அல்லது பொதுமக்களின் நலன்களை கருத்திற்கொள்ளாது மின் உற்பத்திகளின் வீணடிப்புகளை கவனத்தில் கொள்ளாது செயற்படுகின்றமை புரியாத புதிராகவே உள்ளது.

எனவே, எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் அதிகரிக்கப்பட்ட மின் கட்டணம் இரத்துச் செய்யப்படாவிட்டால் நாடு தழுவிய ரீதியில் போராட்டங்களை முன்னெடுப்போம் என்று அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 மே 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.